கல்கி

குடும்பத்துடன் களிக்க...

KALKI
26.2.2006 ரூ.8.00
96 பக்கங்கள்



"அ.தி.மு.க. அடி வாங்கும்!"





செல்ஃபோன் காமிரா, சைபர் கிரைம், ஈ மெயில், வீடியோ கான்ஃபரன்ஸ் என தகவல் தொழில் நுட்ப மாற்றங்களை மையமாகக் கொண்டு காதல் கதையைப் பின்னியிருக்கிறார் இயக்குனர் சரண். யூத்தை மட்டுமே குறிவைத்திருப்பதால், ஒவ்வொரு காட்சியிலும் இளமை... இளமை... ஒன்லி இளமை!

உள்துறை செயலாளரான தன் அம்மா வாணி விஸ்வநாத்தை வெறுப்பேற்ற அவரது அழகான பெண் காம்னா சதித் திட்டம் போடுகிறார். தன்னையே செல்ஃபோன் கேமிராவில் ஆபாசமாகப் படமெடுத்து, பொய்யாக டி.மகேஷ் என்கிற கேட்டரிங் ஸ்டூடண்ட் சைபர் கிரைம் பண்ணுவது போல் வாணிக்கு ஈ மெயில் தட்டுகிறார். உண்மையிலேயே கேட்டரிங் படிக்கும் டி.மகேஷான ரவிக்கு இதனால் சிக்கல் ஏற்படுகிறது. மோதல் வழியே காதல் நுழைகிறது. இடையே அசிஸ்டெண்ட் கமிஷனரான பிரகாஷ் ராஜ் காம்னாவை டாவடிக்க... இதைச் சாக்காக வைத்துக் காதலர்கள் ஒருவரையொருவர் வெறுப்பேற்ற... இறுதியில் சார்பதிவாளர் அலுவலகத்தில் வந்து அவிழ்கின்றன அனைத்து முடிச்சுகளும்.

காதல் படத்திலும் துள்ளத் துடிக்க ஆக்ஷன் பண்ணியிருக்கிறார் ரவி. தமிழ் சினிமாவில் ஹாக்கி ஸ்டிக், கிரிக்கெட் மட்டை எல்லாம் வழக்கொழிந்து போய்விட்டது போல. இதில் புதிதாக ரக்பி விளையாட்டு முறையில் ஹீரோவும் முரடர்களும் மோதிக் கொள்கிறார்கள்.

அறிமுகம் என்றாலும் காம்னாவின் துள்ளலும் துறுதுறுப்பும்தான் படத்துக்கு புது வார்னிஷ் அடித்திருக்கிறது. தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் உடை விஷயத்தில் ஏகத்துக்கும் சட்டதிட்டங்கள் இருக்க, அம்மணி மட்டும் எப்போதும் காத்தோட்டமாகவே உலா வருகிறார். ஏ.சியான பிரகாஷ் ராஜ், வாணி விஸ்வநாத்துடன் ஒரு மீட்டிங்கில் இருக்கும்போது காம்னா செல்ஃபோனில் அழைத்து 'டு யூ லவ் மீ' என்று கேட்டு வற்புறுத்துவதும் அப்போது பிரகாஷ்ராஜ் பேந்த பேந்த விழிப்பதும் ஜாலிலோ ஜிம்கானா. அது சரி, சதா காதலிப்பதை விட ஏ.சிக்கு வேறு வேலையில்லையா என்ன? படத்தில் வில்லன்களும் உண்டு. ஆனால் லொள்ளு சந்தானத்தைவிடக் குறைவான முக்கியத்துவம்தான் அவர்களுக்கு.

ரவி, குஞானசம்பந்தன் உள்பட தனி மரமாக நின்று வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர், எப்படி ஒரு சந்தர்ப்பத்தில் ஒன்றிணைந்து அழகான குடும்பத்தை உருவாக்குகிறார்கள் என்பதும், அதை வாணி விஸ்வநாத் கேவலப்படுத்தும் காட்சியும் எதிர்பாராதது. சிறிது நேரம் இதயம் கனத்துப் போகிறது. இதுபோன்று துணைக் கதாபாத்திரங்கள் கதைக்கு நன்கு துணை போயிருக்கின்றன.

- லஜ்ஜாவதி

வட்ட மேஜை



✉ 1947-ல் இருந்த இந்தியா, 2006-ல் எப்படி இருக்கிறது என்று கார்டூன் மூலம் விளக்கியது ஏ ஒன்!

திருவாரூர், டி. முருகேசன்

✉ 'ஒரு வேளை நான் நடிச்சிருந்தா 'சேது' தோல்வி அடைஞ்சிருக்கலாம் இல்லையா!' என்று வெளிப்படையாகப் பேசிய கரணிடம் சரண் அடைந்து விட்டோம்.

வேலூர் - 6, வே.ந.கதிர்வேல்.

✉ 'முதல்வர் யார்?' கல்கி வழங்கியிருந்தது மூன்று பக்கத் தலையங்கம் மட்டுமல்ல... ஒட்டு மொத்த தமிழக வாக்காளர்களின் உள்மன வெளிப்பாடும் கூட! தெளிவுபடுத்தி தேர்தலைச் சந்திப்பதுதான் தி.மு.க.வுக்கு அழகு!

திருவாரூர், வாணிமகாலட்சுமி

✉ கமல், மேயரை மடக்கிய விதம் படிக்கப் படிக்க, ஆஹா!

மதுரை-16, ஆர்.லட்சுமி

✉ 'மேயரை மடக்கிய கமல்' படித்தேன். ரசித்தேன். கமல் மட்டும் இளமையல்ல; கல்கியும் தான்!

சிவகங்கை, துரை திருவாயூர் கண்ணன்

✉ வாசனுக்கு வழங்கப்பட்ட துறையைப் பற்றியும், அதன் பணிகள் பற்றியும் விளக்கமளித்த 'கல்கி'யின் பணி பாராட்டுக்குரியது.

மதுரை-1, என். பாலகிருஷ்ணன்

✉ 'கலக்குறே கிஷன்!' என்ற தலைப்பில் சிறுவன் கிஷன், சினிமாத் துறையில் கலக்குவதைப் பற்றி பாராட்டியதோடு விட்டிருக்கலாம். அதைவிடுத்து சிம்புவை வேண்டுமென்றே வம்புக்கு இழுப்பது தேவை தானா?

லால்குடி, எம்.இராஜேந்திரன்

பலே ஜோடிய்யா!





'எது பெரிது' கட்டுரையில் அமரர் கல்கி கூறியிருந்த கருத்தால், பெண் இனத்துக்குப் பெருமை!

தாராபுரம், **அபிராமி அன்புச்சோலை**

'வருகிறது அபாயம்' கட்டுரை கண்டேன். இது போன்ற அறிவியல் - சுற்றுச்சூழல் - மாசுகேடு பற்றி பத்திரிகைகள் விழிப்புணர்வு ஊட்ட வேண்டும்.

மதுரை-14, **சி.இரமேசு**

தி.மு.கவையும், அ.தி.மு.கவையும் கொம்பு சீவி, தேர்தல் களத்தில் இறக்கி விட்டிருக்கும்



சாணக்கியம் பலே!

நெல்லை, **செ.சத்தியசீலன்**

ஐந்து ஹைக் கூ கவிதைகளில் மரத்தைப்பற்றி ஒரு குறும்படமே தயாரித்துவிட்டாரே தாமரை!

ஈரோடு-2, **ரேவதிப்ரியன்**

'மருதாணி விரல்கள்' சிறுகதை தலைமுறை இடைவெளியைக் கோலமிட்டுக் காட்டியது.

நந்தம்பாக்கம், **வி.மாலினி**

'பேய்ப்பனை' கவிதையை, சிறப்பாக எழுதிய பிரேம பிரபாவுக்குப் பாராட்டு.

வயலூர், **பா.அச்சுதன்**

'எங்கே என் கண்ணன்' தொடர் விறுவிறுப்பாகச் செல்கிறது தத்துவார்த்தங்களைப் புதிய முறையில் புகுத்தியிருப்பது சுவாரசியம்!

தஞ்சாவூர், **ஜி.ராமதாஸ்**

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் பேழைக்கு

தூத்துக்குடி மெட்டல்ஸ்,
சென்னை வழங்கும்
'சூர்யா' கேஸ் ஸ்டவ்
பரிசாகப் பெறும் ஜோக் :

"நம்ம தொகுதியிலே போட்டியிடற அந்த டாக்டரை எப்படியும் ஜெயிக்க வைச்சுடணும்!"

"அவ்வளவு நல்லவரா?!"

"அதில்லீங்க! தோத்துட்டா மறுபடியும் பிராக்டிஸ் பண்ண ஆரம்பிச்சுடுவாரே!"

- எஸ். அன்புமணி,
ஈரோடு - 638 001



'டாக்டர் ஜோக்ஸ்' என்பதாலோ என்னவோ, 'அறுவை' ஜோக்ஸ்தான் அதிகம் வந்திருந்தன. கட்டுக்கட்டாக வந்து குவிந்த ஜோக்குகளில் சிறந்த ஜோக்கைத் தேர்ந்தெடுத்த ஆசிரியர் குழுவினர், கண் டாக்டரிடம் போக வேண்டியதாகிவிட்டது!



"அடடா, நூறு ரூபாய்க்கு சில்லறை இல்லையே; வேணும்னா பாக்கி அம்பது ரூபாய்க்கு இன்னொரு ஊசி போட்டுடட்டுமா?"

- அனன்யா
பெங்களூர் - 4(

"ஆபரேஷன் பண்ணினா பிழைக்க முடியுமா டாக்டர்..?"

"நான் இவ்வளவு வசதியோட வாழறதே ஆபரேஷன் பண்ணறதினாலேதான்...!"

- ஏ.எஸ்.யோகானந்தம்,
கலிங்கியம்



சின்ன ஜோக்; பெரிய பரிசு!

போட்டி முடிவு-5

''இரண்டு கண்ணும் மங்கலாத் தெரியுதுங்க டாக்டர்...''

''அதான் கண் டாக்டர் கிட்டப் போறதுக்குப் பதிலா, பல் டாக்டர்கிட்ட வந்திருக் கீங்க போல...''

- சுபமி, மதுரை - 17





''அந்த டாக்டர், கிளினிக்கில் வெங்கடாஜலபதி படம், முருகன் படம் எல்லாம் மாட்டி வெச்சுருக்கரே, எதுக்கு?''

''கொஞ்சம் கொஞ்சமா அவரு வசதி ஆயிடுவார்; நாம ஆண்டி ஆயிடுவோம்! அதைத்தான் சிம்பாலிக்கா அப்படிக் காட்டியிருக்கார்!''

- கீழை அ.கதிர்வேல்

''டாக்டர், அவசியம் எக்ஸ்ரே எடுத்துத்தான் ஆகணுமா...?''

''பின்னே? எக்ஸ்ரே மெஷினை சும்மாவே போட்டு வைச்சா... ரிப்பேர் ஆயிடாது?!''

- எம்.என்.வாசுதேவ், குடந்தை - 1



சேனல்

இது நியாயமா ஹேமா?

சென்ற நாடாளுமன்ற தேர்தலின் போது 'விஜய் டீ.வி.'யில் ஒளிபரப்பான 'மக்கள் யார் பக்கம்?' நிகழ்ச்சிக்கு திருஷ்டி படாத குறைதான். அவ்வளவு அசத்தலாக நடத்தினார் கோபிநாத். தற்போது வர இருக்கும் சட்டமன்ற தேர்தலின்போதும் கலக்க வரும் இந்த நிகழ்ச்சிக்காக ஏற்பாடுகள் சுடச்சுட நடந்து வருகின்றன.

'சன் மியூஸிக்' ஸ்டுடியோவில் தனக்கு முன் புரோக்ராம் செய்து கொண்டிருக்கும் காம்பியரரின் லிப்ஸ் டிக், ஐ லைனரைச் சமர்த்தாகப் பயன்படுத்திக் கொள்வாராம் ஹேமா சின்ஹா. இதை நிகழ்ச்சியின்போது நேயர்களிடம் ரொம்பவே வருத்தப்பட்டுச் சொன்னார் சக காம்பியரரான சந்தியா.

ரம்யாகிருஷ்ணன், ராதிகா, ஊர்வசி மூவரும் 'தங்க வேட்டை' நிகழ்ச்சியை மொழிவாரியாக நடத்தி வருகிறார்கள். தற்போது இந்தப் பட்டியலில் 'ஃப்ரெண்ட்ஸ்' பட நாயகி விஜயலக்ஷ்மியும் சேர்ந்துள்ளார். கன்னட 'சூர்யா டீ.வி.'யில் 'தகதக' க்விஸ் நடத்துகிறார்.

கோலங்கள் சீரியலில் நடிக்கும் ஷ்ரத்தாவுக்கு ஜெயா டீ.வி.யில் நிகழ்ச்சித் தொகுப்பாளினியாக வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதேபோல் ராஜ் டீ.வி. தொகுப்பாளினி லக்ஷ்மிக்கு, சீரியலில் நடிக்க வாய்ப்புகள் வந்துள்ளன.



• ஹேமாசின்ஹா

டீ.வி.யில் வரும் மெகா சீரியல்களுக்குப் பதிலாக மீண்டும் மினி தொடர்களைத் தயாரிக்க பிரபல சீரியல் தயாரிப்பு நிறுவனம் முயற்சி மேற்கொண்டுள்ளது. விரைவில் களம் புக இருக்கும் இந்தத் தொடர்கள் தொலைக் காட்சி உலகில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்கிறார்கள்.

\- முராரி

படங்கள் : ஸ்ரீஹரி, ராஜன்

• லக்ஷ்மி





'ஜோக்'காக பாடிய கொசுக்கள்!

"வாயை மூடிக் கொள். கண்களையும் காதுகளையும் திறந்து வைத்துக்கொள். சுற்றியிருக்கும் உலகத்தை உற்றுக் கவனி. நகைச்சுவை தானே வரும். இதுதான் எனது வழிகாட்டி, மாலி சொல்லித் தந்த பாடம்." - அண்மையில் அப்புசாமி-சீதாபாட்டி நகைச்சுவை அறக்கட்டளையினரின் விழா மேடையில் பாராட்டில் நனைந்த ஓவியர் கோபுலுதான் இப்படிப் பேசியது...

"திருவையாறு சென்று தியாகராஜர் பூஜை பண்ணிய ராமர் பட்டாபிஷேக படத்தை ஓவியமாகத் தீட்டிவர வேண்டுமென்பதுதான் ஆனந்த விகடனில் மாலியால் எனக்களிக்கப்பட்ட முதல் அசைன்மெண்ட். தொடர்ந்து மூன்று நாட்கள் தியாகராஜர் வீட்டுத் திண்ணையிலேயே படுத்துத் தூங்கி ஓவியத்தை முடித்தேன். அந்த மூன்று நாட்களும் ஆவலோடு காத்திருந்தும் தியாகராஜரின் எந்தப் பாடலும் என் காதில் கேட்கவில்லை. ஆனால் திருவையாறு புகழ் கொசுக்களின் பாடல்கள் ரொம்ப ஜோராக என் காதுகளில் ரீங்காரமிட்டன. இப்படித்தான் நகைச்சுவை என்னை உள்ளிழுத்துக் கொண்டது போல..." என்று கோபுலு நம்மிடம் சொன்னதுண்டு. குருநாதர் மாலியின் அறிவுரைப்படி கொசுவின் சங்கீதத்துக்குக் காதையும் உலக நடப்புகளுக்குக் கண்ணையும் அவர் திறந்து வைத்துக்கொண்டார் போலும்!

எழுத்தாளர் சாவி, கோபுலுவின் வீடே சிரிக்கிறது என்பாராம். 'ஒவ்வொரு செங்கல்லையும் ஜோக் விற்ற பணத்தில் அல்லவா வாங்கியிருக்கே!' என்பாராம்!



• விழா மேடையில்...

"வாழைப்பழக்காரன், பழம் வித்து முடிச்சதும் அந்தக் கூடையையே தலைக்கு வைச்சுப் படுத்துத் தூங்கிடுவான். நானும் அதுபோலதான். என் ஜோக்கு பழத்தையெல்லாம் வித்து முடிச்சு, கூடையைத் தலைக்கு வைச்சுத் தூங்கிட்டேன். பாக்கியம் ராமசாமி மற்றும் நண்பர்கள் என்னை அலேக்கா தூக்கிட்டு வந்து இங்க உட்கார வைச்சு பேசச் சொல்லிட்டாங்க" என்றார் கோபுலு.

நாரதகான சபா செயலாளரான வழக்கறிஞர் கிருஷ்ணசாமி பேசியபோது, கோபுலுவுக்கு ஸ்ட்ரோக் வந்து வலது கை பாதிப்புக்குள்ளானபோது, டாக்டர்களின் அறிவுரையை மீறி, அவர் இடதுகையால் வரைய ஆரம்பித்ததையும், முதலில் ஏபிசிடி எழுதி, கோடுகள் போட்டுப் பழகி, நான்கே நாட்களில் வலதுகை அளவுக்கு இடது கையால் சிறப்பாக வரைந்து சாதித்ததையும் நெகிழ்ச்சியோடு நினைவு கூர்ந்தார். விழாவுக்குத் திரண்டு வந்திருந்த ஓவியர்கள் கூட்டம் கோபுலுவின் பெருமைக்கும் திறமைக்கும் சான்று.

- எஸ். சந்திரமௌலி

படங்கள் : கிளிக் ரவி

"கூட்டணிக் கதவுகள் திறந்தே இருக்கின்றன. வந்தாரை வரவேற்கக் காத்திருக்கிறேன்" - முதல்வரின் இந்த அதிரடி அம்புகளால் கலகலத்துப் போயிருக்கிறது தி.மு.க. கூட்டணி... எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள்? என்று தி.மு.க. முதன்மைச் செயலாளர் துரைமுருகனை அவரது கோட்டூர்புரம் இல்லத்தில் சந்தித்தோம். தமக்கேயுரிய நகைச்சுவையுடனும், அபிநயங்களுடனும் அவர் பேசியதிலிருந்து:

அ.தி.மு.க.வின் கூட்டணிக் கதவுகள் திறந்தே இருப்பதாகக் கூறியிருக்கிறார் ஜெ. இது உங்கள் கூட்டணிக் கட்சிகளுக்கு விரிக்கப்படும் வலை என்றும் இதனால் கூட்டணி பலவீனமாகும் என்றும் நினைக்கிறீர்களா?

முதல்வருக்கு எப்போதுமே சொல் ஒன்று. செயல் வேறொன்றாகத்தான் இருக்கும். அது அரசு ஊழியர்களுக்குத் தரப்படும் சலுகையாக இருந்தாலும் சரி... கூட்டணி விஷயமாக இருந்தாலும் சரி.. முதலில் மக்களுடன் கூட்டணி வைத்திருப்பதாக வீராவேசமாகப் பேசினார். இப்போது கதவு திறந்திருக்கிறது என்கிறார். அவர்கள் வீட்டுக் கதவு திறந்துகிடந்தால் எங்கள் வீடு எப்படிப் பலவீனமாகும்? எந்தவீடு திறந்துள்ளதோ அவர்களுக்குத்தான் ஆபத்து அதிகம். ஆகவே இது எங்கள் தோழமைக் கட்சிகளுக்கு விரிக்கப்பட்ட வலை என்று நாங்கள் நினைக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் மீது எங்களுக்கு எவ்வித சந்தேகமும் இல்லை.

கடந்த 'ஜெ' ஆட்சியைப் போல், இம்முறை அவருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு - அதிருப்தி எதுவும் இப்போது இல்லாததால் தி.மு.க. கூட்டணிக்குத் தேர்தலை எதிர்கொள்வது சிரமமாக இருக்குமா?

சென்றமுறை ஊழல் அதிகமாக இருந்தது. ஆனால், இந்த முறை ஊழலோடு சேர்ந்து செயல்பாடு இன்மையும் இணைந்துள்ளது. எந்தத் துறையில் ஊழல் இல்லை? சிறுசேரி, கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் என்று பெரிய திட்டங்களிலிருந்து சின்ன விஷயங்கள் வரை ஊழல் குற்றச்சாட்டுகளை இவ்வரசு சந்திக்கிறது. ஆக, தொட்ட இடமெல்லாம் ஊழலாகப் பரிமளிக்கக்கூடிய ஆட்சியாகத்தான் இந்த ஆட்சி உள்ளது. ஆகவே சென்ற முறையைவிட அதிகமாக அ.தி.மு.க. அடி வாங்கும்.

நாளுக்கு நாள் பல திட்டங்கள் அறிவிக்கப்பட்ட வண்ணம் உள்ளன. ஆனால் நீங்கள் 'செயல்பாடின்மை' என்கிறீர்கள்.. எப்படி?

'ஜெ'வின் பாணியில் சொல்ல வேண்டுமானால், **'என் ஆட்சியின் சாதனை இது'** என்று எதையாவது குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா? எங்கள் ஆட்சியில் தொடங்கப்பட்ட ஹூண்டாய், ஃபோர்டு போன்ற தொழிற்சாலை ஒன்றாவது இந்த ஆட்சியில் துவங்கப்பட்டதா...? எங்கள் ஆட்சியில் ஐந்தே ஆண்டுகளுக்குள் இருபது அணைகள் கட்டப்பட்டனவே.. இவர்கள் ஆட்சியில் கட்டப்பட்ட ஒரே ஒரு அணையைக் காட்டுங்கள். எங்கள் ஆட்சியில் தேனி, திருவாரூர், திருவண்ணாமலை உள்ளிட்ட பல மாவட்டங்களுக்கு கலெக்டர் அலுவலகம் கட்டித் தந்தோம். இவர்கள் ஆட்சியில் உருவான கிருஷ்ணகிரிக்கு கலெக்டர் அலுவலகம் இல்லை. மாறாக எப்படிச் சம்பாதிப்பது என்பதில் தான் இவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். இவர்களுடைய செயல்பாடுகள் சீட்டுக்கட்டு போல மந்திரி சபையைக் கலைத்து மாற்றுவதிலும், கலைஞர் ஆட்சியில் தரப்பட்ட சலுகைகளைப் பறிப்பதிலும் தான் இருந்தன.

இவ்வளவு சொல்கிறீர்கள்... ஆனால் கருத்துக்கணிப்புகள் அ.தி.மு.க.வுக்கு ஆதரவாகத்தானே வந்துள்ளன. இதே அமைப்புதான் உங்களுக்கு ஆதரவாகவும் முன்பு கருத்துக் கணிப்பு வெளியிட்டது?

ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள். நான் கருத்துக் கணிப்புகளை மதிப்பதே இல்லை. அது எங்களுக்கு ஆதரவாக இருந்தாலும் சரி.. எதிர்ப்பாக இருந்தாலும் சரி.. இது மாதிரியான கணிப்புகள் எப்படி நடக்கின்றன என்பது எங்களுக்குத் தெரியும். போலீஸை பக்கத்தில் வைத்துக் கொண்டு அப்படிச் சொல்ல, சொல்கிறார்கள். ஆகவே இதுபோன்ற கருத்துக் கணிப்புகள் மக்களைத் திசை திருப்பாது.

அரசு ஊழியர் மாநாட்டில் வழங்கப்பட்டுள்ள சலுகைகள் தி.மு.கவை பதைபதைக்க வைத்துள்ளதாகக் கூறப்படுகின்றதே...?

(சிரித்தபடியே) நான் எனது தொகுதி மக்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பவன். மூன்று மாதங்களுக்கு முன்பு தொகுதி மக்களைப் பார்த்து 'வணக்கம்' போட்டால் அவர்களும் பதிலுக்குக் கும்பிடுவார்கள். ஆனால் இப்போது 'வணக்கம்' போட்டால், 'ஆமாமா.. இப்போ கும்பிடுவீங்களே...'





"அ.தி.மு.க. அடி வாங்கும்!"

என்று சொல்லிவிடுவார்கள். என்னையே இப்படிச் சொல்பவர்கள், இத்தனை நாள் சும்மா இருந்து விட்டு, தேர்தல் நேரத்தில் வழங்கப்படும் திட்டங்களை, 'கூழைக் கும்பிடு' என்று புரிந்து கொள்ள மாட்டார்களா என்ன! ஆகவே இதனால் தி.மு.க. எதற்கும் பதைபதைக்க வில்லை.

விஜயகாந்த் தி.மு.க.வை மட்டும் இப்போது கடுமையாகத் தாக்கிப் பேசுகிறார். அறிவாலயத்தில் ராகுகாலத்தில் விருப்ப மனு தாக்கலாகவில்லை. தி.மு.க. மாநாடு எலுமிச்சைப்பழம் கொண்டு திருஷ்டி கழித்துத் துவக்கப்பட்டுள்ளது என்றெல்லாம் சீறுகிறாரே?



“ஸ்டாலின்தான் முதல்வர்”

விஜயகாந்த் இப்படிப் பேசுவதெல்லாம் அரசியலே அல்ல. இந்த அரசியலை நான் கற்றவனும் கிடையாது. இப்படிப்பட்டவர்களின் கருத்துகளை பத்திரிகைகள் புறக்கணிக்க வேண்டும். ராகுகாலம் பார்ப்பது என்பது தனிமனித நம்பிக்கை. எங்களைப் போன்ற பகுத்தறிவாளர்களுக்கு அதில் நம்பிக்கை கிடையாது. அப்படி யாருக்காவது இருக்குமானால் அவர்கள் திருத்தப்பட வேண்டியவர்களே தவிர... தண்டிக்கப்பட வேண்டியவர்கள் அல்ல... அறிவாலயத்தில் ராகுகாலத்தின்போதும் ஏகப்பட்ட பேர் விருப்ப மனு தந்துள்ளார்கள்.

மூங்கில் காட்டுத் தீயில் சந்தனமரமும் வேங்கை மரமும் கூட சாம்பலாகிவிடும். ஆகவே தி.மு.க. கூட்டணியில் உள்ள நல்லவர்களே வந்துவிடுங்கள் என்று காளிமுத்து பகிரங்க அழைப்பு விடுத்துள்ளது பற்றி?

நல்ல வசனங்களை விற்பனை செய்வதில் என் நண்பர் காளிமுத்து கெட்டிக்காரர். அந்த வசனங்களிலேயே முத்திரை பதித்தது 'ஜெ'வைப் பற்றி முன்பு அர்ச்சித்த பிரசித்தி பெற்ற வசனங்கள்தாம். இந்த அளவுக்கு, "வைகோ... நீங்க வாங்கோ... நீங்க வாங்கோ" என்று கூப்பிடுமளவுக்கு அ.தி.மு.க. பலவீனமாகியுள்ளது. அ.தி.மு.க. கப்பல் மூழ்கத் துவங்கிவிட்டது. அதனால் தான் "அங்கிருந்து வந்து எங்களைக் காப்பாற்றுங்கள்" என்று கூப்பாடு போடுகிறார்.

உங்கள் கூட்டணியில் இருப்பவர்கள் பலர் இவ்வாறு அதிகமாகப் 'பொடி' வைத்துப் பேசுகிறார்கள். அதுமட்டுமின்றி யார் கூட்டணிக்குள் இரண்டாவது பெரிய கட்சி என்ற போட்டி வேறு வந்துவிட்டது. இதையெல்லாம் எப்படிச் சமாளிக்கப் போகிறார்கள்?

நகை செய்யத்தான் 'பொடி' வைக்கணும். கூட்டணிக்கு எதுக்கு 'பொடி'... (சிரிக்கிறார்). தோழமைக் கட்சித் தலைவர்களின் எந்தவொரு பேச்சுக்கும் கற்பனைக் கருத்து ஒன்றை உருவாக்கிடலாம். அவற்றையெல்லாம் கேள்வி கேட்டு, கேட்டு எங்களைத் திசை திருப்ப முடியாது. உங்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். அடுத்து இரண்டாவது மூன்றாவது கட்சி பற்றியெல்லாம் எங்களுக்குக் கவலை கிடையாது. தி.மு.க. பெரிய கட்சி அவ்வளவுதான். இது குறித்து கிண்டிக் கிண்டி பதில் வாங்கிப் போட முயல்வது சிண்டு முடியும்

வேலை.

மத்திய அரசு விழாக்களில் கலைஞர் கலந்து கொள்வது கடுமையாக விமர்சிக்கப்படுகிறதே?

அதிலென்ன தவறு. அந்த விழாக்களில் கலைஞர் மட்டும் கலந்துகொள்ளவில்லை. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கூடத்தான் கலந்துகொள்கிறார்கள். நாங்களாவது நாலு பேரைக் கூப்பிட்டு விழா நடத்துகிறோம். ஆனால் முதல்வரோ ஏ.சி. அறையில் உட்கார்ந்துகொண்டு எல்லா கல்வெட்டுகளையும் திறந்து வைக்கிறார்.

ஸ்டாலின் தான் அடுத்த முதல்வரா?

தி.மு.க.வுக்குச் செயற்குழு, பொதுக்குழு உள்ளது. வரையறுக்கப்பட்ட, பதிவு செய்யப்பட்ட சட்டம் உள்ளது. அதன் படி தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் ஸ்டாலினைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தால் ஸ்டாலின்தான் முதல்வர். ஏனென்றால் இது ஜனநாயகக் கட்சி.

இரண்டு நிமிடம்கூட எழுந்து நிற்க முடியாத நிலையில் இருக்கும் கலைஞருக்கு எதற்கு முதல்வர் ஆசை என்று காளிமுத்து கேட்டிருக்கிறாரே?

(முகம் சிவக்கிறது) காளிமுத்து நடத்திய சபையில் சகிப்புத் தன்மை என்பதே இல்லை. எதிர்கட்சிகளுக்கு ஓர் இடமே இல்லை என்பதுதான் யதார்த்த உண்மை. ஆனால் நாங்கள் சகித்துக் கொள்ளும் வகையில் ஆட்சியையும் சபையையும் நடத்துவோம்.

தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் அனைவரும் பயனற்றவர்கள் என்கிறாரே முதல்வர்?

சமீபத்தில் கூடிய அ.தி.மு.க. பொதுக் குழுவில் பதின்மூன்று மத்திய அமைச்சர்களுக்கும் 'செயல்படவில்லை' என்று கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாசன் அமைச்சராகி ஓரிரு நாட்களுக்குள்ளேயே அவரையும் சேர்த்து தீர்மானம் போட்டதிலிருந்தே அவர்களுடைய குற்றச்சாட்டின் உள்நோக்கம் மக்களுக்குத் தெரியும்.

- இரா.முத்துக்குமார்

படங்கள் : **ஸ்ரீஹரி**



''நாங்கள் கேட்ட முப்பது இடங்களை எந்தக் கட்சியும் தராததால்... தன்மானத்தோடு தனித்துத் தேர்தலை சந்திக்கவுள்ளோம் என்பதை இந்த வேளையில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.''

- வீ.விஷ்ணுகுமார்



''உங்க காதலர்கிட்டே கொஞ்சம் எச்சரிக்கையா இருங்க அக்கா!''

''ஏண்டா!''

''சுண்டல் பாக்கியை நேத்து செட்டில் பண்ணிட்டார்!''

- ஞா. ஞானமுத்து

As per BIS,
IS:2888-1983.




உத்திரவாதமான மேனிப் பராமரிப்பு
தலைமுறை தலைமுறையாக

50 ஆண்டுகளுக்கும் மேலாக, மேனிப் பராமரிப்பில் ஸின்த்தால் நம்பகமான சோப் என்று தொன்றுதொட்டு பெயர் பெற்றுள்ளது. ஸின்த்தால் சோப் மேனியின் எழிலை மேம்படுத்துகிறது. இதன் ஒப்பற்ற நறுமணம் நாள் முழுவதும் நீடித்து உங்களை புத்துணர்வுடன் வைக்கும். எனவே ஸின்த்தால் பல தலைமுறைகளாக விசுவாசமான வாடிக்கையாளர்களை உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.



மேனிப் பராமரிப்பு என்றென்றும்



சச்சார் கமிட்டி- சர்ச்சை கமிட்டி!

இந்தியாவில் உள்ள இஸ்லாமியர்களின் சமுதாய, பொருளாதார, கல்வி அந்தஸ்தைக் கண்டறிய ஒரு கமிட்டி நிறுவியது அரசு!

கடந்த ஆண்டு மார்ச் 9ம் தேதி நிறுவப்பட்ட இந்த சச்சார் கமிட்டி, சர்ச்சை கமிட்டியாக இன்று செய்தியில் அடிபடுகிறது.

இந்த கமிட்டியின் இறுதி நோக்கம் என்ன என்பது மூடு மந்திரமாக உள்ள நிலையில், சில சங்கடங்களும் பல அபாயங்களும் இக் கமிட்டியினுடைய பணியின் விளைவாக எழுந்துள்ளன.

இஸ்லாமியர்களின் சமூக நிலையை மட்டும் எதற்காக அரசு திடீரென்று நுணுகி ஆராய வேண்டும்?


"சிறுபான்மையினர் என்ற அடிப்படையில் ஏற்கெனவே பல சலுகைகளை அனுபவித்து வரும் அவர்களை மேலும் சலுகைகளால் மகிழ்வித்து ஆட்சியாளர்கள் அரசியல் ஆதாயம் தேடவே இதைச் செய்கிறார்கள்" - எதிர்கட்சியான பா.ஜ.க இவ்வாறு கூக்குரல் எழுப்பியிருக்கிறது.

உண்மையில் இந்த நோக்கில்தான் சச்சார் கமிட்டி நிறுவப்பட்டதா என்பது தெளிவாக இல்லை.

இதே கமிட்டி ராணுவத்தில் உள்ள முஸ்லிம்களின்




கல்கி



2006 பிப்ரவரி 26
பார்த்திப மாசி 14
மலர் : 64
இதழ் : 30

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



எண்ணிக்கை குறித்தும் அவர்களுடைய பின்னணி குறித்தும் புள்ளிவிவரங்கள் சேகரிக்க முற்பட்டது கடுமையான ஆட்சேபணைக்கு உள்ளாகியிருக்கிறது.

"ராணுவத்துக்கு மதம் ஏது? நாட்டின் பாதுகாப்பு அமைப்புக்குள் பிரிவினை எண்ணங்களை விதைக்கிறது இந்த முயற்சி" என்று அத்வானி இதனைக் கண்டனம் செய்திருப்பது நியாயமே.


ராணுவத் தலைமையேகூட சச்சார் கமிட்டியின் தலையீட்டை ஆட்சேபித்திருக்கிறது. கமிட்டி கேட்ட புள்ளிவிவரங்களைப் பாதுகாப்பு அமைச்சகத்திடம் தந்து, அதனை சச்சார் கமிட்டியிடம் தர வேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருக்கிறது!

இந்தோ - பாக் எல்லையில் நிகழ்ந்து வரும் இஸ்லாமிய பயங்கரவாத ஊடுருவலின் பின்னணியில், ராணுவத்திலுள்ள இஸ்லாமியர்களின் பேரில் கண்காணிப்புச் செலுத்த வேண்டும் என்று அரசு முடிவெடுத்திருக்கக்கூடும். அதனை வெளிப்படையாகச் சொல்லாமல், இஸ்லாமியர் நலனை உயர்த்தும் முகமாக இந்த கமிட்டி நிறுவப்பட்டதாக அரசு சொல்லி வருகிறதோ என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது.

பாகிஸ்தானுடன் நல்லுறவை வளர்த்து பயங்கரவாதப் பிரச்னைகளுக்கு அரசியல் தீர்வு காண்பதுதான் புத்திசாலித்தனமே தவிர, ராணுவத்தில் உள்ள முஸ்லிம்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்துக் கணக்கிடுவது அல்ல.

இத்தகைய சர்ச்சைகளுக்கு இடங்கொடுப்பதென்பது அரசின் மிகப்பெரிய அறிவீனமாகும்.

ஹிந்து - முஸ்லிம் உறவுகள் சுமுகமாக இருந்தாலன்றி, இந்தியாவுக்கு எதிர்காலம் இல்லை. இதுபோன்ற கமிட்டிகளும் அவற்றின் விளக்கமற்ற திடீர் விசாரணைகளும் ஹிந்து - முஸ்லிம் - இரு தரப்பினர் மனத்திலும் சந்தேகங்களை, அவநம்பிக்கையை, அச்சத்தை விதைக்கும்.



முஸ்லிம்களுக்கு மேலும் பல சலுகைகள் தருவதற்காகவே அரசு இம்முயற்சியில் இறங்கியிருக்கிறது என்று ஹிந்துக்கள் வெறுப்புறுவார்கள்.

'நம்மைச் சந்தேகித்து, நமது விவரக் குறிப்பை அரசு சேகரிக்கிறது; இனி நமக்கிங்கே என்ன பாதுகாப்பு இருக்க முடியும் ?' என்று இஸ்லாமியர்கள் நம்பிக்கை இழக்க ஆரம்பிப்பார்கள்.

இரு தரப்பினரின் கசப்புணர்வும் அரசு மீது திரும்புவதோடு, பரஸ்பர அவநம்பிக்கையாகவும் சந்தேகமாகவும் வெகு விரைவில் உருமாறிவிடும். உள்நாட்டு அமைதி அச்சுறுத்தப்படும்.

இந்த விஷப் பரீட்சையை - சச்சார் கமிட்டி ஆய்வு என்ற பெயரில் நடைபெறும் முஸ்லிம்கள் குறித்த விவரக் குறிப்பெடுப்பை - அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்.

இஸ்லாமியர் முன்னேற்றத்துக்கோ, ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமைக்கோ அரசு ஏதேனும் செய்ய விரும்பினால், அதற்கென்றே ஒரு மதநல்லிணக்க அமைச்சகத்தை நிறுவலாம்.

மதச்சார்பின்மை என்றால் மதங்களைப் புறக்கணிப்பது அல்ல. அனைத்து மதங்களையும் சமமாக மதித்து ஏற்பதுதான் மதச்சார்பின்மை. இந்திய மதங்களைப் பற்றி, தெளிவான பாடங்களைப் பாடத் திட்டத்தில் சேர்க்கவும், மதங்களைக் கடந்த ஆன்மிக மாநாடுகள் நடத்தவும் பல்வேறு மதங்களிடையே கருத்துப் பரிமாற்றங்கள் நிகழவும் இந்த மதநல்லிணக்க அமைச்சகம் திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்தலாம். இந்து, முஸ்லிம், பார்ஸி, கிறிஸ்துவன், சீக்கியன் என்ற பேதங்களுக்கு அப்பாற்பட்டு, இந்தியன் என்ற உணர்வு அனைவரிடமும் வளர்க்கப்பட வேண்டும்.

இதை விடுத்து, சச்சார் கமிட்டி போன்ற சர்ச்சை கமிட்டிகளை அமைப்பது வீண் செலவு; நேர விரயம் என்பதுடன் நாட்டின் அமைதிக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல்!



ஆல்ரவுண்டர் ஹரிணி!

ஹரிணி ஸ்ரீதர். இவரது பொழுது போக்கு என்ன தெரியுமா? மேடைகளில் ஏறி சான்றிதழ்கள், கோப்பைகளை அள்ளி வந்து, வீட்டு அலமாரியில் அடுக்குவதுதான்! அவரது வீட்டு வரவேற்பறையும் அதற்கு 'ஓ' போடுகிறது. இவரது குடும்பமே சங்கீத நாட்டம் கொண்டது. அதனால் ஹரிணியை வாய்ப்பாட்டு கற்றுக்கொள்ள அனுப்பி வைக்க, இவருக்கோ கீ போர்டு மீது தான் கண்! ஒரு குட்டி கீபோர்டை இவரது அப்பா, பிறந்த நாள் பரிசாக வாங்கிக் கொடுக்க, அதில் ஆரம்பித்த ஆர்வம் இப்போது 65,000 ரூபாய் Korg-triton கீ போர்டில் முழு நேர கச்சேரியை நடத்தும் அளவுக்கு வந்துள்ளது.

"எனக்கு டைட்டன் வாட்ச் விளம்பர மியூசிக் ரொம்பப் பிடிக்கும்... அதை பிராக்டிஸ் செய்ததில் ஆரம்பிச்சதுதான். தொடர்ந்து சபாக்கள், கோயில்கள், குடும்ப நிகழ்ச்சிகள்னு 250 கச்சேரிகளுக்கும் மேல செய்துட்டேன். என்னோட கச்சேரியைப் பார்த்துட்டு, ராம்ஜி சார் அவரோட 'பேச்சுக் கச்சேரி' டி.வி நிகழ்ச்சியில டைட்டில் சாங்குக்கு கீபோர்டு வாசிக்க வாய்ப்புக் கொடுத்தாரு. அவரோட முயற்சியால எனக்கு நிறைய வாய்ப்புகள் வர ஆரம்பிச்சது. குறிப்பாக 'ஸ்ப்லாஷ்' சேனல்ல ஒரு கர்நாட்டிக், ஒரு லைட் மியூஸிக் பாடல் வாசிக்க வாய்ப்புக் கிடைச்சுது" என்று சொல்லும் ஹரிணியின் கீபோர்டு கச்சேரி ஒன்றைப் பதிவு செய்து, அதை அண்ணா பல்கலைக்கழக 'அண்ணா எஃப்.எம்'ல் ஒரு மணி நேரம் ஒலிபரப்பினார்களாம்.

லதா ரஜினிகாந்த் நடத்தும் 'தயா' இசைப் போட்டியில் பங்கேற்று, 'பெஸ்ட் இன்ஸ்ட்ருமென்டலிஸ்ட்' என்ற ரஜினி விருதைப் பெற்றிருக்கிறார் ஹரிணி ஸ்ரீதர்.

"உங்களுடைய மறக்கமுடியாத போட்டி எது?" என்று கேட்டால்,

"ஐ.ஐ.டி.யில் நடக்கும் 'சாரங்க்' போட்டிதான்... இந்த ஆண்டு எனக்கு இரண்டாவது இடம் கிடைத்தாலும் கூட அந்த இளமைக் கலை விழா எனக்கு சரியான சவால்!" என்கிறார்.

தற்போது மீனாக்ஷி சுந்தரராஜன் பொறியியல் கல்லூரியில் ஈ.சி.ஈ படித்து வரும் ஹரிணி, பள்ளி நாட்களில், படிப்பு, கோ-கரிக்குலர் இரண்டிலும் சிறப்பாகச் செயல்பட்டதற்காகத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் 'ஆல்ரவுண்டர்' விருதைப் பெற்றவர்.

"ரிகர்சல், கச்சேரினு நான் எப்பக் கிளம்பினாலும் 'பெஸ்ட் ஆஃப் லக்' சொல்லி அனுப்பும் எங்கக் கல்லூரிக்கு நன்றி" என்கிறார் மறக்காமல்.

ஹரிணியின் சின்னச் சின்ன ஆசைகள் இரண்டு. ஒன்று-கீபோர்ட்டுக்கு கர்நாடக இசையில் அங்கீகாரம் கிடைக்கணும். மற்றொன்று - ஏ.ஆர். ரஹ்மான் போல் வரணும்!

- கலை

படம் : ஸ்ரீஹரி



தத்து... பித்து...சித்து!

சிக்ஸர் சித்து - பேட்ஸ்மேனாக இருந்தபோது ரசிகர்களை ஆட்கொண்டாரோ இல்லையோ, கிரிக்கெட் காமெண்டரி கொடுக்க ஆரம்பித்தபின்பு அவரது பேச்சுக்கு மயங்கிக் கிடக்கிறார்கள் கிரிக்கெட் ரசிகர்கள்.

கிராமத்துக் கிழவிகள்போல் பொன்மொழிகள், விடுகதை, தத்துவம் என சித்துவின் பேச்சில் காரம், சுவை எல்லாமே இருக்கும்... இதோ சில உதாரணங்கள்.

கிரிக்கெட் வாழ்க்கை

87-ல் நடந்த உலகக் கோப்பையின்போதுதான் நான் மிளிர ஆரம்பித்தேன். ஆனாலும் இந்திய வீடுகளில் அவ்வப்போது வரும் குடிநீர் போல, நானும் இந்திய அணியில் மாறி மாறி இடம்பெற்றேன். அதன்பின்பு, ஆஸ்திரேலிய அணி இந்தியா வந்தபோது பரபரப்பானேன். தனக்கு வந்த கிஃப்ட் பாக்ஸின் உறையை, குழந்தை எவ்வாறு நார்நாராகக் கிழிக்குமோ அப்படி ஷேன் வார்னேவின் பந்தைக் கிழித்தேன்.

ஓப்பனிங்...

ஓப்பனிங்கில் என்னுடன் நிறைய பேர் ஆடியுள்ளனர். கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் ஆடும்போது அவருடைய பேட்டுக்கும் பேடுக்குமுள்ள இடைவெளியில் நான் ஒரு சொனாட்டா காரையே பார்க்கிங் செய்வேன். ரவி சாஸ்திரி நேர் எதிர். எப்படி, மூன்று சக்கர வாகனம் நிறைய டீசல் குடித்தாலும் முப்பது கிலோ மீட்டருக்கு மேல் ஓடாதோ, அதுபோல எத்தனை மணி நேரம் பிட்ச்சில் நின்றாலும் முப்பது ரன்னுக்கு மேல் எடுக்க மாட்டார்.

இந்திய அணி எப்படி உள்ளது?

ஹிந்தி சினிமா போலக் காட்சியளிக்கிறது. கொஞ்சம் ஹிட்ஸ், நிறைய ப்ளாப்புகள். சில முக்கியமான வீரர்களை எடுத்துவிட்டால் முந்திரி இல்லாத முந்திரி பக்கோடா போலக் காட்சியளிக்கிறது. சில சமயங்களில் வெறும் காலி ப்ளேட். ஏதாவது இருக்குன்னு சாப்பிடவும் முடியலை. தூக்கி வீசவும் முடியலை. ஆட்டக்காரர்கள், சைக்கிள் ஸ்டேண்டில் உள்ள சைக்கிள் மாதிரி; ஒருவர் கவிழ்ந்தால் வரிசையாக மற்றவர்களும் வீழ்ந்து விடுகிறார்கள்.


சௌரவ் கங்குலி?

சோடா பாட்டிலைத் திறந்து வைத்திருந்தால் சில விநாடிகளில் எல்லா சோடாவும் வெளியேறிவிடும். அவ்வப்பொழுது நம் வாய் என்கிற சோடா பாட்டிலை மூடி வைப்பது நல்லது.

காமெண்டேட்டர் ஆனது குறித்து வருத்தமா?

இந்திய கிரிக்கெட்டில் எப்பொழுதும் இரண்டு சூப்பர் ஸ்டார்கள்தாம். ஒருவர் சச்சின் டெண்டுல்கர், மற்றொருவர் சிக்ஸர் சித்து. ஒண்ணு தெரியுமா? ஈ.எஸ்.பி.என்னில் என்னை முழு நேர ஊழியராக்க விரும்பினார்கள். சச்சின் அவுட்டான பிறகு கிரிக்கெட் மேச்சே போரடிக்கிறதாம். அதைச் சரிக்கட்ட என்னுடைய காமெண்ட்ரி வேண்டும் என்றார்கள்... ஹா...ஹா...ஹா...

- சநகன்



Now open on **Sundays** also



ஆண்டாள் என்ன சொல்கிறாள்:

பாசிதூர்த்துக் கிடந்த பார்மகட்குப் பண்டு ஒரு நாள்

மாசு உடம்பில் நீர்வாரா மானம் இலாப் பன்றி ஆம்

தேசு உடைய தேவர் திருவரங்கச் செல்வனார்

பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே

- அந்த எம்பெருமான் வராஹ அவதாரம் பண்ணி பேசிய பேச்சை யாராவது அழித்து விட முடியுமோ! அது பேர்க்கவும் பேராத பேச்சல்லவோ என்று ஆண்டாள் கொண்டாடுகிறாள்.

அப்படிப்பட்ட பகவானின் திருநாமத்தை நம் உடலிலே பலமிருக்கிறபோது, புஷ்டியிருக்கிறபோது, தேஜஸ் இருக்கிற

குறையொன்றுமில்லை

போது, எல்லாம் நல்ல முறையிலே வேலை செய்கிறபோது, நாடி - நரம்பெல்லாம் நல்ல முறையிலே இயங்குகிறபோது நன்றாக உரக்கச் சொல்ல வேண்டும்.

நல்ல வாக்கு அமைந்திருக்கிறபோதே அவன் திருநாமத்தை நன்கு வாய்விட்டுச் சொல்லுங்கள்.

அதே மாதிரி, அவன் திருவடியிலே நல்ல புஷ்பங்களைக் கொண்டு வந்து அர்ச்சனை பண்ணுங்கள்.

நீங்களே புஷ்ப செடியை வைத்து, நீங்களே புஷ்பங்களைப் பறித்து, அதைக் கொண்டுவந்து பகவானுடைய திருவடியிலே அர்ச்சனை பண்ணவேண்டும். ஒருத்தரிடத்திலே புஷ்பம் வாங்குவது அதமம். விலை கொடுத்து வாங்கிப் பண்ணுவது அதமாதமம்!

தோட்டம் வைத்து, அதிலேயிருந்து புஷ்பம் எடுத்து அர்ச்சனை பண்ணினால் மிகுந்த சந்துஷ்டி அடைகிறான் பரமாத்மா.

புஷ்பங்களால் இவ்வாறு பூஜிப்பதோடு இந்த ஆத்மாவை 'அவனுடையது' என்று அவன் திருவடியிலே சமர்ப்பித்தல் வேண்டும்.

இந்த மூன்று காரியங்களை யார் பண்ணுகிறார்களோ, தங்கள் வாழ்நாளில் திருநாமத்தை நன்கு உச்சரித்து, அவன் திருவடியிலே புஷ்பங்களை அர்ச்சித்து, யார் ஆத்ம சமர்ப்பணம் என்கிற சரணாகதியைப் பண்ணுகிறார்களோ, அவர் அந்திம காலத்திலே கட்டை மாதிரியும் கல் மாதிரியும் விழுந்து கிடக்கிறபோதுகூட பகவான் கை கொடுப்பான். எல்லோரும் அவரைக் கைவிட்டுவிடுவார்கள். ஆனால், 'அஹம் ஸ்மராமி மத் பக்தம்! நயாமி பரமாம் கதிம்' என்று பகவான் கைகொடுப்பான்: "அவன் என் பக்தன்; என் பெயரைச் சொன்னவன்; என் திருவடியிலே ஆத்ம சமர்ப்பணம் பண்ணியவன். ஒரு நாளும் அவனை நான் கைவிடமாட்டேன்..." என்று பகவான் அந்திம காலத்திலே வந்திருந்து இந்த ஆத்மாவை சுவீகரித்துக் கொண்டு போகிறான்..

ஆகையினாலே, முக்தி உபாயமாக பரமாத்மா இருக்கிறான் என்பதை யோக: என்ற சப்தம் காட்டுகிறது.

பெரியாழ்வார் ரொம்ப அழகாகச் சொல்கிறார்:

ஒருத்தன் மரணப் படுக்கையிலே இருக்கிறபோது, அவனைச் சுற்றியிருப்பவர்கள் மிகுதியாக வாட்டுகிறார்களாம்... "நீ சேர்த்து வைத்த பொருளை எங்கே வைத்திருக்கிறாய்?" என்று கேட்கிறார்களாம்! 'எவ்வளவு வைத்திருக்கிறாய்?' என்று அவர்கள் கேட்கவில்லை! அவன் படுக்கையைச் சூழ்ந்து நின்று அவன் மனத்தைக் குத்துகிறார்களாம்! "பொருள் வைத்ததுண்டாகில் சொல்லு" என்கிறார்களாம்!

இதன் தொனி என்னவென்றால் 'நீ எங்கே பொருள் சேர்த்து வைத்திருக்கப் போகிறாய்? இருக்கிறபோதே எல்லாவற்றையும் அழித்துவிட்டாயே. ஏதேனும் மிச்சம் மீதி இருந்து, எங்கேனும் வைத்திருந்தால் சொல்லு!' - என்பதாகும்!

"அதைச் சொல்லிவிட்டுப் போய்விட்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்


டாயானால் பரவாயில்லை'' என்று சித்திரவதை பண்ணுகிறார்களாம்.

இப்படி ஒரு காலம் வரும் என்று இவர் முன்கூட்டியே உணர்ந்து பகவான் நாமாவைச் சொல்லி ஆத்ம சமர்ப்பணம் பண்ணி விட்டார்.

மார்பகம் என்பதோர் கோயில் அமைத்து,
மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி
ஆர்வம் எனும் பூவிட வல்லார்க்கு
அரவ தண்டத்து உய்யலுமாமே! என்கிறார் ஆழ்வார்.

மார்பகமாகிற உயர்ந்த கோயிலில் மாதவனாகிற தெய்வத்தை நாட்டி, அவன் திருவடியிலே பக்தியாகிற புஷ்பத்தை பூஜிக்கக் கூடியவர்களுக்கு யம சர்ச்சையே கிடையாது. நரக லோகத்திலே போய் அவர்கள் அல்லலுறவே வேண்டியதில்லை.

அந்திம காலம் என ஒன்று வரும் என்பதனை உணர்ந்து, அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன். அரங்கத்தரவணை பள்ளியானே என்று



உடம்பில் பலம் இருக்கிறபோதே, இப்போதே சொல்ல வேண்டும் அவன் நாமாக்களை. அந்திம காலத்திலே 'சொல்லு சொல்லு' என்று யாராவது நினைவூட்டினாலும் சொல்ல வராது. நல்ல காலத்திலேயே சொல்லவில்லை; அந்திம காலத்தில் யமனுடைய பாசத்தில் அகப்பட்டுக் கொண்டவர்களால் எப்படிச் சொல்ல முடியும்?

ஒருவருக்கு மித்ரர் ரொம்ப நண்பர் அவர் மாயும் தருவாயில் இருக்கிறார். அவருக்கு நிறைய பிள்ளைகள். அதிலே கடைசி பிள்ளையின் பெயர் கோவிந்தன்.

இவர் என்ன பண்ணினார், கோவிந்தன் என்கிற பிள்ளையைக் கொண்டு போய் மரணப் படுக்கையிலிருந்த தந்தையின் முன் நிறுத்தினார். "இவன் யார்?" என்று கேட்டார், பிராணன் போகிறவரைப் பார்த்து.

அவர் தன் பையனைப் பார்த்து "கோவிந்தன்" என்று சொல்லுவார் என்பது இவருடைய அபிப்ராயம். ஆனால், இவர் என்ன பண்ணினார்... "இவனா? இவன் என் கடைசி பிள்ளை" என்று சொல்லிவிட்டுப் பிராணனை விட்டுவிட்டார்!

இப்படி கோவிந்த சப்தம் வாக்கிலே வரமாட்டேன் என்கிறது!

ஏன்...? யம பாசத்துக்கு உள்ளானவன், கடைசி - அந்திம காலத்திலே பகவான் நாமாவைச் சொல்; சொல் என்று வற்புறுத்தினாலும் சொல்ல மாட்டான். வாய் ஒரு பக்கமாக இழுக்கும். கண் ஒரு பக்கம் இழுக்கும். தாய் ஒரு பக்கம், தாரம் ஒரு பக்கம் அரற்ற, தீ ஒரு பக்கம் சேர்வதன் முன்னம் - அந்த மாதிரி காலத்திலே எப்படி பகவான் நாமா வரும்? நல்ல நிலைமையிலே இருக்கிறபோதே பகவான் நாமாவைச் சொல்லாதவன் அந்திம காலத்திலே எங்கேயிருந்து சொல்ல முடியும்! அது மிகவும் கஷ்டமானதொரு நிலையானதனாலே, இப்போதே சொல்லிவிடு பகவான் நாமாவை என்கிறார்கள் ஆசார்யர்கள்.

இப்படி நித்யமே ஜீவனால் அடையப்படுகிறவனாக அந்த பரமாத்மா இருப்பதனாலே, அவன் கட்டாயம் வந்து (நமது அந்திமக் காலத்தில்) தான் சொன்ன வண்ணம் செய்வான்.



"என்ன ராப்பிச்சை! நாயோடு வந்திருக்கே...?"
"புதுச்சாப்பாடா பழைய சாப்பாடான்னு இது மோப்பம் பிடிச்சிடும் தாயி!"
- அதிரை புகாரி

சொன்ன வண்ணம் செய்யும் பெருமான் என்றே பெயர் உண்டு பகவானுக்கு.

நான் வந்து அழைத்துக்கொண்டு போகிறேன் என்று சொல்லியிருக்கிறான் அல்லவா? ஆதலால் ஒரு நாளும் அதை மாற்ற மாட்டான் அவன்.

இப்படி ஜீவனால் அடையப்படுகிறவனுக்கு யோக: என்று பெயர்.

வந்து நம்மை அழைத்துக் கொண்டு போகக் கூடியவன். இதை இன்னும் அழகாகச் சொல்ல வேண்டுமானால் பின்னால் சஹஸ்ரநாமத்தில் வருகிற 'மார்கோ நேயோ அனயோ நய: வீர: சக்திமதாம் சிரேஷ்ட: தர்மோ தர்ம விதுத்தம:' என்கிற நாமங்களைக் கொண்டுதான் சொல்ல வேண்டும்.

மார்க: வழியாய் இருக்கக் கூடியவன். நய: - அந்த மார்க்கத்திலே அழைத்துக் கொண்டு போகக் கூடியவன்.

நயதிதி நய: - உயர்ந்த அர்சிராதி மோக்ஷ மார்க்கத்திலே அழைத்துக்

கொண்டு போகக் கூடியவன்.

ஆகையினாலே எம்பெருமானே வழியாகவும் இருக்கிறான். அந்த வழியினாலே அடையப்படக் கூடியவனாகவும் இருக்கிறான்.

நல்வழி அவன் என்பதை யோகம் என்கிற சப்தத்தினாலே தெரிந்து கொள்கிறோம்.

யோக விதாம் நேதா - யோகமாகிற எம்பெருமானை நன்கு உணர்ந்தவர்களுக்கெல்லாம் தலைவனாக விளங்குகிறான் பரமாத்மா.

எல்லோருக்கும் மேம்பட்டவனாக அவன் விளங்குவதனாலே 'நேதா' என்று சொல்கிறார்கள் பகவானை.

யோக வித்துக்களுக்கு நேதா. பிரும்ம வித்துகளுக்கு நேதா.

வழியாகவும், வழியால் அடையப்படுபவனாகவும் நேதாவாகவும் இருப்பவன், இன்னும் எப்படி இருக்கிறான்?

பிரதான புருஷனாக இருக்கிறான்.

பிரதான புருஷேச்வர: - இது ஒரே திருநாமம்.

பிரதானம் என்று ஒன்று; புருஷன் என்று ஒன்று.

பிரதானம் என்றால் பிரகிருதி மாயா.

இந்தப் பிரகிருதி இருக்கிறதே, அசித் பதார்த்தம்... அசேதனம்... அதற்குப் பிரகிருதி என்று பெயர்.

புருஷன் என்று ஜீவனுக்குப் பெயர்.

இந்த இரண்டுக்கும் - அதாவது பிரகிருதி, ஜீவன் இரண்டுக்கும் ஈசுவரன் பிரதான புருஷேச்வர:

மூன்று ரத்தினங்கள் சொல்லுவார்கள். ஸ்தோத்திர ரத்தினம், புராண ரத்தினம், மந்திர ரத்தினம்.

ஆளவந்தார் என்கிற ஆசார்யரால் இயற்றப்பட்ட ஸ்தோத்திரத்துக்கு ஸ்தோத்திர ரத்தினம் என்று பெயர்.

நல்ல வாக்கு படைத்தவர் ஆளவந்தார். சிறிய வயதிலேயே அவர் சிறந்த வாக்மி. அப்போது இந்த சோழ சமஸ்தானத்திலே ஆக்கி ஆழ்வார் என்கிற மஹா வித்வான் ஆஸ்தான வித்வானாக எழுந்தருளியிருந்தார்.

ஒரு நாள் சோழ ராஜாவிடம், "இந்த உலகத்திலே இருக்கிற பண்டிதர்களையெல்லாம் நான் ஜெயிக்கிறேன். அப்படி நான் ஜெயித்து, அந்தப் பெருமை உங்களுக்கு - உங்கள் சோழ தேசத்துக்கு ஏற்படும்" என்று ராஜாவினிடத்திலே சொன்னார் ஆக்கி ஆழ்வார்.



"நான் செய்ற வேலைல அது சரியில்ல, இது சரியில்லன்னு நீ குத்தம் சொல்லாதம்மா! உன் வீட்டுக்காரரு வேணா சொல்லட்டும். அனுபவஸ்தர் - அவர் சொல்றது வேணா சரியா இருக்கலாம்!"

- சு. ஜெயேந்திரன்

இப்படி வாதத்தில் எல்லா பண்டிதர்களையும் ஜெயிக்கிறேன் என்று வெறுமே சொல்வது மஹா பாவம் என்கிறது சாஸ்திரம். அவர்களாக வாதுக்கு வந்தால் வாதாடி ஜெயிக்கலாமே யொழிய அனாவசியமாக ஒருத்தரைக் குறைத்து, தான் பெரிய வித்வான் என்று காட்டிக் கொள்வதற்காக மற்றவர்களை பரீக்ஷை பண்ணுவது கூடாது என்கிறது சாஸ்திரம்.

அந்த சாஸ்திரத்தை மீறி வாதுக்குப் போனார் ஆக்கி ஆழ்வார்.

(வளரும்)

உயிர்காத்த



• ஜே.எஸ். ராஜ்குமார்

பெரம்பூர் ரமணா நகரில் வசிக்கும் எஸ்தருக்கு, ஒரு பயங்கரம் நேர்ந்தது. அதைப் பற்றி அவரே சொல்கிறார்...

"அது தீபாவளிக்கு முந்தைய நாள். பாப்டிஸ்ட் கிருத்துவ சபையின் மத போதகராக இருக்கும் என் கணவர், ஜேகராஜு, ஊழியம் செய்யப் புறப்பட்டார். அவருடன் நானும் செல்லத் தயாரானேன். அப்போது ஏப்பம் வருவது போல இருக்கவே, வாயைத் திறந்தேன். சடாரென்று ஒரு பிளாஸ்டிக் மக் அளவுக்கு ரத்தம்... வாந்தியாகப் பீய்ச்சி அடித்தது. மாடிப்படிகளும், என் புடைவையும் ரத்தத்தில் தோய்ந்துவிட, என் கணவர் அலறியே விட்டார். உடனடியாக அருகிலுள்ள அரசு பொது மருத்துவமனைக்குக் கூட்டிச் சென்றார்கள். அங்கே எந்தவிதமான சிகிச்சையும் செய்யாமல், இரவு முழுக்க வைத்திருந்தார்கள். ரத்த வாந்தி நிற்கவேயில்லை. நேரம் கூடகூட, நிலைமை மோசமாகி, ஆசனவாய் வழியாகவும்



• எஸ்தர்



• ஜேகராஜு

தார் போல, கறுப்பாக இரத்தம் வெளியேற ஆரம்பித்தது.

"இது என்ன நோய்? இதற்கு என்ன சிகிச்சை.. யார் தருவார்கள்?" என்று கூட யாரும் பொறுப்பாகப் பதில் தராத சூழ்நிலையில், கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிட்டு வெளியே வந்துவிட்டோம்.

"எங்கே போவது?" என்று தவித்துக் கொண்டிருந்தபோது, கல்யாணி மருத்துவமனையில் பணிபுரியும் என்னுடைய உறவினர் ஒருவர், 'கீழ்பாக்கம் லைஃப் லைன் ஆஸ்பத்திரிக்குப் போங்க' என்று யோசனை தந்தார்.

அங்கே போய்ச் சேர்ந்ததுதான் தெரியும். மற்றதெல்லாம் கடவுள் செயலால் ஏதோ மேஜிக் செய்தது மாதிரி நடந்தன" என்றார் எஸ்தர்.

அவர் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார் எஸ்தரின் கணவர் ஜேகராஜு. "என் மனைவியை லைஃப் லைன் ரிஜிட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போறதுக்குள்ள, பி.பி., பல்ஸ் எல்லாம் மோசமாயிடுச்சு. எங்க நல்ல வேளை, டாக்டர் மாலதிங்கிற என்டோஸ்கோபிஸ்ட் டியூட்டில இருந்தாங்க. என் மனைவியைப் பரிசோதிச்ச அவங்க, 'ஷி ஈஸ் சிங்கிங்... ஜி.ஐ. யூனிட் ப்ரோடகால்'னு உத்தரவிட்டாங்க. ஒருத்தர் ரத்த வங்கிக்கு போன் செய்ய, ஒருத்தர் அனஸ்தடிஸ்ட்டுக்கு போன் செய்ய, நர்ஸுகள் பரபரக்க, ஒருத்தர் டாக்டர் ராஜ்குமாரைத் தொடர்பு கொள்ள நிமிஷத்துல சிகிச்சையைத் தொடங்கிட்டாங்க. டாக்டர் மாலதி என்டோஸ்கோபி செய்யறபோதே, மூக்கிலும், வாயிலும் ரத்தம் பீய்ச்சி அடிக்கவே, நான் ரொம்பவே பயந்துட்டேன்.

'உள்ளுக்குள்ள ரத்தக்கடல் மாதிரி ஒரே சிவப்பா தெரியுதே தவிர, வேறு எதையும் பார்க்க முடியலை. ட்ரை பண்ணுறோம். தைரியமா இருங்க' என்றார் டாக்டர் மாலதி.

'எமர்ஜென்ஸி கேஸ்' என்பதால், டாக்டர் ராஜ்குமார் உடனடியாக விரைந்து வந்தார். அவருக்கு எஸ்தரைப் பார்த்ததுமே விஷயம் புரிந்துவிட்டது. 'இதுக்கு சிரோஸிஸ்னு பேரு. கல்லீரலும் மண்ணீரலும் கெட்டுப் போனதால், ஜி.ஐ. ப்ளீடிங் ஏற்பட்டிருக்கு. நீங்க தொடர்ந்து ஜபம் பண்ணுங்க. நாங்க சிகிச்சை தர்றோம்'

1½ நிமிடம்!

என்று டாக்டர் என் தோளில் தட்டிக் கொடுத்தபோது, நான் நெகிழ்ந்தே போய் விட்டேன்.


'என்கிட்டே இந்த மாச சம்பளப் பணமான மூவாயிரம்தான் இருக்கு!' என்று தயக்கத்துடன் சொன்னேன்.

'பணத்தைப் பற்றிக் கவலைப்படாதீங்க. முதல்ல உயிரைக் காப்பாத்துவோம்'னு சொல்லிட்டாரு.

இரவு ஒன்பதரை மணிக்குத் தொடங்கிய ஆபரேஷன், நள்ளிரவு இரண்டரை மணி வரை விடிய விடிய நடந்தது. தேங்காய் சைஸில் வீங்கியிருந்த மண்ணீரலை, அப்படியே வெட்டி எடுத்து விட்டார்கள். கிட்டத்தட்ட இருபத்தைந்து நாள் தீவிர கண்காணிப்பில் இருந்து, நல்லபடியாக டிஸ்சார்ஜ் ஆனார். இப்போது வயிற்று வலியோ, ரத்த வாந்தியோ இல்லாமல், ஆரோக்கியமாக உள்ளார். நாங்கள் வசதிக் குறைந்தவர்கள் என்பதால், நிறையச் சலுகைகள் தந்து உதவினார் டாக்டர் ராஜ்குமார். என் மனைவிக்கு ஏற்பட்ட நோய்க்குக் காரணம், ஹெபடைடிஸ்-பி வைரஸ் தொற்றுதான் என்று அறிந்ததிலிருந்து, எங்கள் ஜபக் கூட்டங்களிலும் ஹெபடைடிஸ்-பி வைரஸ் விழிப்புணர்வை உண்டாக்கி வருகிறோம்..." என்று முடித்தார் ஜேகராஜ்.



"'பிளட் ஸ்பினாஷ்' என்போம். வாயிலிருந்து ரத்தம் கொட்டும். தொடர்ந்து பீய்ச்சி அடித்தால் 1 1/2 நிமிடத்தில் மொத்த ரத்தமும் காலியாயிடும். அந்தத் தொண்ணூறு விநாடிகளில், போர்ட்டல் வெயினோட பாதையை வெட்டித் தைக்கலைன்னா, உயிருக்கே உலை வைச்சுடும். ஓரளவு நார்மலான கேஸ் என்றால், என்டோஸ்கோபி மூலம் ஒரு 'பேண்ட்' போட்டு ரத்தப்போக்கை நிறுத்திடலாம். ஆனால் எஸ்தர் அம்மாவுக்கு, என்டோஸ்கோபி வழியாக எந்த உறுப்பையும் பார்க்க முடியவில்லை என்பதால், எமர்ஜென்ஸி சர்ஜரிதான் ஒரே வழி. Esophageal Emergency Transection என்ற முறையில் முயற்சி செய்தோம். வயிறைத் திறந்து, ஆற அமர தையல் போட்டுக் கொண்டிருக்க நேரமில்லை என்பதால் இரைப்பையில் சின்ன ஓட்டை போட்டு, 'சக்சக்' என்று டைட்டானியம் மெடல் ஸ்டேப்ளர் போட்டுவிட்டோம். நாங்கள் எதிர்பார்த்த படியே, ரத்தப்போக்கு நின்றது. 'கோல்டன் அவர்' பிரச்னை தீர்ந்ததும், அடுத்து செய்ய வேண்டிய சிகிச்சைகளைக் கவனத்துடன் செய்து முடித்தோம்.



பொதுவாக மொடாக் குடியர்களுக்கே வரும் 'போர்ட்டல் ஹைப்பர் டென்ஷன்' கோளாறு, குடும்பப் பெண்மணியான எஸ்தருக்கு வந்ததற்குக் காரணம்... ஹெபடைடிஸ்-பி வைரஸ் தொற்று. எயிட்ஸைவிடக் கொடுமையான தொற்று நோய் இது. எயிட்ஸால் பாதிக்கப்பட்டு மரணம் அடைபவர்களைவிட,

ஹெபடைடிஸ்-பி வைரஸால் பாதிக்கப்பட்டு இறப்பவர்களின் எண்ணிக்கை 300 மடங்கு அதிகம். இந்தியாவில் மட்டும் சுமார் 6.5 மில்லியன் மக்கள், ஹெபடைட்டிஸ்-பி கிருமியைத் தாங்கிக் கொண்டு நோயைப் பரப்புபவர்களாக இருக்கின்றனர். சுகாதாரமற்ற ஊசிகள், முறைப்படி சோதிக்கப்படாமல் ரத்தம் ஏற்றுதல், தகாத உடலுறவு போன்றவற்றால் இக்கிருமி வெகு வேகமாகப் பரவுகிறது. எயிட்ஸ் கிருமியாவது வெளியில் உள்ள வெப்பநிலைக்கு அழிந்துவிடும். ஆனால் ஹெபடைடிஸ்-பி வைரஸோ, ஒரு மாதத்துக்கும் மேலாக அறையின் வெப்ப நிலையிலேயே தங்கி தொற்றிக் கொள்ளும்.

ஊசி போட்டுக் கொள்ளும்போது, சலூன்களில் முகச்சவரம் செய்யும்போது, காது குத்து, பச்சைக் குத்து போன்ற சமயங்களில் கவனமாக இருக்க வேண்டும்.''



''உப்புமாவுக்கு கன்னடத்திலே உப்பிட், தெலுங்குல உப்புப்பிண்டின்னு பேராமே?''
''அது சரி... நீ செய்ற உப்புமாவுக்கு தமிழ்லேயே என்ன பேருன்னு தெரியலையே!...''
- பம்மல் நாகராஜன்

சரி, எஸ்தருக்கு நேர்ந்தது என்ன...

''கல்லீரலுக்கு வரும் போர்ட்டல் இரத்தக் குழாய் (சிரை) சராசரியாக 9 மி.மீ. பாதரச இரத்த அழுத்தம் உள்ளதாக இருக்கிறது. அதே நேரத்தில் கல்லீரலிலிருந்து கீழ்ப் பெருஞ்சிரைக்கு வெளியேறும் இரத்த அழுத்தம் 0 மி.மீ. பாதரசமாக இருக்கிறது. இந்தக் குறைந்த அழுத்தத்தின் விளைவாக இரத்தம் வெளியேறுவது சுலபமாக இருக்கிறது. அதனால்தான் ஒவ்வொரு நிமிடத்துக்கும் இந்தப் பாதை வழியாக 1.45 லிட்டர் ரத்தம் போய்க் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட போர்ட்டல் மண்டலத்தில் உருவாகும் தடைகளால் 'சிரோஸிஸ்' ஏற்பட்டு கல்லீரல் சுருக்க நோய் அல்லது உறுப்புத் தடிப்புக் கோளாறு வருகிறது.

ஒழுங்கான முறையில் போக்குவரத்து நடக்கும்போது, திடீரென்று போக்குவரத்துத் தடை ஏற்பட்டால், மாற்றுப் பாதையில் திரும்புவது போல, இந்த போர்ட்டல் சிரையில் தடங்கல் ஏற்பட்டால், வழக்கமான பாதையில் போக முடியாமல் தடுமாறும் இரத்தம், அக்கம் பக்கம் என வேறு பாதைகளில் போக ஆரம்பித்து விடுகின்றது. அதன் விளைவாக, இரத்த அழுத்தம் ஏற்பட்டு, உணவுக் குழாய்ப் பாதை சிரைகளில் புடைப்பை ஏற்படுத்தி ரத்தவாந்தி வரவழைக்கும்.

ஹெபடைடிஸ்-பி வைரஸ் தொற்றால், எஸ்தர் அம்மாவின் கல்லீரலும் மண்ணீரலும் முண்டும் முடிச்சுமாகக் கரணை கட்டியிருந்ததால் போர்ட்டல் உயர் இரத்த அழுத்தம் ஏற்பட்டு, இரத்தப் பெருக்கு உருவானது.

மெடிஸின், இன்ஜினியரிங், நூதன யோசனை என மூன்றையும் இணைத்துச் செயல்பட்டதால், எஸ்தரின் உயிர் காப்பாற்றப்பட்டது. இதுவரை அறுபதுக்கும் மேற்பட்ட ஸ்டேப்ளர் சர்ஜரிகளை வெற்றிகரமாகச் செய்திருக்கிறோம்.

ஹெ.பி. தாக்கத்தின் அபாயம் கருதியே உலக சுகாதார அமைப்பு, ஹெபடைடிஸ்-பி தடுப்பூசியை, தேசியத் திட்டமாக அமல்படுத்த வேண்டும் என்று எச்சரிக்கை குரல் தந்திருக்கிறது'' என்கிறார் டாக்டர் ஜே.எஸ். ராஜ்குமார்.

- மினி

கின்னஸ் கிஷன்!

-கவர் ஸ்டோரி





ஜீரோ ஃபிரண்ட்ஸ்!

-அறிவியல் புனைகதை

பரீட்சை டிப்ஸ்...



அஞ்சு பாபி ஜார்ஜ்

-கட்டுரை



வண்ணத் திருவிழா!

-ஹோலி

1000/- ரூபாய் பரிசுப் போட்டி

குழந்தைகளின் குதூகலம்!

கோகுலம்

மார்ச் 2006 ரூ.6/- மட்டுமே



சாவி கையிலே; வெற்றி பையிலே!

அது. அழகான மலைப்பிரதேசம். 'பளிச்' என்று புன்னகை செய்யும் பசுமை. குறுகுறுக்கச் செய்யும் குளிர்காற்று. பிரம்மாண்டமான பாறைகள். அடர்ந்த கூந்தலில் நெளிந்து செல்லும் வகிடு போல வளைந்து வளைந்து போய்க் கொண்டிருந்த சாலையில் ஏறிக் கொண்டிருந்தது அந்தப் பழைய பஸ். குறைந்த எண்ணிக்கையிலேயே பயணிகள் இருந்தனர். அந்த நிறுத்தத்தில் முக்கி முனகி நின்ற பஸ்ஸிலிருந்து இறங்கிக் கொண்டது ஓர் இளஞ்ஜோடி. அவர்கள் காதலர்கள் என்பதைக் கண்கள் சொல்லின. இருவரும் நகர்ந்து கொள்ள, பஸ் மெதுவாய்ப் புறப்பட்டது. அப்போதுதான் அந்த விபரீதம் நிகழ்ந்தது. பாறையிலிருந்து ஸ்லோமோஷனில் உருண்டு வந்த பெரிய பாறை பஸ்மீது விழுந்தது. அவ்வளவுதான். அதிலிருந்த அத்தனைப் பயணிகளும் இறந்துவிட்டனர்.

கலங்கிப்போன காதலியின் கைகளைப் பற்றிக் கொண்டு காதலன் சொன்னான், "இப்படி ஆகுமென்று தெரிந்திருந்தால் நாம் பேருந்திலிருந்து இறங்காமலேயே இருந்திருக்கலாம்." ஏன் அப்படிச் சொன்னான்?

உடனே நம்மில் பலருக்கு மனத்தில் 'புன்னகை மன்னன்' பாடல் காட்சிதான் ஓடும். 'என்ன சத்தம் இந்த நேரம்' என்று பாடிவிட்டுத் தற்கொலை செய்துகொள்ள வந்திருப்பார்கள். பாறை விழுந்த சத்தம் கேட்டுப் பதறி நிற்கிறார்கள் என்றுதான் எண்ணுவோம். உண்மை அதுவல்ல.

இருவருமே வாழ விரும்பும் காதலர்கள் தான். அவர்கள் என்ன நினைக்கிறார்கள் தெரியுமா? "நாம் இருவர் இறங்கத்தான் பஸ் நின்றது. அது நின்று, பிறகு கிளம்புவதற்குள் பாறை உருண்டு விழுந்தது. நாம் இறங்காமலேயே இருந்திருந்தால் அந்த இடத்தை பஸ் கடந்திருக்கும். அதற்குப் பிறகுதான் பாறை விழுந்திருக்கும். அத்தனை பேரும் தப்பித்திருப்பார்கள்" என்ற கோணத்தில் சொல்லப்பட்டது தான் அந்த வாக்கியம்.

இது, இப்போது இணையத்தில் வலம் வரும் விடுகதைகளில் ஒன்று. ஒரு சம்பவத்தையோ, அப்போது பேசப்பட்ட வாக்கியத்தையோ நாம் எப்படி அணுகுகிறோம் என்பதைப் பொறுத்துதான் எல்லாமே அமைகிறது. ஆமாம்! மகத்தான வித்தியாசங்களை அணுகுமுறைதான் ஏற்படுத்துகிறது.

போட்டிகள் நிறைந்த உலகமிது. இளைஞர்களெல்லாமே ஒரே விதமான வெறியோடு படிக்கிறார்கள். ஏறக்குறைய சமமான அளவில் மதிப்பெண்கள் பெறுகிறார்கள். இவர்களில், வித்தியாசமான அணுகுமுறை கொண்டவர்கள்தான் ஜெயிக்கிறார்கள்.

இதில் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். வித்தியாசமாய்ச் செய்வது வேறு. வில்லங்கமாய்ச் செய்வது வேறு. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், சென்னையில் 'பிஃப்த் எஸ்டேட் கம்யூனிகேஷன்ஸ்' என்கிற விளம்பர நிறுவனத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன்.

வெவ்வேறு நிறுவனங்களிலிருந்து விற்பனைப் பிரதிநிதிகள் வருவார்கள். அனுமதி பெற்று உரியவர்களைச் சந்திப்பார்கள். இது வாடிக்கையாய் நடக்கிற விஷயம். ஓர் இளைஞருக்கு வித்தியாசமாய்ச் செய்கிற ஆசை

மரபின் மைந்தன் முத்தையா

வானவில் வயசு - 7



படம் : சுதிப்டா சண்முகம்

நினைத்துக் கொண்டு வில்லங்கமாய்ச் செய்வது.

வந்துவிட்டது. அவர் விற்பனை செய்த விஷயம் என்ன தெரியுமா? காலேஜ், டீனேஜ் பெண்களின் செல்லச் சிநேகிதனான டெடி பேர். அதைத் தூக்கிக் கொண்டு வந்து எங்கள் அலுவலகத்தில் விற்க வேண்டுமென்று அவருக்கு எப்படியோ தோன்றிவிட்டது. அதையாவது அவர் சரியாகச் செய்திருக்கலாம்.

காலை 11.30 மணி. அலுவலகம் மும்முரமாக இயங்கிக் கொண்டிருந்தபோது உற்சாக அலறலுடன் உள்ளே நுழைந்தார் மனிதர். "ஊஊ" "ஊஉவ்" என்று ஊளையிட்டுக் கொண்டே ஒவ்வோர் இருக்கையாக நெருங்கி எல்லோர் முகங்களுக்கும் முன்பு கரடி பொம்மையை ஆட்டினார். அவர் கழுத்தில் ஒரு கை விழுந்தது. எங்கள் நிறுவனத்தின் மூத்த அதிகாரி ஒருவர் அவரை இழுத்துக்கொண்டு போய் வாசலில் விட்டார். அலுவலகங்களில் புகுந்து அத்துமீறி நடந்ததால் அவரது விற்பனை மையத்துக்குப் புகார் கடிதமொன்றும் போனது.

இதுதான் வித்தியாசமாய்ச் செய்வதாக நினைத்துக் கொண்டு வில்லங்கமாய்ச் செய்வது.

அணுகுமுறையில் வித்தியாசம் என்பது, விற்பனை உத்தியோ விளம்பர உத்தியோ அல்ல. ஒன்றில் நாம் காட்டுகிற அதிகபட்ச அக்கறையின் வெளிப்பாடு. நம் ஆசிரியர் தருகிற புராஜக்ட் தொடங்கி ஆசை ஆசையாய்ச் செய்கிற வேலை வரை எதுவாக இருந்தாலும், அதில் நமக்கு அதிகபட்ச அக்கறை இருக்குமானால், அதுவே வித்தியாசமான அணுகுமுறைக்கு வித்திடும்.

இன்று மார்க்கெட்டிங் துறையில் வாய்ப்புகள் விரிவடைந்து கொண்டே போகிறபோது இத்தகைய புதுமைகள், வாடிக்கையாளரால் நேசிக்கப்படும் விற்பனைப் பிரதிநிதியாக விளங்கப் பெரிதும் கைகொடுக்கிறது.

அப்படித்தான் அமெரிக்காவில் ஒரு விற்பனைப் பிரதிநிதி, மருத்துவமனைகளுக்கு வேண்டிய உபகரணங்களை விற்பனை செய்து கொண்டிருந்தார். அவரது துறையில் போட்டிகள் அதிகம். புகழ் பெற்ற மருத்துவர் ஒருவரைச் சந்திக்க நேரம் கேட்டு அலையோ
அலையென்று
அலைந்து

"நம்ம வீரோ வீட்ல அடிக்கடி ரெய்டு நடந்தது தப்பாப் போச்சு!"
"ஏன்?"
"'ரெய்டு சமயங்களில் நடந்து கொள்வது எப்படி' னு புக் எழுத ஆரம்பிச்சுட்டாரு!"
- அம்பை தேவா

கொண்டிருந்தார். அந்த மருத்துவரோ, ஆபத்தான கட்டத்தில் இருக்கும் நோயாளிகளுக்குக் கூட ஆறு மாதங்கள் கழித்து அப்பாய்ன்ட்மெண்ட் தரும் அளவு படு பிஸியான மனிதர்.

தினம் தினம் சென்று காத்திருப்பதால் மருத்துவமனை அலுவலர்கள் அனைவருக்கும் நண்பர்களாகி விட்டார் அந்த விற்பனைப் பிரதிநிதி. தான் சந்திக்க விரும்பும் புகழ் பெற்ற மருத்துவர், ஜாகிங் கிளப்பில் படு ஆர்வமான பேர்வழி என்று மருத்துவமனை அலுவலர் மூலம் தெரிந்து கொண்டார். அவ்வளவுதான். அடுத்த



நாளே இவரும் ஜாகிங் கிளப்பில் சேர்ந்துவிட்டார். புதிய உறுப்பினர் என்ற நிலையில் இருந்துகொண்டே பல விஷயங்களை இழுத்துப் போட்டுக் கொண்டு தானாகவே செய்தார். நோயாளிகள் நலவாழ்வு நிதிக்காக "ரேஸ் ஃபார் தி க்யூர்" என்ற 5 கி.மீ. ஓட்டப் பந்தயத்தை முன்னின்று நடத்தினார். ஓரிரு மாதங்களிலேயே அந்த மருத்துவருக்கு மிக நெருங்கிய நண்பரானார். அதுவரையில் தன் பிசினஸ் பற்றி மூச்சே விடாமல் பழகி வந்தார் என்பதுதான் அந்த விற்பனைப் பிரதிநிதியின் மற்றுமொரு சாமர்த்தியம்.

இன்று நடுத்தர வயதுக்காரர்களை நெருங்கிக் கேளுங்கள். தாங்கள் சாதித்துக் காட்டியவை பற்றிய பெருமிதம் இருப்பது போலவே கோட்டைவிட்ட சின்னச் சின்ன வெற்றிகள் பற்றிய வருத்தமும் இருக்கும். "அதை மட்டும் வேறு மாதிரியாக அணுகி இருந்தால் கதையே வேறு" என்ற ரீதியில் ஏராளமான கதைகள் சொல்வார்கள்.

"என் வாழ்க்கையை மட்டும் மறுபடி வாழ முடிந்தால்" என்று ஆங்கிலத்தில் ஒரு புத்தகம் உள்ளது. குரோனோ-டி-வொர்ட்ஸ்-யு-லேக் என்ற அரை மைல் நீளப் பெயர் கொண்ட மனிதர் எழுதியிருக்கிறார். பெயர்தான் நீளமே தவிர, இரண்டு இரண்டு வரிகள் கொண்ட கவிதைகள் அவற்றில் உள்ளன. இவற்றுக்கு 'ரைமோ' என்று பெயர் சூட்டியிருக்கிறார்.

'வாழ்வின் ஆரம்பத்திலிருந்தே பிரார்த்தனையை அங்கமாக்கிவிடுவேன்.'

'வெட்டி அரட்டைகளை விட்டுவிட்டு செய்ய வேண்டியதைச் செய்வேன்.'

'அட்டையை மட்டும் பார்த்து விட்டுப் புத்தகத்தை எடைபோட மாட்டேன்.'

'மதில்மேல் பூனையாய் இருப்பதைக் காட்டிலும் முடிவுகள் எடுப்பதில் முந்திக் கொள்வேன்' என்கிற ரீதியில் இந்தப் பட்டியல் நீள்கிறது.

பொதுவாகவே இளைஞர்களுக்குப் பெரியவர்கள் மீது நிறைய புகார்கள் இருக்கும். அவர்கள் செய்திருக்க வேண்டும் என்று நினைப்பதையெல்லாம் நீங்கள் செய்யத் தொடங்குங்கள்.

எத்தனை கடினமான பூட்டையும் வித்தியாசமான அணுகுமுறை என்ற மந்திரச்சாவி திறந்துவிடும். வித்தியாசமான சிந்தனைகளின் விளைநிலம், உற்சாகமான உள்ளம். உண்மையான அக்கறை. ஊசி முனைக் காதுக்குள் ஒட்டகங்கள் நுழைய முடியாமல் இருக்கலாம். உற்சாகம் நுழைந்துவிடும்.

(தொடரும்)

அருள்வாக்கு



"தர்ம பலனும் இருக்கணும்!"

ஒரு யஜமானன் கட்டளை இடுவது போல் 'சத்தியம் பேசு; தர்மமாக நட' என்று வேதம் ஆக்ஞை பிறப்பிக்கும். இதற்கு 'பிரபு ஸம்மிதை' என்று பெயர். இதையே நண்பன் எடுத்துச் சொல்கிற மாதிரி புராணங்கள் கதா ரூபத்தில் விளக்கும். இதற்கு 'ஸுஹ்ருத் ஸம்மிதை' எனப் பெயர். கதையானாலும் புராணம் செய்த ரிஷிகளும் தர்மத்தை ரொம்பவும் வெளிப்படையாகவே வலியுறுத்திக் கொண்டு போவார்கள் - 'ஸுஹ்ருத்' அல்லது நீதிமானான நண்பன் பேசுகிற பாணியில். இதை விட ஹிதமாகவும் மதுரமாகவும் தர்மத்தைச் சர்க்கரையில் தோய்த்த மாத்திரை மாதிரிக் கதையில் தோய்த்துச் சொல்கிறவன் கவி. நம் நாக்குக்குச் சர்க்கரை ருசிதான் தெரியும்; மருந்துச் சரக்கு இருப்பதே தெரியாது. வயிற்றுக்குள் போய்த்தான் அது வேலை செய்யும். இம்மாதிரி காவியரஸத்தை நாம் அநுபவிக்கிறபோது நமக்குத் தெரியாமலே நமக்குள் தர்மங்கள் ஊறுகிற விதத்தில் கவி பேசுவான். காவியத்தை 'காந்தா ஸம்மிதை' என்பார்கள் - அதாவது அது பிரிய பத்தினியின் வாக்கு மாதிரி என்று அர்த்தம்.

உயர்ந்த கவி, மகத்தான தர்மங்களையும் தத்துவங்களையும் நவரஸத்தில் தோய்த்து மிகவும் ரஞ்ஜகமாகக் கொடுத்து விடுகிறான். இலக்கிய உலகத்தில் இருப்பவர்கள் இதையே ஸ்வதர்மமாகக் கொள்ள வேண்டும் - வெறும் ரஞ்ஜகமாக மட்டுமல்லாமல் அதற்குள் தர்மமான பலனும் இருக்கிற மாதிரி எழுத வேண்டும். படிக்கிறவனை அப்போதைக்குச் சந்தோஷப்படுத்துவதோடு நில்லாமல், அவனை உயர்த்துகிற விதத்தில் எழுத வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

இரயில்!

ஜெ. முனுசாமி



முதல் காதலைப் போல்
பரவசப்படுத்திப் போகிறது
முதல் இரயில் பயணம்


காலையில் விழுங்கும் கிராமங்களை
மாலையில் துப்பிவிடுகின்றன
தினமும் வாடகையின்றிக்
கடைகளை விடுகின்றன
கட்டணமின்றி சபாக்களை
வழங்குகின்றன
சீட்டு கிளப்புகளையும்
டாஸ்மாக் பார்களையும்
தன்னகத்தே வைத்திருக்கின்றன
புறநகர் இரயில்கள்...
வெறும் இரயில்களல்ல!

உள்ளேயும் வெளியேயும் தள்ளி
விளையாடிப் போகிறார்கள் அவர்கள்
யாரோ ஒருவனை
விளையாட அழைத்துக் கொள்கிறது மரணம்!


விழிகளால் இவ்வுலகை
உணரவியலா அவர்கள்
யாசித்தபடி கடக்கிறார்கள்
ஒவ்வொரு பெட்டியாய்
கருநீலப் பையை மாட்டியிருக்கும் அவன்
சிறுபறை இசைத்துச் செல்பவனின்
தோளைப் பற்றியபடி
தொடர்கிறான் மற்றொருவன்
தொடர்வண்டிக்குள் தொடர்வண்டியாய்

தண்டவாளமற்ற தெருவில் பயணித்த
எங்கள் இரயில்கள்
முச்சந்தியில் சிதைந்து கிடக்கின்றன
மானிட்டரில் ஓடிக் கொண்டிருக்கிறது
குட்டி தேவதைகளுக்கான இரயில்.

நடக்குமென்பார்; நடக்கும்!



19.2.2006 முதல்
25.2.2006 வரை



தஞ்சை பரத்வாஜ்

மேஷம்: பணப் பற்றாக்குறை வராது. தடைகள் விலகும். திருமண காரியம் கைகூடும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். நண்பர் / உறவினர் மூலம் அனுகூலம் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் தெரியும். புதிய தொழில் தொடங்கலாம். குழந்தைப்பேறு ஏற்படும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். குழந்தைகளால் சந்தோஷம் ஏற்படும். உத்தியோகத்தில் பதவி உயர்வு, இடமாற்றம் ரெடி. மனசலனம் தீரும். ஆஞ்சநேயரை வழிபட்டு வருதல் நற்பலனைத் தரும்.

ரிஷபம் : எதிர்ப்பு, தொல்லைகள் இராது. குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். ஆரோக்கியம் பாதிப்புத் தராது. நெருங்கிய உறவினர் / நண்பர்கள் விலகிச் செல்வார்கள். வேலையில் இடமாற்றம் ரெடி. குழந்தைகளால் மனக்கவலை இருக்கும். குடும்பத்தில் சுறுசுறுப்பான சூழ்நிலை தெரியும். நீண்டநாள் மனக்கவலை தீரும். வழக்கு வெற்றிப் பாதையில் செல்லும். ராகு / கேது / குரு வழிபாடு செய்து வரவும்.

மிதுனம்: சுபகாரியம் கைகூடும். நண்பர் / உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். பணகஷ்டம் இராது. குடும்



● நான் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்குமா? எனது எதிர்காலம் எப்படி அமையும்?

- பெரி. சுப்பிரமணியம், கோவை - 6

தங்களுக்கு சுக்ரதசை நடந்து வருகிறது. சுக்ர தசை முடிவடைந்து சூரியதசையில் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். மேலும் கடன் வாங்காமல் இருப்பது எதிர் காலத்தில் நல்ல பலனைத் தரும். 30.10.2006-க்குப் பிறகு மன அமைதி ஏற்படும்.

● எனது மகளுக்குத் திருமணம் எப்போது நடைபெறும்?

- எஸ்.எம்.பாண்டியன், மதுரை

உங்கள் பெண்ணுக்கு 2006-ல் திருமணம் முடியும். நன்கு படித்த, வேலை யிலுள்ள வரன் அமையும். மகளது எதிர் காலம் பிரகாசமாக இருக்கும். பரிகாரம் தேவை இல்லை.

● என் பேரனின் திருமணம் / தொழில் பற்றிக் கூறவும்?

- யோகநாதன், பெரியகாஞ்சிபுரம்

தங்கள் பேரனுக்கு 23 வயது நடக்கிறது. சுக்ரதசை முடிவடைந்து சூரிய தசை நன்றாக இருக்கும். இல்லற வாழ்வு நன்றாக அமையும். நாகதோஷம் உள்ள பெண்ணைப் செலுத்தவும். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையுடன் செயல்படவும். சுபகாரியப் பேச்சு வார்த்தைகள் இனிதே முடியும். நெருங்கிய கூட்டாளிகள் மீது கவனம் தேவை. உணவுக் கட்டுப்பாடு அவசியம். வியா பாரத்தில் சற்று முன்னேற்றம் ஏற்படும். ராகு / கேது / சனி / குரு வழிபட்டு வருதல் நற்பலனைத் தரும்.

பரத்வாஜ் பதில்கள்

பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். குழந்தை கள் வழியில் சந்தோஷம் ஏற்படும். தாயின் உடல் நிலையில் கவனம் தேவை. கணவன் - மனைவி உறவு நற்பலனைத் தரும். குழந்தை பாக்கியம் கிட்டும். வெளிநாட்டு அழைப்பு வந்து சேரும். வியாபாரத்தில் அபரிமிதமான லாபம் ஈட்டலாம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். ராகு / கேது / வழிபட்டு வருதல் நற்பலனைத் தரும்.

கடகம் : வீடு / வாசல் வாங்க நல்ல நேரம். நல்லவர் தொடர்பு கிட்டும். நண்பர் / உறவினர்களால் ஆதாயம் கிட்டும். திருமண காரியம் கைகூடும். உத்தியோ கத்தில் நல்ல மாற்றம் வரும். தூர தேசம் செல்லும் வாய்ப்பு அணுகும். வாக்கு வன்மை மேலோங்கும். குழந்தைகளால் நல்லது நடக்கும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். ஆரோக்கியம் பாதிக்காது. வியாபாரத்தில் மேன்மை அடைவீர்கள். ஆஞ்சநேயர் வழிபாடு நற்பலனைத் தரும். குரு வழிபாடு செய்து வரவும்.

சிம்மம் : பண வரவு காத்திருக்கிறது. அநாமத்து பொருள்கள் வந்து சேரும். குடும்ப வாழ்வில் விட்டுக் கொடுத்துப் போவது, கணவன் - மனைவிக்குள் வரும் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. கைப் பொருள்கள் மீது கவனம் அவசியம். யாருக்கும் ஜாமீன் போட வேண்டாம். வண்டி வாகனத்தில் போகும்போது கவனம்

கன்னி : வாக்கு, தனம், கல்வி வளம் மேலோங்கும். கணவன் - மனைவி ஒற்று மையுடன் வாழ்வார்கள். குழந்தைப்பேறு ஏற்படும். வேலையில் நல்ல ஊதிய உயர்வு, இடமாற்றம் ஏற்படும். புதிய தொழில் துவங்க ஏற்ற காலம். வீடு, மனை வாங்க நல்ல நேரம். பண கஷ்டம் வராது. நண்பர், உறவினர் மூலம் ஆதாயம் கிட்டும். திருமணத் தடங்கல் விலகும். செலவுகள் இருக்கும். ராகு / கேது வழிபாடு செய்து வரவும்.

துலாம் : வழக்கு வெற்றி பெறும். பொரு ளாதார முன்னேற்றம் கிட்டும். உடல் நிலை யில் கவனம் தேவை. உத்தியோகத்தில் நல்ல மாற்றம் ஏற்படும். புதிய வேலை கிடைக்கும். வியாபாரத்தில் அபரிமிதமான வருமானம் கிட்டும். மன சலனம் தீரும். குழந்தைகளால் சந்தோஷம் கிட்டும். வீடு, வாசல் மாற்றி அமைப்பதோ (அ) வாங்குவதோ நடக்கும். நண்பர் மூலம் உதவி ஏற்படும். புதிய தொழில் முயற்சி கைகூடும். ஆஞ்சநேயர் வழிபாடு செய்து வரவும். சுந்தரகாண்டம் படிக்கவும். நற்பலனைத் தரும்.

விருச்சிகம் : பொருளாதாரம் பலப்படும். கணவன் - மனைவி உறவு நற்பலனைத் தரும். வாக்குவன்மை மேலோங்கும். வீடு, மனை வாங்கலாம். புதிய தொழில் துவங்க லாம். உடல்நிலை பாதிக்காது. குழந்தைகள்

பார்க்கவும். வெளிநாட்டு நிறுவனத்தில் வேலை கிடைக்கும். சொந்தத் தொழில் செய்யும் யோகமில்லை.

● என் மகனின் திருமணம் எப்போது? சுயதொழில் செய்தால் முன்னேற்றம் உண்டா?

- எஸ். ஞானாம்பாள், திருமுல்லைவாயில்

உங்கள் பையனுக்குத் திருமணத்தால் தொழில் முன்னேற்றம் ஏற்படும். நல்ல, படித்த, பண்புள்ள வரன் அமையும். மனைவி மூலம் ஆதாயம் கிட்டும். பரிகாரம் தேவையில்லை.

● என் மகனுக்கு வெளிநாடு சென்று வேலை பார்க்கும் வாய்ப்புள்ளதா? திருமணம் எப்போது நடக்கும்?

- ஜி.கணேசன், கும்பகோணம்

தங்கள் மகனுக்கு ராகுதசை நடக்கிறது. வெளிநாடு சென்று பணியாற்றுவான். 2006-ல் திருமணம் முடியும். நாக தோஷம் உள்ள ஜாதகமாகப் பார்க்கவும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும்.






வழியில் சுபச் செலவுகள் வரும். திருமண காரியம் கைகூடும். பத்திரிகைகளில் பெயர் வரும். பூர்விக சொத்துகள் பாகப் பிரிவினை ஆகும். ராகு / கேது வழிபடுதல் நன்மை தரும்.



தனுசு : செல்வாக்கு பெற்ற வாரம். சுப காரியம் கைகூடும். கல்வியில் வளர்ச்சி கிட்டும். தன பிராப்தி கிடைக்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். குழந்தைப் பேறு கிட்டும். தொழில்துறையில் நல்ல மாற்றம் ஏற்படும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். மனத்தில் தைரியம், புதுதெம்பு பிறக்கும். உத்தியோகத்தில் மாறுதல் ரெடி. உடல்நிலை பாதிக்காது. வண்டி, வாகனம், வீடு வாங்க ஏற்ற தருணம். மறைமுக எதிரிகளால் பிரச்னை இல்லை. அந்தஸ்து உயரும். ராகு / கேது / சனி வழிபாடு சிறந்தது.

மகரம் : உடல்நிலை நன்றாக இருக்கும். செலவுகள் சுபமானதாக இருக்கும். எதிர்ப்பு, தொல்லை குறையும். திருமண காரியம் கைகூடும். புண்ணிய மகான் சந்திப்பு கிட்டும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். குழந்தைகளால் மன அமைதி ஏற்படும். உத்தியோகத்தில் உயர்வு / மாற்றம் ஏற்படும். மகப்பேறு பாக்கியம் உண்டாகும். பேச்சில் கவனம் அவசியம். வியாபாரத்தில் நல்ல முற்போக்கான நிலை தெரியும். சனி / குரு வழிபாடு செய்து வர நற்பலன் கிடைக்கும்.

கும்பம் : பணப் பற்றாக்குறை தீரும். சொத்துக்கள் வாங்கலாம். புதிய பதவி தேடிவரும். நீண்ட தூர பிரயாணம் நற்பலனை அளிக்கும். எதிர்பாராத தன வரவு ஏற்படும். வெளிநாட்டு அழைப்புக் கிட்டும். குழந்தைப் பேறு பெறும் பாக்கியம் கிட்டும். திருமணம் கைகூடும். கணவன் மனைவிக்குள் அனுசரணை தேவை. வண்டி வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை. கைப்பொருள் மீது கவனம் தேவை. வாக்குவாதம் தவிர்க்கவும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வியாபாரிகளுக்கு நல்ல பொருளாதார விருத்தி கிட்டும். ராகு / கேதுவை வழிபட்டு வருதல் நற்பலனைத் தரும்.

மீனம் : எதிலும் பொறுமை, நிதானத்துடன் செயல்பட வேண்டும். கணவன் – மனைவி விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. செலவுகள் பய முறுத்துவதாக இருக்கும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். வேலைப் பளு அதிகரிக்கும். புதிய வேலை கிடைக்கும். ராகு / கேது / குரு வழிபாடு நற்பலனைத் தரும்.


அய்யோ


• விஜயா • வேம்பு

பேருந்தை விட்டு இறங்கியவுடனே, குண்டுங் குழிகளுமான சாலைகள் தான் முதலில் வரவேற்கின்றன. "இந்தச் சாலைக் குளங்களை யாரும் தூர் வாரவில்லையா?" என்று அப்பாவித்தனமாய் எதிர்ப்பட்ட நபர் ஒருவரிடம் கேட்டு வைத்தோம். "இந்த ரோட்டுக்கு பஞ்சர் பார்த்து அஞ்சு வருஷம் ஆச்சு. அப்புறம் ரோடு எப்படிக் கிடக்கும். நீங்களே பார்த்துக்க வேண்டியதுதான்'' என்றார், பெயர் சொல்லவே மறுத்து விட்ட ஆண்டிமட வாசி ஒருவர்.

ஆண்டிமடத்தில் செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் முப்பது பஞ்சாயத்து. ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் முப்பது பஞ்சாயத்து. இவற்றுள் பெரிதும், சின்னதுமாக சுமார் முந்நூறு கிராமங்கள். எழுபது சதவிகிதம் முந்திரிக் காடுகள். மீதமுள்ள பகுதிகளில் கரும்பும், அபூர்வமாய் செந்நெல்லும் எட்டிப் பார்க்கின்றன. மக்களை நிழல் போலத் தொடர்கிறது. வெளிப்படையாய் இனங்காட்டிட இயலாத கந்து வட்டி!

தொகுதியெங்கிலும் பரவலாக சாலை வசதிகள் என்பது படுமோசம்.

தொகுதி விசிட் 5

இத்தனைக்கும் இந்த ஊரை மையப் புள்ளியாகக் கொண்டு மூன்று வழிகளில் போக்குவரத்துத் தடங்கள் பிரிந்து செல்கின்றன. விருத்தாசலம் – உளுந்தூர்பேட்டை வழியாக சென்னை. ஸ்ரீ முஷ்ணம் வழியாக பண்ருட்டி. காட்டுமன்னார்குடி வழியாக சிதம்பரம். கும்பகோணம், அரியலூர், பெரம்பலூர் போன்ற இடங்களிலிருந்து புறப்பட்டு வரும் வெளியூர் பேருந்துகள் ஆண்டிமடம் வழியாகவே செல்கின்றன.

இங்கு பஸ் ஸ்டாண்ட் ஒன்று இருக்கின்றது. அதனைப் பயன்படுத்துவது இல்லை. ஒரு பழங்கால புராதனச் சின்னம் போல கல்வெட்டு ஒன்றுடன் காட்சியளிக்கிறது பஸ் ஸ்டாண்ட். பஸ் ஸ்டாண்ட் என்றில்லை, வெளியூர்க்காரர்களுக்கும் சரி, உள்ளூர்க்காரர்களுக்கும் சரி, பயன்படுத்திக்கொள்ள என்று பொதுக் கழிப்பிட வசதிகள் ஆண்டிமடத்தில் எங்குமே இல்லை.


• கே. நாகரத்தினம்


• கா. வைத்தி


• என்.கலியமூர்த்தி


• கலியபெருமாள்

"1996-ல் பா.ம.க சார்பில் பேராசிரியர் தீரன், 2001-ல் பா.ம.க சார்பில் காடுவெட்டி குரு ஆகியோர் வெற்றி பெற்ற தொகுதி இது. கடந்த பத்து ஆண்டுகளில் ஆண்டிமடம் பகுதிகளில் தொகுதி வளர்ச்சிப் பணிகள் என்று எதுவுமே நடைபெறவில்லை. சுருக்கமாகச் சொல்லப்போனால் கடந்த பத்து ஆண்டுகளும் ஆண்டிமடம் தொகுதியின் இருண்ட காலம் என்றே கூறலாம்!'' என்கிறார் அய்யூர் கிராமப் பஞ்சாயத்து தலைவர் என். கலியமூர்த்தி. அதனை அப்படியே ஆமோதிப்பது போலிருக்கிறது இன்னொருவரின் பேச்சு. ''அழகாபுரம் ஒலையூர் ரோடு ஐந்து கி.மீ. நீளம். பத்து வருடங்களாகப் பராமரிப்பு ஏதுமின்றிக்

ாவம், ஆண்டிமடம்!

கிடக்கிறது. பெரம்பலூர் மாவட்டத்திலேயே மிக மிக மோசமான சாலை என்று தேர்வு செய்தால், அதில் முதல் பரிசு பெற்று விடும் அழகாபுரம் சாலை!" எனக் குறிப்பிடுகிறார் கிராம விவசாயி கலிய பெருமாள்.

கடந்த தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க பங்கு பெற்றிருந்தது. தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் கோட்டைக்காடு ஞானமூர்த்தியைக் காட்டிலும் இருபத்து ஏழாயிரம் வாக்குகள் அதிகம் பெற்று வெற்றியடைந்தவர் பா.ம.கவின் காடுவெட்டி குரு. மாநில வன்னியர் சங்கத் தலைவர். மாநிலப் பொறுப்பும், எம்.எல்.ஏ பதவியும் அவரை சென்னைக்கும் காடுவெட்டிக்குமாகப் பயணம் செய்ய வைத்து விட்டது. அதனால் தொகுதிப் பக்கம் தங்கள் எம்.எல்.ஏவை அடிக்கடி அடையாளம் கண்டு கொள்ளும் வாய்ப்பு இல்லாது போனது எனக் கூறுகின்றனர் தொகுதிப் பொதுமக்கள்.

தொகுதி வளர்ச்சி மிகவும் பலவீனமாய் இருந்து வருவதற்கு, கடந்த பதினெட்டு ஆண்டுகளாக ஆளுங்கட்சி அல்லது அதன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் எவருமே இல்லாததும் ஒரு காரணம் எனச் சொல்லப்படுகிறது.

"பா.ம.க சட்டமன்ற உறுப்பினர் வெற்றி பெற்றுச் சென்றதோடு சரி, அதன் பிறகு தொகுதிப் பணிக்கு என்று, தொகுதி வளர்ச்சிப் பணி நிகழ்ச்சிகள் எதிலும் கலந்து கொள்வதில்லை. அதனால் பா.ம.க. உறுப்பினருக்குத் தொகுதி மக்கள், மீண்டும் வாக்களிக்கும் எண்ணத்தில் இல்லை. அந்த வெறுப்பு முழுவதும் அ.தி.மு.க. ஆதரவு வோட்டுகளாக மாறி விடும்!" என்கிறார் ஆண்டிமடம் ஊராட்சி மன்றத் தலைவர் (அ.தி.மு.க) பெ.ஜெயராமன்.

"எப்பவுமே எங்கள் வோட்டு அம்மாவுக்குத்தான். அவங்களோட துணிச்சல், தன்னம்பிக்கை அசாத்தியமானது" என்கின்றனர். கவரப்பாளையம் கிராமத்தில் மளிகைக் கடை நடத்தி வரும் நா. விஜயா மற்றும் மகளிர் சுய உதவிக்குழு ஒன்றினில் உறுப்பினரான மோ. வேம்பு ஆகிய இருவரும்.



• இருண்டு கிடக்கும் ஆண்டிமடம் எம்.எல்.ஏ. ஆபீஸ்!






• பயன்படுத்தப்படாத ஆண்டிமடம் பஸ் ஸ்டாண்ட்!

"1984 முதல் 87வரை ஆண்டிமடம் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவன் நான். அதன் பின்னர் இந்தத் தொகுதியில் அ.தி.மு.க. போட்டியிடவே இல்லை. அந்த எம்.எல்.ஏ. பீரியடில் சாலை வசதிகள், குடிநீர் வசதிகள் அனைத்தையும் முன்னுரிமை தந்து செயலாற்றினேன். கடந்த பதினெட்டு ஆண்டுகளில் இந்தத் தொகுதி மிகவும் பின்தங்கிப் போய் விட்டது. அதனால் தொகுதி மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர். இந்த முறை அ.தி.மு.க. வேட்பாளர் ஆண்டிமடத்தில் வெற்றிபெற வாய்ப்புகள் அதிகம்!" என்கிறார் தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தில்லை காந்தி.

தொகுதிக்குள் நிலவுகின்ற அதிருப்தி மற்றும் ஜெயங்கொண்டம் தொகுதிக்குள் அடியெடுத்து வைக்கவிருக்கின்ற நிலக்கரிச் சுரங்கப் பணிகள் இரண்டையும் மனசுக்குள் வைத்துக்கொண்டு இந்த முறை பா.ம.கவின் காடுவெட்டி குரு, ஜெயங்கொண்டம் தொகுதிக்கு மாறிப் போகலாம் என்கிற பேச்சு தொகுதிக்குள் பரவலாக உலா வருகிறது. அவ்வாறு ஜெயங்கொண்டம் தொகுதி பா.ம.கவுக்கு ஒதுக்கப்படும் பட்சத்தில், இங்கு தி.மு.க. - அ.தி.மு.க. நேரடிப் போட்டி நிகழ வாய்ப்பிருக்கிறது.


• தில்லை காந்தி


• எஸ்.சிவசுப்பிரமணியன்


• பெ. ஜெயராமன்

தி.மு.க.வின் முன்னாள் ராஜ்ய சபா உறுப்பினரும், தி.மு.க மாவட்ட அவைத்தலைவருமான எஸ். சிவசுப்பிரமணியனின் மகன் சிவசங்கர், தி.மு.க. வேட்பாளராகக் களமிறக்கப்படலாம். ஆனால், சிவசுப்பிரமணியன் மீது தொகுதி மக்களிடம் சற்றே வெறுப்புணர்வு மேலோங்கியுள்ளது. காரணம், அவரது ராஜ்ய சபா உறுப்பினரின் ஆறு வருட தொகுதி மேம்பாட்டு வளர்ச்சியின் பெரும் பகுதியை ஆண்டிமடம் சட்டமன்ற தொகுதிக்கு வெளியேதான் செலவிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.


"தொகுதியில் வெற்றி என்பது கூட்டணிக் கட்சிகளின் பலத்தைப் பொறுத்துதான். அந்த வகையில் கலைஞர் அடையாளம் காட்டும் வேட்பாளர் ஆண்டிமடத்தில் வெற்றி பெறுவார் என்பது உறுதி!" என்கிறார் பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் எஸ். சிவசுப்பிரமணியன்.

பா.ம.க சட்டமன்ற உறுப்பினர் காடுவெட்டி குரு, கடந்த ஐந்து ஆண்டுகளில் தொகுதி வளர்ச்சிக்கென பெரிய அளவில் ஏதும் செய்துவிடவில்லை.

"தி.மு.க, பா.ம.க, காங், கம்யூனிஸ்ட், ம.தி.மு.க. ஆகிய கட்சிகளுக்கு நிரந்தர வாக்கு வங்கி இங்கு உள்ளது. அதனால் இப்போதிருக்கும் தி.மு.க. கூட்டணிக் கட்சி வேட்பாளரே இங்கு வெற்றி பெற வாய்ப்புகள் வெகு வெகு அதிகம்!" எனக் கூறுகிறார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆண்டிமடம் ஒன்றியச் செயலாளர் கே. நாகரத்தினம்.

"சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு வளர்ச்சி நிதியில், தொகுதிக்குள் இருக்கும் பள்ளிகள் பலவற்றுக்கும் கூடுதல் கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. ஐம்பத்தி ஐந்து இடங்களில் நியாய விலைக் கடைகளுக்கான கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. வருடம் ஒன்றுக்குத் தரப்பட்டிருந்த எண்பத்தியிரண்டு லட்ச ரூபாய் தொகுதி வளர்ச்சி நிதி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. நீங்கள் சாலை வசதிகளும், கழிப்பிட வசதிகளும் இங்கு சற்றுக் குறைவுதான். எதிர்கட்சி வரிசையில் இருந்து கொண்டு எந்த அளவுக்குத் தொகுதிக்குச் செய்ய இயலுமோ அந்த அளவுக்குப் பணிகள் செய்து தரப்பட்டுள்ளன!" என்று விளக்கம் அளித்தார் பா.ம.கவின் அரியலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் கா. வைத்தி.

கட்டுரை, படங்கள்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



உ

ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத
ஸ்ரீ ஸற்குணேச்வர ஸ்வாமி திருக்கோயில்
ஸ்ரீ ஸற்குணேச்வரபுரம், கருவேலி-609 501.
✆ :04366 273900

நூதன ஸ்ரீ நடராஜமூர்த்தி ப்ரதிஷ்டை, லட்சார்ச்சனை,
ஸ்ரீ ருத்ராபிஷேகம், ஸம்வத்ஸராபிஷேகம்
மற்றும் திருக்கல்யாண உற்சவம்

**பார்த்திப வருடம் பங்குனி மாதம் 2 ஆம் தேதி வியாழன் முதல்
5ஆம் தேதி ஞாயிறு முடிய (16.3.2006 - 19.3.2006)**

அன்புடையீர்,

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா பல நற்பணிகளை ஆற்றி வருகிறது. இவற்றின் தொடர்ச்சியாக நிகழும் பார்த்திப வருடம் பங்குனி மாதம் 2ஆம் தேதி வியாழன் துவங்கி 5ஆம் தேதி ஞாயிறு முடிய (16.03.2006 - 19.03.2006) **ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ உடனுறை ஸ்ரீ ஸற்குணேச்வர பெருமான் திருக்கோயிலில்** ஸ்ரீ நடராஜ மூர்த்தி ப்ரதிஷ்டா வைபவமும், ஸம்வத்ஸராபிஷேகப் பெருவிழாவும் நடைபெற இருக்கின்றன. அது சமயம் உலக நலனை முன்னிட்டு பல விசேஷ ஹோமங்கள், லக்ஷார்ச்சனை, ஸ்ரீ ருத்ராபிஷேகம், திருக்கல்யாண உற்சவம் மற்றும் ஸம்வத்ஸராபிஷேகம் முதலியன நடத்தப்படுகின்றன. இவை சிறப்பாக நடைபெற அனைவரும் தங்களால் இயன்ற ஹோம, பாராயண, ஜப, அர்ச்சனைகளுக்கான கட்டணங்களையோ அல்லது நன்கொடைகளையோ ஸபாவின் பெயருக்கு மணியார்டராகவோ, காசோலையாகவோ அல்லது வரைவுக் காசோலையாகவோ அனுப்பக் கோருகிறோம். அல்லது கீழ்கண்ட முகவரியில் யாரிடமாவது செலுத்தலாம்.

ஸ்ரீ சிவ ஸஹஸ்ர நாமத்தினாலும், ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமத்தினாலும் நடைபெறுகிற லட்சார்ச்சனைகளுக்கு விருப்பப்படுகிறவர்கள், இரண்டுக்குமாக சேர்த்து ரூ.200/- செலுத்தலாம்.

என்றும் இறைபணியில்

Dr. V. கிருஷ்ணமூர்த்தி
பரம்பரை அறங்காவலர்

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா (Regd).
32/18, டபீர் புதுத்தெரு, கும்பகோணம் - 612 001.
போன்: 0435-2423297 மற்றும் **கிராமவாசிகள்**

பொன். சிவசங்கரன் M.A. *நிர்வாக அதிகாரி*

எண்	நிகழ்ச்சி	கட்டணம்
1.	ஸ்ரீமஹா கணபதி ஹோமம்	ரூ. 100/-
2.	ஸ்ரீ நவக்ரஹ ஹோமம்	ரூ. 100/-
3.	சிறப்பு சூர்ணாபிஷேகம் (மஞ்சள் பொடி)	ரூ. 100/-
4.	சிறப்பு குஙுமம நாளிகேராபிஷேகம் (இளநீருடன் குங்குமப்பூ கலந்து)	ரூ. 100/-
5.	சிறப்பு அபிஷேகம்	ரூ. 200/-
6.	ஸ்வாமி, அம்பாள் லட்சார்ச்சனை	ரூ. 200/-
7.	வஸ்த்ரதானம் (ஒரு ரித்விக்கிற்கு)-20	ரூ. 400/-
8.	அன்னதானம் (ஒருவேளை)	ரூ. 500/-
9.	புஷ்ப கைங்கர்யம் (ஒருவேளை)	ரூ. 500/-
10.	தம்பதி பூஜை (ஒரு தம்பதிக்கு)	ரூ.1000/-
11.	ஸ்ரீருத்ர ஜப, ஹோம ஸங்கல்பம்	ரூ.1000/-
12.	ஸ்வாமி, அம்பாளுக்கு வேஷ்டி, புடவை (9x5-9 கஜம்)	ரூ.1000/-
13.	ஸந்தர்ப்பணை (ஒருநாள்)	ரூ.2500/-
14.	திருக்கல்யாண உற்சவம்	ரூ.2500/-

மார்ச் 16, 17, 18 ஆகிய மூன்று நாட்களிலும் மாலை 6.00 மணிக்கு மேல் சிறப்பு சொற்பொழிவுகளும், இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

குறிப்பு: நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள விரும்பும் அன்பர்கள் அவற்றிற்கான கட்டணத்தை **"ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா"**விற்கு மணியார்டர் அல்லது வரைவுக் காசோலை (D.D) அல்லது பொருளாகவோ அனுப்பலாம். அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிகளில் ஏதேனும் ஒன்றிற்கு அனுப்பவும்.

G. குஞ்சிதபாதம், FCA.,
டபீர் மேலத்தெரு, கும்பகோணம்–612 001
போன்: 0435 2420047

V.L. நாராயண சாஸ்திரிகள்,
25/1 கப்பாரெட்டித் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.
போன்: 044-24897125

G. கண்ணன், D/127-A, ராஜமன்னார் சாலை,
கே.கே.நகர், சென்னை –78.
போன்: 044-24836495

R. வைத்தியநாதன், மேலாளர்,
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பிளாட் நெ. 4,
கதவு எண் 12, 29வது தெரு,
தில்லை கங்கா நகர், நங்கநல்லூர், சென்னை - 600 061. போன்: 044 - 22333361

குடந்தை - பூந்தோட்டம் நெடுஞ்சாலையில் குடந்தையிலிருந்து 21 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது அருள்மிகு ஸற்குணேஸ்வரர் ஆலயம்.

"ஏய், பெருசு!"

மெலட்டூர் இரா.நடராஜன்

"லைட்ஸ் ஆன்". பளிரென்று வெள்ளையும் நீலமுமாய் அத்தனை விளக்குகளும் உயிர் பெற்றன.

"ஸ்டார்ட்". இயக்குனர் மிச்சமிருந்த சிகரெட்டைக் கீழே போட்டு காலால் நசுக்கினார். ரிப்ளெக்டர்களையும், கம்பி வலைகளையும் பிடித்திருந்தவர்களின் முகங்கள் சீரியஸ் ஆகின.

"ரோலிங்". காமிராமேன் மெல்லிய குரலில் இயக்குனர் காதில் விழும்படித் தெரிவிக்க, ஒருவன் கிளாப் கட்டையை காமிராவுக்குக் காட்டிவிட்டு வேகமாக ஒதுங்கிக்கொண்டான்.

"ஆக்ஷன்", ஏதோ ஸ்விட்சைத் தட்டி விட்ட மாதிரி உடனடியாக அவள் அழ ஆரம்பித்தாள்.

அந்தப் பெண் ஒரு ரவுண்டு அழுது முடித்து கர்ச்சீப்பை மூக்கின் மீது வைத்து 'டொர்' எனச் செய்யவும் இயக்குனரின் விரல் அசைந்தது.

வேலுச்சாமி தளர்வாக உள்ளே வந்து அந்தப் பெண்ணின் அருகில் நின்றார்.

"ஏம்மா அழுவுறீங்க. என்னைத் தெரியுதா?"

"கட். ஏய், பெருசு! பிரியா டயலாக் முடிச்ச அப்பாலதாய்யா உன் டயலாக். ஏய்யா உசிர வாங்குற?"

கறுப்புத் துணிக்குள் தன் தலையை விட்டுக்கொண்டு / மானிட்டரில் பார்த்துக் கொண்டிருந்த இயக்குனர் துணியை விலக்கிக்கொண்டு கத்தினார்.

"ஸார், அவங்க டயலாக் சொல்ல விட்டுட்டாங்க. அதுனால நான் தொடங்கிட்டேன்"

"பேசாத. நல்லா வாய்ல வருது. நீ என்ன செய்யணுமோ அதைச் செஞ்சா போதும். புரிஞ்சுதா? காலைல பத்து மணிக்கு ஷாட்டு வச்சு இன்னும் ரெண்டு சீன்கூட முடியல. எல்லாம் என் நேரம். பாலு, பெருசுகிட்ட விவரமாச் சொல்லு. அடுத்த ஷாட்ல ஓகே ஆகல்ல, எனக்கு கெட்ட கோபம் வரும்."

'சாவு கிராக்கிங்க' என்று அவர் மெல்லிய குரலில் முடித்தாலும் வேலுச்சாமிக்குத் தெளிவாகக் கேட்டது. ஒளிர்ந்த விளக்குகள் அணைந்து மின் விசிறிகள் தங்கள் பேரிரைச்சலைத் தொடர்ந்தன.

வேலுச்சாமிக்கு ஆத்திரமாக வந்தது. அவமானமாகவும் இருந்தது. வேலுச்சாமியும் ஒரு காலத்தில் பிரபலம் தான். ஆனால், அறுபதுகளில் உச்சத்தில் இருந்த, யதார்த்தம் பொன்னுசாமி பாய்ஸ் கம்பெனியைப் பற்றி இங்கு ஒருவருக்கும் தெரியவில்லை. "அப்படியா, இப்ப என்ன சீரியல் செய்யறீங்க?" என்றுதான் கேட்டார்கள்.

நாடகங்கள் ஓய்ந்து சென்னை சபாக்களில் சுருண்டபோது ஏதோ அவ்வப்போது தலைகாட்டிக் கொண்டிருந்தார். பிறகு அதையும் குறைத்துக்கொண்டு தான் உண்டு, நங்கநல்லூர் ஆஞ்சநேயர் உண்டு என்று இருந்துவிட்டார். இப்படியே பல வருடங்கள் போய்விட்டன. 'அடுத்தவேளை சாப்பாட்டுக்கு என்ன வழி?' என்ற நிலை வந்தபோதுதான் எதிர் ஃபிளாட் சிவா ஐடியா கொடுத்தான். "தாத்தா, நீங்க ஏன் சீரியல்ல நடிக்க முயற்சி செய்யக்கூடாது? உங்களுக்குத்தான் நாடக அனுபவம் இருக்குதே?" அவன் அப்படியும் இப்படியுமாக சீரியல்களில் தலை காட்டுவான். பல டிவி



கம்பெனிகளில் ஏறி இறங்கினார். அதன் பலன் இன்று...

"வேலுமணி சார், இங்க வாங்க. உங்க டயலாக்கை மறுபடி சொல்லுங்க" கிளிப் பேடு அஸிஸ்டென்ட் அழைத்தான்.

"தம்பி... என் பேரு வேலுச்சாமி... வேலுமணி இல்லே."

"ம். அதனால என்ன. வேலுங்கறது சரிதானே?"

"அதெப்படி தம்பி சரியாகும். உங்களை பாலுன்னு கூப்பிடறாங்க. அதை மாத்தி கோபாலுன்னு கூப்பிட முடியுமா?"

"யோவ், பெருசு, நீ நடிக்க வந்தியா இல்லே வம்பு செய்ய வந்தியா?"

எதேச்சையாக அருகில் சென்ற இன்னொரு அஸிஸ்டென்ட்...

"என்ன பெருசு, தொழிலுக்குப்

"உங்களுக்குத் துரோகம் செஞ்ச உங்க நண்பருக்கு பொண்ணு பாக்கறீங்களாமே?"
"அவனைப் பழி வாங்க எனக்கு வேற வழி தெரியல"
- வீ. விஷ்ணுகுமார்

புதுசா? அதான், பதிலுக்குப் பதில் பேசற. சொல்லறத மட்டும் கேளுய்யா. அவரு எவ்வளோ பெரிய டைரக்டரு தெரியுமா?"

"சரி. வேலுச்சாமி ஸார். உங்க விளக்க உரையெல்லாம் வேண்டாம், புரியுதா... எங்களுக்கு கேக்க பொறுமையில்ல. மூன்று மானிட்டர் ஷாட்ஸ் முடிந்து இது ஐந்தாவது டேக். யாருக்குத்தான் கோபம் வராது?"

நல்லவேளையாக அடுத்த ஷாட் ஓகே ஆனது. அதுகூட கொஞ்சம் அரை திருப்தி. முக்கால் திருப்தியோடு சொன்ன மாதிரி இருந்தது. அதன் பிறகு பிட்டு பிட்டாகச் சில சீன்கள் வந்தன.

'போகலாம்' என்று சொல்லி விட்டார்கள். பணம் செட்டில் செய்யக் கூடிய நபரைத் தேடிக் கண்டுபிடிப்பதில் அரை மணியும் ஒரு கிலோ மீட்டர் நடையும் ஆனது.



"பேமெண்டா? உங்க பேமெண்டை உங்க ஏஜெண்டுகிட்டத்தான் கேட்கணும். என்கிட்டே கேட்டா?"

"டயலாக் ஆர்டிஸ்ட் குமார் சொல்லி வந்திருக்கேன்."

"அப்படியா. அதுக்கு எதுக்கு சார் சூடாறீங்க?"

"நீங்களா ஒரு கற்பனை செஞ்சுக்கிட்டு பேசினா நான் என்ன செய்ய முடியும்?"

"வில்லங்கம் புடிச்ச ஆளா இருப்பே போலிருக்கே. சரி... சரி... டப்பிங் சமயத்துல வாங்கிக்க"

சிவா தெளிவாகச் சொல்லியிருந்தான். வேலுச்சாமி விடவில்லை. "இல்லை சார், எனக்கு செட்டில் செஞ்சுடுங்க. நிறைய செலவு இருக்கு."

வேலுச்சாமி அடித்துப் பிடித்து ஒரு மணி நேரம் காத்திருந்து பணம் வாங்கிவிட்டார். விட்டால் போதும் என்று வீட்டுக்கு வந்து விழுந்தபோது இரவு மணி எட்டு ஆகிவிட்டது.

இரவு ஒன்பது மணிவாக்கில் சிவா வந்தான்.

"என்ன தாத்தா, எப்படி இருந்தது முதல்நாள் அனுபவம்?"

"அத ஏன் கேக்கிற போ. பாடா படுத்திட்டாங்க. மரியாதைன்னா என்ன விலைன்னு கேக்கறாங்க."

"ரிலாக்ஸ் தாத்தா ரிலாக்ஸ்! பொதுவாவே என்ன வாழுதாம்? அது சரி... எந்த கம்பெனிக்குப் போனீங்க?"

வேலுச்சாமி சொன்னார்.

"ஓ. அதுவா.... பணம் கொடுத்தாங்களா? இழுத்தடிச்சுருப்பாங்களே?"

"கொஞ்சம் முரண்டு புடிச்சாங்க. நான் விடல. வாங்கிட்டேன்."

"நல்லது. அதான்...அப்புறம் தாத்தா... நீங்க நினைக்கற மாதிரி எல்லா கம்பெனிகளும் இப்படி இல்லே."

"எனக்கென்னவோ சரியாப் படல சிவா. இனிமே வேண்டாம்னு மனசுக்குப் படுது. நாலு காசு சம்பாதிச்சாலும் மரியாதை முக்கியமில்லையா?

தலையில குட்டி, போடற சாப்பாடு வேண்டாம்.''

வேலுச்சாமி வேதனையோடு சொன்னார்.

"அட போங்க நீங்க. போகப் போக பழகிடும். இண்டஸ்ட்ரில இதெல்லாம் சகஜம்.''

''என் டிராமா அனுபவத்துல இதுமாதிரி அனுபவிச்சதில்லே'' வேலுச்சாமியின் கண்களில் நீர் முட்டிவிட்டது.

"தாத்தா, அது அந்தக் காலம். இப்ப எல்லாமே மாறிப்போச்சு. எல்லா இடத்திலும் மரியாதை சரியா சமமா கிடைப்பதில்லே. வாழ்வா சாவான்னு இருக்கும் போது நீதியாவது நியாயமாவது? இப்ப மெகா சீரியல்னு ஞாயிற்றுக் கிழமைகூட விடாம ஷூட்டிங் நடத்தறாங்க. காலைல ஆரம்பிச்சு ராத்திரி வரைக்கும், அது தவிர எடிட்டிங், மிக்ஸிங், டப்பிங்னு ஏகப்பட்ட வேல. இத்தனைக்கும் மத்தியில அவங்களுக்குக் கொடுக்கற சம்பளம் கம்மி. ஸ்டார்களுக்குத்தான் மரியாதை. பணம் வர்லன்னா ஸ்பாட்டுக்கு வர மாட்டாங்க. டப்பிங்கை இழுத்தடிப்பாங்க. அதுனால ப்ரொடக்ஷன் ஆளுங்க நம்ம மாதிரி ஆசாமிகள் கிட்டத்தான் மிச்சம் புடிக்கறாங்க.''

வேலுச்சாமிக்கு ரொம்ப ஆயாசமாக இருந்தது. வெகு நேரம் தூக்கமில்லை. 'யோவ், பெருசு' என்று இப்பவும் யாரோ கூப்பிடுவது போல இருந்தது.

அடுத்த சில நாட்களில் மறந்தே போய்விட்டார். அதன் பிறகு யாரும் நடிக்கக் கூப்பிடவும் இல்லை. ஒரு மாதம் கழித்து திடீரென்று அவர் நடித்த காட்சிகள் டீ.வியில் வந்ததும் சிவா ஓடி வந்து கூப்பிட்டான். எத்தனையோ நாடகங்களில் நடித்திருந்தாலும் சின்னத் திரையில் தன் பிம்பத்தைப் பார்த்ததில் மகிழ்ச்சியாகத்தான் இருந்தது.

வேலுச்சாமி அந்த காலனியின் திடீர் பிரபலம் ஆகிவிட்டார். சீரியல் முடிந்ததுமே ஏகப்பட்ட போன்கால்கள். நேரில் சந்திக்க பல பேர் வந்து விட்டனர்.



விசாரிப்புகள் மறுநாளும் தொடர்ந்தன. பால் வாங்கும்போது விசாரித்தார்கள். ஆட்டோ ஸ்டாண்டில் சூழ்ந்து கொண்டார்கள். ஸ்கூல் போகும் குழந்தைகள்கூட 'ஹாய்! டீ.வி சீரியல் தாத்தா' என்று சொல்லி விட்டுப் போனார்கள் ஒரு சிலர் வேலுச்சாமியிடமே சான்ஸ் கேட்டார்கள்.

அன்று மதியமே இன்னொரு கம்பெனியிலிருந்து அவருக்கு போன் வந்தது. சிவா வீட்டு நம்பரில்...

"ஒருநாள் ஷூட்டிங். நானூறு ரூபாய். பயணப்படி கிடையாது. வரீங்களா?''

வேலுச்சாமி யோசிக்கவே இல்லை.

"சரி. வர்றேன்'' என்றார் சட்டென்று!

''கிரிக்கெட் வெறியில கங்குலின்னு பையனுக்கு பெயர் வைக்காதீங்கன்னு தலையில அடிச்சுக்கிட்டேன்; கேட்டீங்களா?''

''ஏன் என்னாச்சு?''

''ஒரு மாசத்துக்கு ஸ்கூல்ல சேர்த்துக்கறாங்க, மறுமாசம் டீ.சி குடுத்து வீட்டுக்கு அனுப்பிடறாங்க''

- அரும்பூர் குரு

"போராட்டம்தான் ருசியே!"

"மாஸ் ஹீரோக்களை முதலீடாக வைத்து எடுக்கப்படும் பல படங்கள் ரசிகர்களுக்கான போதைப் பொருள்போல ஒரே மாதிரி இருக்கின்றன. தமிழ் விளம்பர உலகிலும் இதே நிலைதான். ரீடெயில் கடைகளுக்கான விளம்பரம்தான் இங்கே எல்லாம் என்றொரு மாயை. சாட்டிலைட் டி.வி.களில் வரும் விளம்பரங்களில் எது குமரன் ஸ்டோர், எது நல்லி என கண்டறிவது கடினம்.

கடை முதலாளியின் சிந்தனைக்கு ஏற்ப, கடையின் பெயரைப் போட்டு ஒரு ட்யூன் கேட்டால் முதலாளி குஷியாகிவிடுவார். கடைதான் அவருக்கு உலகம். அட! நம்ம கடையிலேயே ஷூட் பண்ணப் போகிறார்கள். டி.வியில் பார்க்கும் மக்கள் மயங்கிப் போய், மறுநாளே கடைக்கு வருவார்கள் என்று சந்தோஷப்படுவார். ஆனால் ஒரே மாதிரி விளம்பரங்கள் நுகர்வோராகிய பார்வையாளரை எப்படிக் கவரும்?


இதுபோன்ற விளம்பரங்களை யார் வேண்டுமானாலும் எடுக்கலாம், க்ரியேட்டிவிட்டி தேவையில்லை. சாதுர்யம் தேவையில்லை. தமிழ் சினிமாவில் ஹீரோக்கு மட்டும் கதை பிடித்தால் போதும் என்று நினைப்பதைப் போலவே, தமிழ் விளம்பர உலகில் முதலாளிக்கு மட்டும் பிடித்தால் போதும் என்று நினைக்கிறார்கள். இது மாறும்! மாற வேண்டும்" என்று நெற்றியடியாகப் பேசும் அபனீந்திரன், தமிழின் தலைசிறந்த பத்து விளம்பர இயக்குனர்களின் பட்டியலில் ஜம்மென்று இடம் பிடித்திருக்கிறார்.

லெனின், ராஜீவ்மேனன் போன்ற சினிமா ஜாம்பவான்களின் சீடர் என்ற தகுதியோடு சினிமா இயக்கத்தில் காலடி பதிக்கத் துடிக்கும் இவர், தமிழ்நாடு திரைப்படக் கல்லூரியின் தயாரிப்பு. இதைவிடவும் இவருக்கு முக்கியமான அடையாளமுண்டு. தமிழின் தலைசிறந்த நவீன ஓவியர் ஆதிமூலத்தின் தலைப்பிள்ளை.

"அப்பாவின் மனவோட்டங்களைப் பிரதிபலிக்கும் அவரது ஓவியங்களைப் போல, பூடகமில்லாதது அவருடைய நேர்மை. அவரை எதிர்



தலைமுறைகள்-6



• அப்பா ஆதிமூலத்துடன்...

மறையாக விமர்சிக்கிறவர்கள் கூட அவரது குணத்தைப் பாராட்டுவதைப் பார்த்திருக்கிறேன். இன்றும் அவரது எளிமையைப் பார்த்து வியந்து போகிறேன். அங்கீகாரத்துக்காக அவர் எப்போதுமே ஏங்கியதில்லை.

'நாம் செய்கிற வேலையை முழு ஈடுபாட்டோடு செய்து கொண்டேயிருப்போம். அங்கீகாரம் தானாக வரும்' என்று இன்று வரை இடைவிடாமல் இயங்கிக் கொண்டிருக்கும் அவரது கலையுணர்ச்சி எனக்குள் முதல் பெரிய பாதிப்பை நிகழ்த்தியிருக்கிறது. இரண்டாவது பாதிப்பும், அப்பாவின் நண்பர்கள் சார்ந்தே எனக்குள் ஆளுமையை உருவாக்கியது. ஆனால் அப்பாவின் நேரடி பாதிப்பாக எனது தம்பியைப் பார்க்கிறேன். அவன் இன்று, வளரும் ஓவியன்'' என்று ஆரம்பித்தார் அபனீந்திரன்.

“சிறு வயதிலேயே அப்பா ஓர் ஓவியர் என்பதைத் தெரிந்து கொண்டாலும், எட்டாம் வகுப்பு படிக்கிறபோதுதான் அவர் உருவாக்குவது நவீன ஓவியம் என்று புரிந்தது. டிபிகல் அப்பா, அம்மா இருக்கிற வீட்டில், நான் க்ரியேட்டராகப் போகிறேன் என்றால் பெரும்பாலும் வேண்டாம் என்பார்கள். அதில் என்ன சம்பாத்தியம் இருக்கும் என்பதுதான் கேள்வியாக இருக்கும். அதுவே அப்பாவோ, அம்மாவோ கலை சார்ந்த வாழ்வை அமைத்துக் கொண்டவர்கள் என்றால் 'உனக்கு என்ன பிடிக்கிறதோ அதைச் செய்... ஆனால் ஒழுங்காகச் செய்' என்பார்கள்.. எனது பெற்றோர் இருவரும் இதைவிட அதிகமான சுதந்திரத்தையே எனக்கும் தம்பிக்கும் கொடுத்தார்கள். இதுவரை எங்கள் அப்பா அடித்ததாகவோ, அதட்டியதாகவோ நினைவில் இல்லை. ஏதாவது தான்தோன்றித்தனமாக தவறு செய்துவிட்டு வந்து நின்றால்.... 'நீ செய்தது தப்பு தானேப்பா! எங்கிட்டே ஒரு வார்த்தை கேட்டிருந்தா சொல்லியிருப்பேனேப்பா'' என்று அவர் கேட்கிறபோதே கண்கள் குளமாகிவிடும். அப்படியொரு தோழமை உணர்வு கொண்ட நெகிழ்ச்சியான மனிதர்.

அதனால்தானோ என்னவோ... அப்பாவைத் தேடி வீட்டுக்கு வரும் நண்பர்கள் அதிகம். அவர்களில் எழுத்தாளர்கள், கவிஞர்கள், விமர்சகர்கள், நாடகக் கலைஞர்கள், ஓவியர்கள், சிற்பிகள், பத்திரிகையாளர்கள் என்று எல்லோருமே ஏதோ ஒரு வகையில் படைப்பு சார்ந்தவர்களாகவே இருப்பார்கள். அவர்களது பேச்சு, உடல் மொழி மறைமுகமாக ஓர் உயர்ந்த விஷயத்தை எனக்கும் உணர்த்தும். ஐந்து ரூபாய் கூட அவர்கள் கையில் இருக்காது. ஆனால் எதிர்காலம் பற்றிய பயம், அவர்களிடம் இருக்காது. உலகைத் துணிச்சலாக எதிர்

அபனீந்திரன் ஆதிமூலம்

கொள்ளும் தன்னம்பிக்கையை அவர்களது படைப்புக்களிலும் பார்த்தேன். பின்னாளில் விளம்பர உலகில் இறங்கிய பிறகு பணக்காரர்களிடம் பழக வேண்டிய சூழல் ஏற்பட்டது. அவர்களிடம் பணம் இருக்கிறது. பாப்புலாரிட்டி இருக்கிறது. ஆனால் பாது காப்பற்ற மனநிலையில் பயத்தை நிரப்பிக் கொண்டு வாழ்கிறவர்களாக இருக்கிறார்கள். அப்பாவின் நண்பர்கள் மூலம் பயமின்றி உலகை எதிர்கொள்ளக் கற்றுக் கொண்டது மட்டுமல்ல; சமூகத்தின் பல்வேறு அடுக்குகளில் வாழும் மனிதர்களைப் படிக்கவும் கற்றுக் கொண்டேன்.

'பள்ளியில் படிக்கும்போதே நீ என்னவாகப் போகிறாய்' என்று வகுப்பில் கேட்டார்கள். அப்போதே நான் சினிமா இயக்குனர் என்று சொன்னேன். 'உட்காரு தறுதலை' என்றார்கள். என்றாலும் வரித்துக் கொண்ட லட்சியத்தைத் துடைத்துவிடவில்லை. இப்போது என்னைப் பார்க்கிற பள்ளி நண்பர்கள் எல்லாம்.. 'டேய் நீ ஏதோ விளையாட்டுக்குச் சொல்றேன்னு நினைச்சோம். சொன்ன மாதிரியே குறியா இருக்கப்பா' என்கிறார்கள். இதுகூட அப்பாவிடமிருந்து கற்றுக் கொண்டதுதான்.

• ப்ளஸ்டூ முடித்த பிறகு ஓராண்டு காத்திருந்து திரைப்படக் கல்லூரியில் சேர்ந்தேன். அங்கே மூன்று வருடம் எடிட்டிங் படிப்பு. சுற்றிச் சுற்றி சினிமாவைப் பற்றியே பேசுகிற ஒரு சூழல்தான் அந்தப் படிப்பின் பயன்பாடு. மற்றபடி படித்து வெளியே வந்தபிறகு அது ஒரு முகவரி அட்டை போல அறிமுகத்துக்கு மட்டுமே கைகொடுக்கும். யாரும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாட மாட்டார்கள் எனப் புரிந்தது.


திரைப்படக் கல்லூரியில் படிக்கிறபோது எடிட்டர் லெனின் அறிமுகம் கிடைத்து அவரிடம் சிறிதுகாலம் பயிற்சி பெற்றேன். அவரது கலை மனம் நிறையவே எனக்கு கற்றுக் கொடுத்தது. அதன்பிறகு, ராஜீவ்மேனனின் விளம்பரங்களை எடிட் செய்யும் ஆண்டனி எனது நண்பரானது, எனக்கு புதிய வாசலைத் திறந்து விட்டது. அவர் மூலம் ராஜீவ்மேனனைச் சந்தித்து அவரிடம் உதவியாளராகச் சேர்ந்தேன்" என்று சொல்லும் அபனீந்திரன் விளம்பரப் படங்கள், நிறுவனப் படங்கள், ஆவணப் படங்கள், குறும் படங்கள், மியூசிக் வீடியோ என்று பிஸியாக வலம் வருகிறார்.

தற்போது சினிமா இயக்குனருக்கான தீவிர முயற்சியிலும் இறங்கி இருக்கிறார்.

"எல்லாத் தரப்பு ரசிகர்களைக் கவரும் தரமான, அதேநேரம் வியாபார ரீதியில் வெற்றிபெறும் படமாக எனது சினிமா இருக்கும். அதில் தமிழரின் அடையாளம் கண்டிப்பாக இருக்கும். என்னதான் தகுதியும், அனுபவமும், அடையாளமும் இருந்தாலும், சினிமாவில் போராட்டம் என்பது தவிர்க்க இயலாதது. போராட்டம்தான் நமக்கு நாமே சவால் விட்டு சாதிக்க வைக்கும். போராடுவதைப் போல ருசியானது எதுவுமில்லை" என்கிறார், இளநரைக்கு சாயம் பூச விரும்பாத இந்த முப்பத்தைந்து வயது இயல்பு இளைஞர்.

தொகுப்பு : **ஆர்.சி. ஜெயந்தன்**
படங்கள் : **ஸ்ரீஹரி**

"உங்க பையன் பொங்கலுக்கு வந்த படங்கள் ஒன்னையும் விடல போலிருக்கே..."
"எப்படி சார் கண்டுபிடிச்சீங்க?"
"திருக்குறள் சொல்லுபான்னா 'அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபரமசிவன் முதற்றே உலகு'ன்னு சொல்றானே!"
- ஞா.ஞானமூர்த்தி





சித்திரம் பேசுதடி





'ஏய்...! ஊய்...!' என்ற காட்டுக் கூச்சல்தான் அவர்களது மொழி. வெட்டு, குத்து, இரத்த ஆறு மட்டும்தான் அவர்களின் வாழ்க்கை. இதயமும், உணர்வுகளும் அவர்களுக்கு இரண்டாம் பட்சம். தொழில்முறை ரவுடிகள், தாதாக்கள் பற்றி இதுவரை தமிழ் சினிமா வரைந்து காட்டியிருக்கும் சித்திரம் இவ்வளவுதான். ஆனால் 'சித்திரம் பேசுதடி' படம், இவர்களுக்கும் வாழ்க்கை உண்டு; அதில் பலவீனங்கள் உண்டு என்ற நேர்மையான பார்வையை வெகு யதார்த்தமாக முன் வைத்திருக்கிறது.

சந்தர்ப்பவசத்தால் ரவுடித் தொழிலை வலிந்து ஏற்றுக்கொள்ளும் இளைஞன் திரு. அவனுக்குள் காதல் வந்த பிறகு நிகழ்கிற மாற்றங்கள் என்று நகர்கிற திரைக்கதையில், நிஜ ரவுடியின் வாழ்க்கையை ஜன்னல் வழியே எட்டிப் பார்க்கும் ஜிலீர் ஃபீலிங்.

நாயகன் நரேன், நாயகி பாவனா, பத்துக்கும் அதிகமான துணை கதாபாத்திரங்கள் அத்தனை பேரும் புதுமுகங்களாக இருப்பது ப்ளஸ் பாயிண்ட்.

முக்கியமாக அறிமுக இசையமைப்பாளர் என்று சொல்ல முடியாதவாறு, கதைக்கான இசையைத் தந்திருக்கிறார் சுந்தர். சி பாபு. சென்னையின் வட்டார பாட்டான கானாவை அதன் நிஜக் கூறுகளைச் சிதைத்துவிடாமல் கதையையொட்டி பயன்படுத்தியிருப்பது இதுவே முதல் முறை. ரவுடிகளுக்கு மத்தியில் நிஜமாக நிகழும் கைகலப்பை துளியும் மிகைப்படுத்தாமல், சின்னச் சின்ன சண்டைக் காட்சிகளாக உருவாக்கியிருக்கிறார் ஆக்ஷன் பிரகாஷ். இசையமைப்பாளர், ஒளிப்பதிவாளர் இருவருமே அற்புதமான பங்களிப்பு செய்திருக்கிறார்கள். காட்சி மொழியின் சாத்தியக்கூறுகளை நேசித்து படம் பண்ணும் ஓர் அற்புத இயக்குனராக மிஷ்கின் கிடைத்திருக்கிறார்.

பெரிய ஹீரோக்கள் மிஷ்கினுக்கு கால்ஷீட் தரும் பட்சத்தில், அவரைத் தமிழ் ரசிகர்கள் இழந்துவிடாமல் இருக்க இப்போதே பிரார்த்திப்போம். அதற்கு முன்பு ஒருமுறை படம் பார்த்து அவரை அங்கீகரிப்போம்.

- லஜ்ஜாவதி

IT DATA

இரண்டு உருப்படியான

மெயிலும் 'சாட்'டும் ஒன்ணாச்சு!


புதிய முயற்சிகள் எடுத்து இணைய மக்களைத் தன் பக்கம் இழுப்பதில் கூகுள் படு ஷார்ப். தன்னை யாரும் மிஞ்சி விடக்கூடாது, முந்தி விடக் கூடாது என்பதில் கூகுள் செம அலர்ட். இதை நிருபிக்கும் வகையில் சமீபத்தில் கூகுள் இரண்டு பயனுள்ள விஷயங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. முதலாவது விஷயம், கூகுளின் மெயிலான ஜிமெயிலை உபயோகித்துக் கொண்டே சாட் செய்யும் வசதி. ஜிமெயிலைத் தொடர்ந்து கூகுள், 'கூகுள் டாக்' எனும் சாட் அப்ளிகேஷனை அறிமுகப்படுத்தியது. ஆனால் ஜிமெயில் பெற்ற வரவேற்பை கூகுள் டாக் பெறவில்லை. பொதுவாக, இதுவரை AOL, Yahoo, Hotmail, Google ஆகியவற்றில் மெயில் வசதி என்பது தனி. அதே மெயில் ஐடியைப் பயன்படுத்தி அவற்றின் சாட் அப்ளிகேஷனைத் தனியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஏன் மெயிலையும் 'சாட்'டையும் பிரிக்க வேண்டும்? இரண்டையும் ஒரே விண்டோவில் கொடுத்தால் பயன்படுத்துபவருக்கு எவ்வளவு ஈஸியாக இருக்குமென கூகுள் நினைத்து அதைச் சாதித்து விட்டது. சாட் செய்ய நீங்கள் கூகுள் டாக்கைத் தனியாக டௌன்லோட் செய்ய வேண்டுமென்ற அவசியமும் கிடையாது. இவ்வளவு சுலபமாக இருந்தால் யார்தான் விரும்பமாட்டார்கள் கூகுளை!



ஜிமெயில் டிரைவ்

இதுதான் கூகுள் அறிமுகப்படுத்தியுள்ள இரண்டாவது சூப்பர் விஷயம். உங்களுக்குத் தேவையான சில முக்கியமான ஃபைல்களை, மெயில்களை எங்கிருந்து வேண்டுமானாலும் உபயோகித்துக் கொள்வதற்கு வசதியாக உங்கள் மெயில் Folder-ல் சேமித்து வைத்திருப்பீர்கள். அதையும் சுலபமாக்க வந்திருப்பது தான் ஜிமெயில் டிரைவ். இதனை உபயோகிக்க

* மைக்கேல் டெல்




உங்களிடம் ஜிமெயில் ஐடி, விண்டோஸ் எக்ஸ்பி ஆபரேடிங் சிஸ்டம், இணைய இணைப்பு இருந்தால் போதும். www.viksoe.dk/gmail/ - என்ற முகவரியிலிருந்து உங்கள் கணினியில் ஜிமெயில் டிரைவை டௌன்லோட் செய்து கொள்ளலாம். இப்போது ஜிமெயில் டிரைவ் My Computer-ல் சேர்ந்துவிடும். உங்களின் ஜிமெயில் ஐடி, பாஸ்வேர்ட் மூலம் அந்த டிரைவுக்குள் செல்லலாம். உங்களுக்குத் தேவையான / முக்கியமான ஃபைல்களை அதில் copy - paste செய்தால் போதுமானது. அதன்பின் அந்த ஃபைல்களை வேறு எந்தக் கணினியிலிருந்தும் பயன்படுத்திக் கொள்ள முடியும். நமக்கான ஃபைல்களைச் சேகரிக்கும் இடத்தை ஜிமெயில் தருகிறது. இந்த டிரைவில் 2.62 GB அளவுக்கு ஃபைல்களைச் சேமித்து வைக்கலாம். (இது விரைவில் உயர்த்தப்படும்) ஆனால் ஒரு ஃபைலின் அளவு 10 MB-க்கும் அதிகமாக இருக்கக் கூடாது. சிறு ஃபைல்களை நாம் ப்ளாப்பி, சி.டி., தம்ப் டிரைவ் ஆகியவற்றில் இட்டுக் கடத்திச் செல்ல வேண்டாம். ஜிமெயில் டிரைவில் வைத்தே ஜமாய்க்கலாம்.

விஷயங்கள்!

வாய்ஸ் ப்ளேயர் :

மைக்கேல் டெல் (டெல் நிறுவனர்) : 'வெற்றிகளை உருவாக்க பல செயல்களைச் செய்யலாம். எனக்குப் பிடித்த செயல்களைச் செய்வதற்காக நான் எப்போதும் அதிக நேரம் செலவழிப்பதில்லை. எவை என் நிறுவனத்துக்கு வெற்றி தேடிக் கொடுக்குமோ, அந்தச் செயல்களைச் செய்யவே நேரத்தை அர்ப்பணிப்பேன்.'

- முகில்



"தலைவர் இன்னும் பழசை மறக்கலேனு எப்படி சொல்றே?"

"பாரு... விழாவிலகூட ஃபோட்டோ எடுக்கிறப்போ எப்படியெல்லாம் முகத்தைத் திருப்பிக்கிறாரு, மூடிக்கிறாரு..?!"

- தஞ்சை பா.து.பிரகாஷ்



ஜம்புநாதனைப் பார்க்கப்போன சமயம் மனிதர் மிகவும் சோர்ந்து உட்கார்ந்து இருந்தார். ''என்ன சார்? வாக்கிங்லே கூட காணோம்?'' என்றேன். உடனே ஞாபகம் வந்து, ''ஸார்... மணி இரண்டு ஆகப் போகிறது. தூக்கத்தைக் கெடுத்துவிட்டேனா?''என்றேன்.

''தூக்கமா!'' என்றார். ''அது தொலைந்துபோய் ஒரு வாரமாகிறது'' சட்டென்று புருவம் மேலே உயர, ''என் பழக்கம்தான் உங்களுக்குத் தெரியுமே?''



''ஆமாமாம். இரண்டு தலையணையை மேலே போட்டுக்கொண்டு சுகமாக இருபது நிமிஷம் பேப்பர் படித்த பின் தூங்குவீங்களே!''

''கூடாதாம்! கண்ணுக்குக் கெடுதலாம்.''

''யார் சொன்னது?''

''க்ரூப் ஆஃப் எல்.ஏ. ரிசர்ச்சர்ஸ். இதோ 'கட்டிங்'... என் மனைவிக்கென்று இதெல்லாம் கண்ணில் படும்''

''சரி... ஃபார் எ சேஞ்ச், பழைய கேஸட்டுகளை எடுத்துக் கேட்பீங்களே? ஆ... அந்த 'சக்கனி ராஜ' கேஸட்டை தொடும்போதே மதுரை மணியின் குரல் காதில் ஒலிக்கும்பீங்களே!''

''ஊஹூம்'' என்ற பாவனையில் தலை ஆட்டினார். ''ஒரு நாள் எடுத்துக் கேட்டேன்.. அலமாரியிலேருந்து தூசி பரவி நாசியில் ஏறிடுச்சு. வீஸிங் வந்து அவஸ்தைப்பட்டேன்.''

''அதற்குத்தான் ஸ்டைலாக பைப் உறிஞ்சற மாதிரி இன்ஹேலர் இருக்கே?''

''அதை ஏன் கேட்கிறீங்க. வீஸிங் 'இஸ்கிமியா'வில் கொண்டு விடுமாம்... அடிக்கடி இன்ஹேல் பண்ணக் கூடாதாமே''

''யார் அறிவுரை?''

''உள்ளூர்... இந்திய பாரத தேசம்.. ஐ.சி.எம்.ஆர்.''

''சரியாப் போச்சு!''

''சரியாப் போகலியே. அப்பப்பா... நான் படுகிற அவஸ்தை'' என்று அவர் சொல்லும்போதே, முகத்தில் ஒரு சலிப்பு...

யோசித்தேன். சட்டென்று ஞாபகம்

வாதூலன்

வந்து ''உங்களிடம் ஒரு ஹாபிட் உண்டே? தேங்காய் விள்ளலைத் தின்று ஒரு வாழைப் பழம் சாப்பிட்டு இரண்டு மூன்று தம்ளர் குடித்தவுடன்...''

ஜம்புநாதன் குறுக்கிட்டார். ''அது போல் செய்யக் கூடாதாம். தேங்காய் கொலஸ்ட்ரால்... சாப்பிட்டவுடன் பழம் சாப்பிடக் கூடாதாம்... உடனே தண்ணீர் குடிக்கக் கூடாதாம். இது பி.எம்.ஜே. ரிப்போர்ட்.''

அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. சில நிமிடம் கழித்து, ''மத்தியானத் தூக்கம் இல்லாவிட்டாலென்ன... ராத்திரி நன்றாகத் தூக்கம் வரும்...'' சிறிது தயக்கத்துடன் ''ஆனந்தமாகக் குறட்டை விடுவீர்களே? குறட்டைகூட ஆனந்த பைரவி ராகம் போல... 'ஓ ஜகதம்பா' மாதிரின்னு கேலி செய்வோமே?''


''அது தெரியாதா!'' என்றார். குரலில் சிறிது கேலி, நிமிர்ந்து உட்கார்ந்தார். மேஜையில் தேடினார், தேடி ஒரு தினசரித் தாளை வீசினார். ''குறட்டை விட்டால் மூச்சு அடைக்குமாம். வாயைத் திறந்து தூங்கக் கூடாதாம். ஏதோ பெயர். 'ஸ்லீப் சஃபோனா'...''

தினசரியைப் பார்த்தேன். பேப்பரில் 'கனடா ரிசர்ச் குரூப்' என்றிருந்தது.

''விடுங்கள் சார்! குழந்தைகளுக்கு பல் முளைக்கிற சிக்கல் போல, வயசானவங்களுக்கு பல் விழுகிற சிக்கல் வரும் போல! நிறைய பால் சேர்த்து ஹார்லிக்ஸ் குடித்தால் சுகமாகத் தூக்கம் வருமே.''

கொஞ்ச நேரம் பேசாமலிருந்துவிட்டு,

'அ'னா 'ஆ'வன்னா!





அடி!

வாய்க்கு ருசியாக
சமைத்துப் போடும்
கைக்கு வளையல்
பண்ணிப் போடவேண்டும்
அன்பாய்ப் பேசும் கணவர்...

நிமிஷமாக வேலையை
முடித்துக் கொடுத்ததற்கு
அதிசயிக்கும் மானேஜர்...
அத்தனைப் பாராட்டும்
அடிபட்டுப் போனது,
உனக்குக் கிடையாது
ஆயாவுக்குத்தான் முத்தம் என்று
என் குழந்தை
சொன்னபோது!

- ஜெயந்தி சிவகுமார்

"அது தெரியாதா உங்களுக்கு! பாலே கூடாதாம். பால்... பால் சார்ந்த எந்தப் பொருளும் சேர்க்கக் கூடாதாமே! அப்போதான் உடம்பு ட்ரிம்-ஆக இருக்குமாம்..." என்றார், தன்னையே பார்த்துக் கொண்டு, "உடம்பு வேறே ரெட்டை நாடியா?" என்று முணுமுணுத்தார்.

"இது என்ன ரிப்போர்ட். அமெரிக்கா? இந்தியா? இங்கிலாந்து?" என்று கேட்டேன் 'குரோர்பதி' கேள்வி பாணியில்!

"மூன்றுமில்லை!"

"பின்னே? மூன்றாம் மனுஷன்?"

ஜம்புநாதன் சுதாரித்துக் கொண்டார். "ஒய்ஃபின் கஸின்! பால் அருந்துவதின் தீமைகளைப் பற்றி லெக்சரே அடித்தார். "நான் ஏன் பாலை வெறுக்கிறேன்?' என்று ஒரு புத்தகம் எழுதுமளவுக்கு மேட்டர் இருக்கு அவரிடம்" அலுத்துக் கொண்டார். "சட்... எதிலும் மிதமா இல்லை இந்த வீட்டில்!"

"பதமாக இருந்தால் சரி?"

"மண்ணாங்கட்டி! என்னை உசிரோட வதம் செய்கிறார்கள்!"என்று. கொட்டாவி விட்டார். உட்கார்ந்தபடி தினசரியைப் படிக்க முயற்சி எடுத்தார்.

எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. "உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்றேன். கிளம்பினேன்.

வாசல் வரைக்கும் வந்தார்...

"பீன்ஸ் கூட்டு... உருளைக் கிழங்கு கறி... சாம்பார் எல்லாம் மறந்துவிட்டது. அதற்குப் பதிலாக ஃபைபர், கொலஸ்ட்ரால், கார்போஹைட்ரேட்.. ப்ரோட்டீன்... இந்த வார்த்தைகள்தான்!"

"அந்த வார்த்தைகளில் ஒரு வசியம் இருக்கு சார்!"


"ருசிதான் இல்லை!" என்றார்.

தெருக்கோடி வரை வந்தேன். தூரத்தில் என் மனைவி வந்து கொண்டிருப்பது புலப்பட்டது. அடடா... இன்று பஜனை கிளாஸ் சீக்கிரம் முடிந்து விட்டதா?

ஜம்புநாதன் வீட்டில் 'அ'னா என்றால்.... இவன் 'ஆ'வன்னா, (அதாவது 'அலோபதி; ஆயுர்வேதம்) என்னைப் பார்த்தால் 'சனிக்கிழமை எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு... கிருதம் சாப்பிட்டால் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளணுமே. எதுக்கு வெளியே புறப்பட்டீங்க?' என்று வக்கீல் போலத் துளைத்து விடுவானே?

குறுக்குக் கேள்வியிலிருந்து தப்பிக்கக் குறுக்கு வழியில் நடையைக் கட்டினேன். ⊙

புக் சாட்



"வெள்ளிப் பனிமலையின் மீதுலவு வோம். அடி மேலைக் கடல்முழுதும் கப்பல் விடுவோம்" ஸ்ரேயா உச்சஸ் தாயில் பாடலைத் தொடர்வதற்கு முன் வசந்த் குறுக்கிட்டான்.

"ஏய் ஏய் வெயிட்... என்ன திடீர்னு கப்பல் பாட்டு?"

"கடல்வழி வணிகம் படிச்சா நீ கூட இப்படித்தான் பாடுவே. ஒரே மூச்சுல உட்கார்ந்து படிச்சிட்டேன் தெரியுமா? சுவாரசியமான பல விஷயங்கள் இருக்கு. நரசய்யா தெரியுமில்லை? அவரு தான் எழுதியிருக்காரு. பத்து வருஷம் கப்பல்ல வேலை செஞ்சவர். பழங்காலம், இடைக் காலம் இப்படி பல்வேறு காலகட்டத்துல இந்தியாவில செழிப்பா இருந்த கப்பல் போக்குவரத்து, வர்த்தகம் இதைப் பத்தி யெல்லாம் தெளிவா எழுதியிருக்காரு. நிறைய ஆதாரங்கள் கொடுத்திருக்காரு. இந்தியாவுக்கு கப்பல் வணிகம் ஒண்ணும் புதுசில்லைன்னு நரசய்யா உறுதியா சொல்றாரு. சங்க இலக்கியம், சிலப்பதி காரம்னு நிறைய கொடேஷன்ஸ் கொடுத் திருக்காரு. இன்ட்ரெஸ்டிங்காவும் இருக்கு. ஆச்சரியமாவும் இருக்கு. பாயிண்ட் என்னன்னா கொஞ்சம்கூட போரடிக்கவே யில்லை."

"எனக்குக் கூட கப்பல் பத்தி டெக்னிக்கலா நல்லா தெரியும். சின்ன வயசுல நிறைய்ய்ய கத்திக் கப்பல் செஞ்சு விட்டிருக்கேன்."



"அதான் தெரியுமே... சரி இப்ப என்ன படிச்சே?"

"தனியார்மயம் - தாராளமயம் - உலகமயத்தால் வளர்ச்சியா வீழ்ச்சியா? இது தான் புக்கோட டைட்டில். புக்கோட தீம் என்னன்னு புரிஞ்சிருக்கும். இந்த மாதிரி நவீன கொள்கைகளால என்னென்ன பாதிப்புகளை நாம் சந்திச்சிருக்கோம், இந்தப் பாதிப்புகளுக்கு யாரு காரணம்னு ஆழமா புள்ளி விவரங்களோட ஆய்வு செஞ்சி ருக்காங்க. கால்சென்டர், கால்நடை, விவ சாயம் இப்படி எல்லாத் துறையிலயும் உலக மயமாக்கம் ஊடுருவியிருக்கு. ஆனால் அடிப்படை பிரச்னைகள் தீரலை. இன் னமும் அதிகமா தான் ஆயிருக்கு. இதுக் கெல்லாம் என்ன காரணம், யார் காரணம்னு டீடெய்லா அலசியிருக்காங்க.

எல்லாருக்கும் கலர் மொபைல் கிடைச்சா மட்டும் போதுமா, சாப்பாடு வேணாமான்னு சுளீர்னு கேட்கறாங்க. கட்டாயம் படிக்க வேண்டிய புக்."

"ஓ.கே. நீ நாளைக்கு எடுத்துட்டு வா. நான் உனக்கு கப்பல் புக் தரேன். கிளம் பறதுக்கு முன்னாடி சிலப்பதிகாரத்துல இருந்து கப்பல் பாட்டு ஒண்ணு பாடறேன் கேட்கறியா?"

"கட்டாயம் கேட்கறேன். அதுக்கு முன் னாடி என் கடைசி ஆசை என்னன்னு சொல்லட்டுமா?" என்ற வசந்தை நின்று நிதானமாக முறைத்தாள் ஸ்ரேயா.

கடல்வழி வணிகம், நரசய்யா, பழனியப்பா பிரதர்ஸ், கோனார் மாளிகை, 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14. பக்கம் - 382. விலை ரூ. 225.00

தனியார்மயம் - தாராளமயம் - உலகமயத்தால் வளர்ச்சியா வீழ்ச்சியா? புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, 110, இரண்டாம் தளம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை - 24. பக்கம் 156, விலை ரூ. 60.00

'வீட்டை இடித்துவிட்டு, மாற்றி மாற்றிக் கட்டுவதுதான் வாஸ்து சாஸ்திரம்' என்ற எண்ணம் மக்கள் மனத்தில் புரையோடி விட்டது. ஆனால் உண்மை அதுவல்ல; மனையடி சாஸ்திரம் அல்லது பூமி சாஸ்திரம்தான் வாஸ்து சாஸ்திரம் என்கிறார் பிரபல வாஸ்து நிபுணரான காஞ்சி கிருஷ்ணா.

'வாஸ்து சாஸ்திரம்' நாம் குடியிருக்கும் வீடுகளுக்கு மட்டும்தான் பொருந்துமா?

இல்லை... மனையடி சாஸ்திரம் என்பது பூமியின் மீதுள்ள அனைத்து விதமான கட்டடங்களுக்கும் பொருந்தும். அது வீடாக, வர்த்தக நிறுவனமாக, பள்ளிக்கூடமாக... மருத்துவமனையாக... என்று எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். இந்த சாஸ்திரத்தைக் கட்டடம் எழுப்புவதற்கு முன்னரும் பயன்படுத்தலாம். கட்டி முடித்தவுடன் சின்னஞ்சிறு இடையூறுகள் வருமானால் அப்போது இதனைப் பயன்படுத்தி சரி செய்யலாம். ஆனால் வருமுன் காப்பதுதானே நல்லது?

இது கட்டடத்திற்கு என்ன மாதிரியான வரையறைகளைச் சொல்கிறது?

ஒரு கட்டடம் என்றால் அதில் எந்தப் பகுதி எந்தத் திசையில் இருக்கவேண்டும்... (குறிப்பாக இருக்கக் கூடாது.) எந்தப் பொருள் எந்தப் பகுதியில் இருக்க வேண்டும் என்பதை வரையறை செய்கிறது. உதாரணமாக சமையலறை என்பது அக்னி மூலையில் இருக்க வேண்டும். பூஜையறை என்றால் அது ஈசான்ய மூலையில் இருக்க வேண்டும். இப்படி நிறைய இருக்கின்றன.

இதன்படி அமையாவிட்டால் என்ன மாதிரியான விளைவுகள் ஏற்படும்..?

வாஸ்து சாஸ்திரப்படி அந்தக் கட்டடம் சரியாக அமையவில்லை என்றால் அது முதலில் அந்த வீட்டு எஜமானனைத் தான் தாக்கும். அவரைக் கொஞ்சம் கொஞ்சமாக சரிவுப் பாதையில் தள்ளும். அவருடைய மனம் எதையாவது நினைத்து வருந்திக் கொண்டே இருக்கும். இத்தகைய வருத்தங்கள் அவருடைய வாரிசுகளால்கூட ஏற்படலாம். பெண்ணுக்குத் திருமணம் தள்ளிப் போவது, பிள்ளைக்கு வேலை பிரச்னை, குடும்பத்தில் எப்போதும் சண்டை சச்சரவு இப்படி நிறைய பாதிப்புகள் ஏற்படும்.

'எஜமான்' என்பவர் யார்? குடும்பத் தலைவரா அல்லது கட்டடம் யார் பெயரில் உள்ளதோ அவரா..?

அது சம்பந்தப்பட்ட வீட்டைப் பொறுத்தது. அவர் குடும்பத் தலைவராக அல்லது மற்ற அங்கத்தினராக இருக்கலாம். ஒருவேளை குடும்பத் தலைவர் நோயுற்றவராக இருந்தால் அவர் வாஸ்து சாஸ்திரப்படி 'எஜமானன்' அல்ல. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், அந்த வீட்டில் நன்கு அதிகாரத்துடன் செயல்படக்கூடிய, குடும்பத்தை தாங்கி வழிநடத்தக் கூடியவர்தான் 'எஜமான்'.

குறைபாடுகளை எப்படி நிவர்த்தி செய்கிறீர்கள்... 'கடப்பாரை' டெக்னிக் தானா...?

(சிரிக்கிறார்) நிறையபேர் இப்படித்தான் நினைக்கிறார்கள். அதற்குக் காரணம் திரைப்படங்களில் நகைச்சுவை நடிகர்கள் வாஸ்துவைக் கேலிப் பொருளாக்கிவிட்டதுதான். ஆனால் தனக்கு வந்தால்தானே தெரியும் தலைவலியும்... திருகு வலியும்... எதை எடுத்தாலும் உடனே அதை இடித்துவிட்டு, மாற்றிக் கட்டுவது தீர்வு அல்ல. என்னைக் கேட்டால், "வாஸ்து பார்த்து வீடு கட்டு. கட்டியபிறகு இடிக்காதே" என்றுதான் சொல்வேன். குறைபாடு இருக்குமானால், முடிந்தவரை பொருள்களையோ அல்லது இடத்தையோ மாற்றி அமைத்தே சரி செய்துவிடலாம். உதாரணமாக ஒருவருடைய வீட்டில் அக்னி மூலையில் சமையல் செய்யப்படுவதில்லை. அதற்கான வசதி வாய்ப்பும் அங்கு இல்லை. என்ன செய்வது? ஒரு டேபிளை அக்னி

வாஸ்து..

மூலையில் இருக்குமாறு வைத்து, அதன்மீது கேஸ் ஸ்டவ்வை வைத்து சமைக்கச் சொல்லி விட்டேன். அந்த வீட்டில் அதுதான் செய்ய முடிந்தது. சமைத்து முடித்த பிறகு அதனை டைனிங் ஹாலில் வைத்துச் சாப்பிட்டார்கள். இப்பொழுது அந்த வீட்டில்



வேஸ்டா?

ஓரளவுக்கு மாற்றம் ஏற்பட்டுள்ளது. இப்படி சின்னஞ்சிறு மாற்றங்கள் மூலம் பிரச்னைகளைச் சரி செய்யலாம். ஒருவேளை பிரச்னை பூதாகரமாக இருக்குமானால் கட்டடத்தில் தேவையான அளவில் மாற்றம் செய்து கொள்ளலாம்.

சொந்த வீட்டுக்கு மட்டும் தான் வாஸ்து சாஸ்திரமா?

இன்றைய காலகட்டத்தில் எல்லாருக்கும் சொந்த வீடு இருப்பது சாத்தியமல்ல. வாடகை வீட்டுக்கும் வாஸ்து சாஸ்திரம் உண்டு. அந்த வீட்டில் குறைபாடு இருக்குமானால் சின்னஞ்சிறு மாற்றங்கள் செய்து குறைகளைச் சரி செய்யலாம். இங்கு நீங்கள் சொன்ன 'கடப்பாரை' டெக்னிக்கை செய்ய முடியாது.

சரி... வீடு என்றால் சமையலறை - பூஜையறை - படுக்கையறையை இடமாற்றி சரி செய்துவிடலாம். மற்றபடி வர்த்தக நிறுவனம், மருத்துவமனை இங்கெல்லாம் எப்படி?

எல்லாவற்றுக்கும் வாஸ்து சாஸ்திரம் வழி சொல்கிறது. உதாரணமாக மளிகைக் கடை என்று வைத்துக் கொள்வோம். அதில் முக்கியமானவை கல்லாப்பெட்டி, வாடிக்கையாளர் நிற்கும் இடம், குடோன் ஆகியவை... இவை முறைப்படி இல்லாவிட்டால் பிரச்னைகள் வரும். இவற்றை வாஸ்து சாஸ்திரப்படி மாற்றலாம். மருத்துவமனை என்றால் ஆபரேஷன் தியேட்டர், கல்வி நிலையம் என்றால் பாடம் சொல்லித்தரும் இடம் இப்படி முக்கியமான இடங்களை சரியான இடத்தில் வைத்தால் பிரச்னைகள் தீரும்.

உங்களைப் பற்றிச் சொல்லுங்களேன்..

எனது குரு என் பெரியப்பா தான். இளம் வயதிலிருந்தே எனக்கு ஜாதகம் பார்ப்பது, வாஸ்து பார்ப்பது ஆகியவற்றில் நாட்டம் அதிகம். எஸ்.எஸ்.எல்.சி. முடித்துவிட்டு டி.வி.எஸ். கம்பெனியில் பணியில் சேர்ந்தேன். அலுவலகம் முடிந்து வீட்டுக்கு வந்தபின் ஜோதிடம், வாஸ்து பார்ப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். இது தொடர்பாகச் சில ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டேன். சில வருடங்களுக்கு முன்பு அந்த நிறுவனத்தில் இருந்து விருப்ப ஓய்வு பெற்று, இப்போது முழு நேரமும் இதில் இறங்கிவிட்டேன். எனது பெயர் வி.பி. முகுந்தன். எனக்கு என் பெரியப்பா இட்ட பெயர் கிருஷ்ணா. எனது சொந்த ஊர் காஞ்சிபுரம் என்பதால் அதையும் சேர்த்து 'காஞ்சி கிருஷ்ணா' ஆகிவிட்டேன்."

- முத்து

படம் : ஸ்ரீஹரி

பயம், பயமறிய

தன்னைத் தேடி வந்த காவல் அதிகாரியை அனுப்பி வைத்துவிட்டு அறைக்குள் நுழைந்த ஜெஃப்ரி டாமர், பூனைக்குட்டியைப் போல் ஒரு மூலையில் முடங்கிக்கிடந்த கொனேராக் எனும் இளைஞனை நோக்கித் திரும்பினான்.

"இங்கே வா தம்பி... அடடே இப்படியெல்லாம் பயப்படலாமா? வா..." தனது இரண்டு கைகளையும் நீட்டி கொனேராக்கை எட்டிப் பிடித்தான் ஜெஃப்ரி. வெடித்து அழுவதற்குத் தயாராகயிருந்த அந்த இளைஞனைக் கட்டியணைத்தான்.

"நீ எனக்கு பதிமூணாவது ஆள். ராசியில்லாத நம்பர்"

காட்டுத்தனமாகச் சிரித்துக் கொண்டே கொனேராக் மீது பாய்ந்த ஜெஃப்ரி அவனது குரல்வளையை நெரிக்கத் தொடங்கினான். அடுத்த பத்தாவது நிமிடத்தில் கொனேராக் துடிதுடித்தபடி இறந்துபோனான்.

சிறிது நேரம் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்ட ஜெஃப்ரி இறந்து போன சடலத்தின் காலைப் பிடித்து தரதரவென நடு ஹாலுக்கு இழுத்து வந்து கிடத்தினான். இன்றைக்குச் சரியான வேட்டைதான். பசி வேறு வயிற்றைக் கிள்ளியது. சமையலறைக்குச் சென்று தகுந்த வெட்டுக்கத்திகளைப் பொறுக்கி எடுத்துக் கொண்டான். நன்றாகக் கழுவப்பட்ட சில தட்டுக்களை அள்ளிக் கொண்டான். பிறகு ஒரு கூஜா நிறைய தண்ணீர். இடையில் விக்கினால் குடிக்க வேண்டுமே! மென்று மென்று சுவைக்கத் தொடங்கினான்.

யாரும் ஜெஃப்ரியை சந்தேகிக்கவில்லை. இவனுடைய டிபனுக்காகக் காணாமல் போன கறுப்பர்களைத் தேடுவதற்கும் நாதியில்லை. தனிக்காட்டு ராஜா போல் வாழ்ந்து வந்த இவன் மாட்டிக் கொண்டது யதேச்சையாகத்தான்.


ஒரு சமயம் இரண்டு காவல் துறையினர் ரோந்து சென்று கொண்டிருந்த பொழுது கைவிலங்கோடு ஒருவன் ஓடிக் கொண்டிருந்ததைக் கண்டனர். அவனை நிறுத்தி விசாரித்தபொழுது ஒரு மிருகத்தனமான மனிதன் தன்னை வீட்டுக்குள் அடைத்துவைத்து துன்புறுத்தி வருவதாகக் கூறி அழுதான்.

முந்தைய அதிகாரியைப் போலவே இந்த இருவரும் ஜெஃப்ரியின் வீட்டைத் தேடிக்கொண்டு சென்றனர். வழக்கம் போல் கதவைத் திறந்து இன்முகத்துடன் இளித்தபடி வரவேற்றான் ஜெஃப்ரி. வழக்கம் போலவே கைவிலங்கிடப்பட்டவன்

• நீதி மன்றத்தில்...



உலகை உலுக்கிய குற்றங்கள்! 6



தன்னுடைய உயிர்த் தோழன் என்றும் இப்படித்தான் ச்சும்மாக்காட்டி திருடன் விளையாட்டு விளையாடுவோம் என்றும் தெரிவித்தான்.

மூத்த அதிகாரிக்கு ஏனோ இவன்மீது ஒரு சந்தேகப்புள்ளி விழ, பேச்சுக் கொடுத்துக்கொண்டே அவனுடைய வீட்டுக்குள் நுழைந்தார். அறைக்குள் நுழைந்ததும் குப்பென்று வீசிய அழுக்கான காற்று அந்த அதிகாரியின் வயிற்றைப் பிசைந்தது. தனது கண்களைச் சுழலவிட்டார். சந்தேகப்படும்படியாக

இழவல்!

ஒன்றுமில்லை. பளிச்சென்று கழுவப்பட்டிருந்த அறை. தூசி தும்புகள் அற்ற அலமாரிகள். நாற்காலிகள், டீப்பாய். 'இதென்ன ரூம்?' என்று கேட்டபடியே சமையலறைக்குள் நுழைந்தார்.

மீண்டும் ஒரு வித வித்தியாசமான வாடை. சுற்றும் முற்றும் பார்த்தார். அடுப்புக்கு அருகே சுவரில் சில புகைப்படங்கள். நெருங்கிப்போய் அவற்றை உற்றுப் பார்த்தார். புரியாமல் இருக்கவே பின்நவீனத்துவ ஓவியங்கள் என்று நினைத்துக் கொண்டார். மீண்டும் கூர்மையுடன் கவனித்தபொழுது அதிர்ந்து போனார். பல்வேறு மனித உடல் பாகங்கள் ரத்தம் சொட்டச் சொட்ட அவர் முன் காட்சியளித்தன. பெரும்பாலும் க்ளோஸ் அப் ஷாட்டுகள். காது, சுண்டு விரல், இருதயம் இப்படியாக. தனித்தனியாக. அருகிலிருந்த பிரிட்ஜைத் திறந்தார். உள்ளே, கொலை செய்யப்பட்ட மனித உடல் பாகங்கள்.

குமட்டிக்கொண்டு வந்தது அவருக்கு. ஏதோ அவார்டுகளை வாங்கிக் குவித்து வைத்ததைப் போல கைகளைக் கட்டிக்கொண்டு அடக்கமாக நின்றுகொண்டிருந்த அந்த ஜந்துவைக் குண்டுக்கட்டாக இழுத்துக்கொண்டு போய் ஜீப்பில் உட்கார வைத்தார்கள். (சாப்பிடுவதற்கு ஏதேனும் வாங்கிக் கொடுத்திருப்பார்கள் என்று யூகிக்கலாம். பசிக்கிறது என்று யாரையாவது வழியில் பிடித்து இழுத்து சாப்பிட்டுவிட்டால்...)

இவனது குற்றப்பட்டியலைக் கேட்டு நீதிமன்றமே கிடுகிடுத்தது. முற்றிய மனநோயாளி என்பதையும் மீறி, மொத்தமாகக் கூட்டி கழித்து 957 வருட சிறைத் தண்டனை விதித்தார்கள். ஆனால் இரண்டே வருடங்களில், இவன் வேறொருவனால் சிறைச்சாலையில் கொல்லப்பட்டான்.

(திகில் பரவும்)

–மருதன்



30 இந்திரா சௌந்தர்ராஜன்

'புலன்களுக்கெல்லாம்
நான் அவதாரம்
நினைவுகளுக்குள்ளோ
நிகரில்லா தத்துவம்!
- ஸ்ரீ கிருஷ்ணன்

கண்ணன், பேச்சோடு நிற்கவில்லை. கணேஷின் அப்பாவோடு படுவேகமாகக் கிளம்பியும் விட்டான். அதுவரை பொறுமையாக அங்கு நடப்பதை ஒரு பார்வையாளர் போல கவனித்து வந்த அனுராதா, கண்ணனின் புறப்பாட்டை ஒரு பெரும் இழப்பாக உணரத் தொடங்கி பரபரப்பானாள்.

"மிஸ்டர் கண்ணன் நில்லுங்க..." - என்று குரல் கொடுத்துத் தடுத்தாள். அதைத் தொடர்ந்து கண்ணன் அவளைத் திரும்பிப் பார்க்கவும், தவித்தாள்.

"என்னம்மா... எதுக்கு நிக்கச் சொன்னே..."

"இல்ல... நீங்க அவசியம் போகணுமா?"

"அது என் கடமைம்மா..."

"......................."

"இப்படி மௌனமா இருந்தா என்ன அர்த்தம்?"

"அது---அது... நான் நிறைய விஷயங்களைக் கற்பனை செய்து வைச்சுருந்தேன்... அதெல்லாம்..."

"நீ கற்பனை செய்து வைச்ச விஷயங்களுக்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?"

"இல்ல உங்களோட நிறைய பேசணும். உங்ககிட்ட நிறைய கேள்விகளை நான் கேட்க வேண்டியிருக்கு..."

"பேட்டியா... என்கிட்டயா?"

"ஆ... ஆமாம்..."- அனு திணறினாள்.

"நோ பிராப்ளம். இப்பவே கூட பேட்டி எடுத்துக்கோ. உனக்கு நான் பதில் சொல் லிட்டே கிளம்பறேன்"

"தே...தே...தேங்க்ஸ்..."

"ஆமா, என்னை மாதிரி அட்ரஸ் இல் லாத ஆளோட பேட்டியை எல்லாம் உன் பத்திரிகை போடுமா?"

"அட்ரஸ் இல்லாத ஒருத்தரா உங்களை என்னால நினைக்க முடியல..."

"அட்ரஸ்னு நான் சொன்னது வேற பொருள்ல... நான் ஒரு கணக்கன். எனக்கு எல்லாமே கணக்குதான். இந்தக் கணக்கன் கிட்ட நீ பேட்டி காண என்ன இருக்கு?"

"இப்படி நின்னுக்கிட்டே பேசினா எப்படி... முதல்ல கொஞ்சம் உட்காருங்க. எனக்கு கஷ்டமா இருக்கு..."

"விடமாட்டே போல இருக்கே..."

கண்ணன் அந்தக் கேள்வியோடு கணே சனை ஒரு பார்வையும், அவன் அப்பாவை





எங்கே என் கண்ணன்?

ஒரு பார்வையும் பார்த்துவிட்டு அவன் எதிரில் சடக்கென்று தரையில் சப்பண மிட்டு அமர்ந்தான். பின் தோரணையாகப் பார்த்து சற்றுக் கிண்டலாக "கேள்விகள் ஆரம்பமாகட்டும்.." என்றான். அனுராதா கணேஷைத்தான் முதலில் பார்த்தாள். அவனிடம் ஒரு தெளிவில்லாத குழப்பம்.

"இவருக்குள்ளேயும் நிறைய கேள்விகள் இருக்கு. அதெல் லாம்கூட பிறகு தான். என் வரைல நீங்க ஒரு புதிராத்தான் தெரியறீங்க... உங்க விசிட்... அப்புறம் உங்க பேச்சு, பார்ட்டி குலரா உங்க மேல பறவைகள் வந்து உங் களை ஒரு மரக்கிளையா நினைச்சு தங்கின

தெல்லாம் ஒரு மாய மந்திரம் மாதிரி இருக்கு. அது எப்படி?"

"அது எப்படின்னா.... என்ன கேக்கறே நீ?"

"இல்ல... பறவைகள் உங்ககிட்ட எப்படி வந்தது?"

"இது ஒரு விஷயமா... பரிபூரண அன்பை உனக்குள்ள நிரப்பிப்பார்... பாம்புகூட உன்கிட்ட வரும். அதோட தலை மேல நின்னு ஆட்டமே போடலாம். நீ நம்பு வியோ மாட்டியோ நான் அப்படி ஆட்டம் போட்டவன்...!"

அந்தப் பதில் அவன் முதுகில் ஊசி ஏற்றியது போல நிமிர்த்தியது.

"பரிபூரண அன்புன்னா... அப்படி நான் இல்லாம இருக்கலாம். ஆனா நிறைய துறவிகள் அப்படி இருந்து பார்த்திருக்கேன். ஆனா அவங்ககிட்ட இப்படி அதிசயக் காட்சியை நான் பார்த்தில்லையே...?"

"எப்பவும் சுய அனுபவம்தான் நிதர்சனம். கண்ணும் அதோட காட்சியும் ஒரு எல்லை வரைதான். நீ பரிபூரண அன்புக்கு உன்னை மாத்திக்கோ... அப்புறமா சொல்... ஆனா அது அவ்வளவு சுலபமில்ல. இந்த உலகத்துல இருக்கற மாயை அவ்வளவு சுலபத்துல உன்னை அன்பானவனா நூறு சதவிகிதம் ஆக்கிடாது. ஒரு எண்பது தொண்ணூறு பர்சன்ட் வரை வேணும்னா நீ வரலாம்"

"அப்ப நூறு பர்சன்ட் வந்தாதான் சாத்யமா?"

"நிச்சயமா... நூறுதான் பரிபூரணம். உனக்கு நான் கணக்குல பதில் சொல் லட்டுமா?"

"எப்படி?"

"அப்படிக் கேள்... ஒண்ணுக்கு பக்கத்துல எத்தனை பூஜ்யம் விழுந்தா நூறு...?"

"ரெண்டு..."

"இந்த ரெண்டு பூஜ் யத்துக்கும் அர்த்தம் என்ன தெரியுமா?"

"சொல்லுங்க"

"இந்த பூஜ்யம் இருக்கே... இதுதான் எல் லாம். இதுக்கு மட்டும் ஆரம்பமும் கிடையாது, முடிவும் கிடையாது. இதுக்கு மட்டும் கிழக்கு, வடக்கு, மேற்கு, தெற்குன்னு திசைகளும் கிடையாது. இதுக் குள்ள எல்லாமே வந்துடுது. கொஞ்சம் ஆழ்ந்து யோசிச்சுப் பார்த்தா இந்த மகாபார தத்து கண்ணன் பீற்றிப்பானே...? 'ஆதியும் நானே... அந்தமும் நானே... மரம் செடி கொடியும் நானே... எனக்குள்ள எல்லாமே இருக்கு... நான் வேற இந்தப் பிரபஞ்சம் வேற இல்ல'ன்னு தினுசா தினுசா சொல்வானே...? அது கண்ணனுக்குப் பொருந்துமோ பொருந் தாதோ, இந்த பூஜ்யத்துக்குப் பொருந்தும்.

ஒரு ஆச்சரியம் பார்... இது தனியா இருந்தா நத்திங். ஆனா இதுக்குப் பக்கத்துல ஒரு எண்... இரண்டுன்னு வெச்சுக்கோயேன். இது போய் பணிவா முன்பக்கம் நின்னா இரண்டு அடுத்த செகண்ட் இருபதாயிடுது. அதே திமிரா அந்தப் பக்கம் போய் நின்னா பலமடங்கு குறைஞ்சு இரண்டுனு ஆயிடுது. இல்லையா?"

"ஆமா... ஆனா நீங்க நூறுக்கு விளக்கம் சொல்லத் தொடங்கி எங்கேயோ போய்ட்ட மாதிரி இருக்கே?"

"அப்படியா... இப்பவே ரிவர்ஸ் கியர் போட்டு பின்னால வந்துடறேன். நான் பூஜ்யம் பத்தி அதோட சக்தியை உனக்கு புரியவைக்கத்தான் இருபது, இரண்டு'ன்னு விளக்கம் கொடுத்தேன்.

'ஒண்ணுமேயில்லாத ஒரு விஷயம் பூஜ்யம். இதுகிட்ட எண்கள் முன்னபின்ன போய் நிக்கும்போது எப்படி சக்தி மிக்க பரிமாணத்துக்கு மாறுது... அது எப்படி முடி' யும்? எந்தப் பகுத்தறிவுவாதியாவது இதுபத்தி யோசிச்சுக் கேள்வி கேட்டதுண்டா?"

"நீங்க என்ன சொல்ல வர்றீங்க?"

"ரொம்ப சிம்பிள்... உடம்பு, மனசுங்கற இரண்டும் பூஜ்யமாயிட்டா ஒருத்தர் பூஜ்ய ஸ்ரீன்னு சாமியார் ஆயிடறார். அதாவது இரண்டுமே பூஜ்யமாகணும். உடம்பு இச்சைகள்ள இருந்து பரிபூரண விடுதலை பெற்றா அது ஸ்தூல பூஜ்யம். மனசுல எண்ணங்களே இல்லாத பரிபூரண அமைதி பெற்றா அது சூட்சும பூஜ்யம்.

இந்த இரண்டு பூஜ்யமும் ஆத்மாங்கற உயிர் பக்கத்துல விழும்போது அந்த ஆத்மா பரிபூரண சித்தி பெற்று மோட்ச கதி அடை யுது. இதுல ஒண்ணு குறைஞ்சாலும் அது பரிபூரணமில்லை"

"அப்ப நீங்க அப்படி ஒரு பரிபூரணமான

"ஏன் சாமி, உங்க ஜோசியத் திறமை எல்லாம் இவ்வளவுதானா?!"

"சரிப்பா. அதுக்குன்னு 'சிவாஜி' படத் தோட க்ளைமாக்ஸ் எப்படி இருக்கும்னு ஆருடம் பார்த்துச் சொல்லச் சொன்னா எப்படி?!"

- யமுனா ரெங்கநாதன்

ஒருவரா?"

"அது எனக்குத் தெரியாது... ஆனா இப்படி பரிபூரணமானவன்கிட்டதான் பட்சிகள் பயமில்லாம வரும். அது மட்டும் தெரியும். அவனால எதுவும் செய்யமுடியும்னும் தெரியும்"

"இப்படிச் சொன்னா எப்படி... உங்க பதில்படி பார்த்தா நீங்க பரிபூரணமானவரா இருக்கணும்னுல்ல அர்த்தமாகுது..."

"ஒ..கூட்டிக் கழிச்சா விடை உனக்கு அப்படி வருதா... சரி அடுத்த கேள்வி..."

"எனக்கு இப்ப உங்ககிட்ட கேள்வி கேட்கவே தயக்கமா இருக்கு..."

"ஏன் பதில்ங்கற பேர்ல ரொம்பப் போரடிக்கறேனா?"

"இல்ல...ஆமாம்..."

"ஒரு கேள்விக்கு இரண்டு பதிலா... சாரி... நீ என் நேரத்தை வீணாக்கறே. உனக்கு ஒண்ணு மட்டும் சொல்லிக்கிறேன். நான் சொன்ன பதில்லதான் நீ கேக்கப்போற எல்லா கேள்விகளுக்கும் பதில் இருக்கு.

சர்க்கரையைச் சாப்பிட்டுப் பார்த்திராத ஒருத்தனுக்கு இனிப்பை எப்படி வார்த்தைகளால விளங்க வைக்க முடியாதோ அப்படித்தான் பரிபூரணமில்லாதவர்களுக்கு அதோட சக்தியும் தெரியாது. அது தெரியாததால அதுவே பொய்னும் சொல்லிடறது சுலபம்"

"இது என்ன பதில்... புரியாத ஒரு விஷயத்தை எப்படி ஒத்துக்க முடியும்? அதை விளங்கிக்க முயற்சி செய்யறது ஒண்ணும் தப்பில்லையே?"

"அம்மாடி...கணவன் மனைவி உறவுங்கறது ஒருத்தரை ஒருத்தர் பார்த்துப் பழகி புரிஞ்ச பிறகா ஆரம்பமாகுது. கல்யாணம்கற புள்ளியில புதுசா சேர்ந்த இரண்டு பேர் அன்னிக்கே நம்பிக்கையோட ஒருத்தரோட ஒருத்தர் கலந்து அப்புறமா போகப் போக குடும்பம்னா என்ன, வாழ்க்கைன்னா என்னன்னு விளங்கிக்கறதில்லையா?"

"அது... அது... சரி அதே இரண்டு பேர் திருமணத்துக்கு முன்னால பழகி, புரிஞ்சுகிட்டு அதன் பிறகு திருமணம் செய்துக்கறது இன்னமும் பெட்டர்தானே?"

"அப்படியா...? ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுகிட்ட பிறகு திருமணமா... அதுக்கு சில மாசமோ, இல்ல சில வருஷமே போதும்னா நீ நினைக்கறே...?"

"போதாதுன்னே வெச்சுப்போம்... ஏதோ கொஞ்சமாவது புரிஞ்சுக்கலாமே... அது தப்பில்லையே...?"

"அப்படி கொஞ்சமா புரிஞ்சுக்கிட்டது சரியில்லைன்னு வை... அப்ப அந்த ஆணோ பெண்ணோ என்ன முடிவு எடுப்பாங்க?"

"நல்லவேளை நாம கல்யாணம் பண்ணிக்கலை. பண்ணிக்கவும் வேண்டாம்னுதான் முடிவெடுப்பாங்க..."

"இதே கல்யாணம் பண்ணின ஜோடி என்ன முடிவெடுப்பாங்க...?"

"புரிஞ்சுகிட்ட விஷயம் தப்பா இருந்தா அதைத் திருத்திக்கவோ இல்லை திருத்தவோ தான் முயற்சி செய்ய முடியும் வேற வழி?"

"இப்படி யோசிச்சு சரிப்படுத்திக்கறது பலமா? அப்படி யோசிச்சு பிரிஞ்சு போறது பலமா?"

"சரி, செய்துக்கறதுதான் பலம்?"


"இந்தப் பதிலோட உன் ஆரம்ப கேள்விக்குப் போ. ஒரு விஷயத்தை விளங்கிக்க அதை விலக்கணுமா இல்லை நேசிக்கணுமாங்கறது உனக்குப் புரிஞ்சுடும்"

"அப்ப உங்களை விளங்கிக்க உங்ககிட்ட கேள்வி கேட்கக் கூடாதா... உங்களுக்குள்ள விழுந்துக்கணுமா...?"

"அப்படின்னு நான் சொல்லலை... கணக்குச் சொல்லுது. உன் பதில்கள்ள நீ சொன்னே..."

- கண்ணன் கையை நீட்டி சொன்ன விதத்தில் ஒரு அலாதி. அவனால் அதற்கு மேல் அவனிடம் கேட்க முடியவில்லை.

" என்ன பாக்கறே... இந்தப் பேட்டியை நீ உன் ஆசிரியருக்கு அனுப்பினா அப்படியே எடிட் பண்ணி, பச்சை மையால இந்த மாதிரி விசுத்தனமான பேட்டி எல்லாம் இனி எடுத்து நேரத்தை வீணாக்காதேன்னு எழுதிடுவாங்க... சரிம்மா... நான் போறேன்..."



கண்ணன் எழுந்தான். போறேன் என்கிற அந்தப் பதிலில் ஏதோ ஒரு மர்மமான உட்பொருள். கணேஷ் கிடடத்தட்ட அந்தப் பதில்களுக்



சிறப்பான சிந்தனை!

எஸ்.வி.ரமணனின் இயக்கத்தில் வெளிவந்திருக்கும், 'ஸ்நேஹம்' குறுந்தகட்டில் ஒரு டெலிபிலிம்!

கதை, தயாரிப்பு எல்லாமே 'கலைமாமணி' கோவை கே.ஆர்.எஸ். சமையல் காண்ட்ராக்டர் கிருஷ்ணன் கதாபாத்திரம்தான் உயிர் நாடியே. அவரது மகள் சொந்த மகள் அல்ல என்பதும், 'புத்ர பாக்கியம் இல்லாதவள்' என்று தெரிந்தும் (அப்படிச் சொன்னது டாக்டர் அல்ல ஜோதிடர்!) தன்னைத் திருமணம் செய்து கொண்ட தற்காக அவர் மனைவி விம்மி அழுகிறார். ஆனால் இதையெல்லாம் ஆங்காங்கே கீற்றுகளாகக் கொண்டு வந்து பின்னர் முடிச்சவிழ்ப்பதற்குப் பதிலாக தடால் தடால் என்று அந்தந்த காட்சியிலேயே ஆரம்பித்து முடித்து விடுவது ஏமாற்றம். தவிர வீடு ஜப்திக்கு வரும் சமயம் பார்த்து திடுமெனக் கடன் வாங்கியவர் வந்து பணத்தைத் திருப்பிக் கொடுத்து ஸ்நேஹத்தின் புகழ் பாடுவது செயற்கை என்றால், அதற்கு அடுத்த நொடியே யாரோ ஒருவர் வந்து வளர்ப்பு மகளுக்கு யாரோ ஒரு தாத்தா இருப்பதாகவும் அவர் மூலமாக அவளுக்குப் பெரும் சொத்து கிடைத்திருப்பதாகவும் சொல்வது மேலும் செயற்கை.

வசனம் ரசிக்கத்தக்கதாக இருக்கிறது (சக்ரவர்த்தி சீனிவாசன், பஞ்சம் மணியன்).

வெள்ளமாகப் பெருகும் மனிதாபிமானம், நண்பர்களிடத்தில் கொண்ட அபார நம்பிக்கை போன்ற அருகி வரும் உன்னதங்களை அடிநாதமாகக் கொண்ட கருவைப் படைக்க நினைத்தது சிறப்பான சிந்தனை. அந்த விதத்தில் கே.ஆர்.எஸ்.-ன் பாத்திரப் படைப்பு நிறைவளிக்கிறது. அவர் மனைவியாகத் தோன்றும் உஷாவின் நடிப்பும்தான்.

- குல்லூ

குள் தன்னை இழந்திருந்தான். குறிப்பாக நூறுக்கு சொன்ன விளக்கம்... அதிலும் ஒன்றுமே இல்லாத பூஜ்யம் தனியாக இருக்கும்போது ஏதுமின்றியும் அருகே ஒரு எண் வரும்போது அந்த எண்ணை ஒத்த அளவு பெருகுவதையும் எண்ணி இவ்வளவு நாட்களாக இப்படி ஒரு கோணத்தில் இதைப் பார்க்காமல் போய் விட்டோமே என்று அதே சிந்தனையாக இருந்தான். நெடுநேரம் கழித்து...

"எக்ஸ்க்யூஸ்மி இங்க கணேஷ்னு... " என்று ஒரு குரல். திரும்பினால் அறை வாசலில் சம்பத்!

அனுராதாவும், கண்ணன் சொன்ன பதில்களில்தான் கரைந்திருந்தாள். அவளும் சம்பத்தைப் பார்த்துக் கலைந்தாள்.

"நான்தான் கணேஷ்... நீங்க?"

"நான் சம்பத்... இங்க வந்துட்டுப் போனாரே குணசீலம் ஸ்ரீனிவாசன். அவரோட பிள்ளை..."

"ஓ... வாங்கோ.. வாங்கோ...நீங்கதானா அது?"


கணேஷ் வாயார வரவேற்றான். உள்ளே நுழைந்த சம்பத் பார்வையோ, முதற் காரியமாக அந்த மூங்கில் பெட்டி மேல்தான் சென்றது.

"எக்ஸ்க்யூஸ்மி..." என்றபடி அதனருகே சென்றவன் சாஷ்டாங்கமாக அதன் முன் விழுந்தான். பின் எழுந்தான்... அதன் பிறகுதான் பேசவே ஆரம்பித்தான்.

ஸ்ரீனிவாசன் உடல்நலத்தில் ஆரம்பித்து தனது உத்யோகம் வரை வரிசையாகச் சொன்னவன், நாடி ஜோசியம் பார்த்ததையும் அந்தப் பாடல்களின்படியே சம்பவங்கள் நடந்து வருவதையும் குறிப்பிடவும் அனுராதாவுக்கு சொரேல் என்றது. அந்த நொடியில் அவள் பார்வையில் கண்ணன் முதன்முதலாக வரும்போது சுமந்து வந்த அந்தத் துணிப்பை எதிரே சுவரில் தொங்கியபடி இருப்பது தெரிந்தது. கண்ணன் அதை மறந்து விட்டானா? அதற்குள்ளேயும் எட்டுக்கட்டுகள்தானே?

- தொடரும்

"பின்னிடறேன் வாய்யா!"



"ஒயின் ஷாப்ல இருந்து நீ வெளியே வந்ததைப் பார்த்த உன் மனைவி, ஜடையைத் தூக்கிக் காட்டிட்டுப் போறாளே, ஏண்டா?"

"வீட்டுக்கு வாய்யா, பின்னிடறேன்னு சொல்லாமச் சொல்லிட்டுப் போறா..."

- ஜோசப் காமராஜ்



"ஜோசியரே... சீரியல்ல நடிக்கிற வாய்ப்புக் கிடைக்குமா?"

"இந்த ஜாதகம் யோக ஜாதகம்! கடைசிவரை கண்ணீர்விட வாய்ப்பு இல்லியே!"

- அம்பை தேவா



"என்னது... கட்-அவுட்ல தலைவரோட தலை மட்டும் மூடியிருக்கு...?"

"இப்ப தலைவர் தலைமறைவா இருக்காருல்லே..? அதான்!"

- தஞ்சை பா.து. பிரகாஷ்



"ராப்பிச்சை, இந்த ஏரியாவுல வருமானம் அதிகம்னு சத்தமா சொல்லாதே!"

"ஏன்?"

"அப்புறமா, இந்த ஏரியாவை அரசாங்கமே எடுத்துக்க போவுது!"

- எஸ்.தமிழ்மணி

வாரம் ஒரு வாசகர் குடும்பம்

"அனைவருக்கும் வழி காட்டும்!"

திருநெல்வேலியிலிருந்து முப்பத்தியிரண்டு கி.மீ. தூரத்தில் உள்ளது ஆழ்வார் திருநகரி. நவ திருப்பதிகள் எனக் குறிப்பிடப்படும் வைணவத் தலங்களில் ஒன்பதாவது தலம். அங்கு நாற்பது ஆண்டு கால கல்கி வாசகராக நமக்கு அறிமுகமானார் எம்.வி. அகமது மீரான். வயது அறுபத்தியாறு. பத்தாம் வகுப்பு வரை படித்தவர். கொழும்புவில் வியாபாரம் செய்துவரும் குடும்பம். ஆழ்வார் திருநகரியில் மட்டும் சுமார் நானூறு இஸ்லாமிய வீடுகள். கொழும்புவில் வாழைத்தோட்டம் எனும் பகுதியில் சுமார் நூறு குடும்பங்களாக வசித்து வரும் இஸ்லாமியர்கள் அனைவரும், ஆழ்வார் திருநகரியைச் சேர்ந்தவர்கள்.

அகமது மீரானுக்கு கொழும்புவில் வியாபாரம்; உள்ளூரில் விளைநிலம். விவசாயத் தொழில். இருபத்து மூன்று வயதில் திருமணம் ஆகி ஏழு பெண் குழந்தைகள் மற்றும் நான்கு ஆண் குழந்தைகள். அவர்களில், மனிதர் சளைக்காமல் ஐந்து மகள்களுக்கும், இரண்டு மகன்களுக்கும் திருமணம் செய்து வைத்துள்ளார். பேரன், பேத்திகள் எல்லாம் சேர்த்து அவரது வீட்டின் மொத்த உறுப்பினர்கள் முப்பத்தியேழு. மகள்களை எல்லாம் ஆழ்வார்திருநகரியைச் சுற்றியுள்ள கிராமங்களில்தான் மணம் முடித்து வைத்திருக்கிறார். அதனால் என்ன என்கிறீர்களா? ரம்ஜான், பக்ரீத் போன்ற பண்டிகை தினங்களில் வீடு ஒரு திருவிழாக் கூட்டம் போல ஆகிவிடுமாம். "அந்த மகிழ்ச்சிக்கு ஈடே இல்லை" என்கிறார் நம்முடைய கல்கி வாசகர்.

ஆழ்வார்திருநகரி நகரப் பஞ்சாயத்துத் தலைவராக 1982-87களில் பதவி வகித்திருக்கிறார் அகமது மீரான். காங்கிரஸ்காரர். மும்முனைப் போட்டியில் காங்கிரஸில் சீட் தராததால் (கூட்டணி கட்சிக்கு சீட் ஒதுக்கப்பட்டது). அ.தி.மு.க. - தி.மு.க. - ஜனதா தள வேட்பாளர்கள் மத்தியில் சுயேச்சையாகக் களமிறங்கி வெற்றி கண்டவர். அந்த ஐந்து வருடங்களில் மாநிலத்தில் வரிசையாக நான்கு ஆட்சி அதிகாரங்கள்-எம்.ஜி.ஆர்., ஜானகி, கவர்னர், கலைஞர் என அலங்கரித்தன என்கிறார் அவர்.

அப்பொழுது கவர்னர் அலெக்சாண்டரை வரவழைத்து ஆழ்வார் திருநகரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. ஐம்பது லட்ச ரூபாய் செலவிலான அக்குடிநீர்த் திட்டம் தற்போதும் ஆழ்வார் திருநகரி மக்களின் தாகம் தணித்து வருகிறது. பின்னர், அப்போது பேரூராட்சி வணிக வளாகம் ஒன்றுக்கு ராஜீவ் காந்தி வருகை தந்து அடிக்கல் நாட்டியிருக்கிறார். இது போல அவர் பணியாற்றிய ஐந்து வருடங்

• சிரீனுடன் அகமது மீரான்



கஞக்குள் நிகழ்த்தப்பட்ட விழாக்கள் ஒவ்வொன்றுக்கும் தனிப்பட்ட முறையில் தன் சொந்தப் பணத்தையே செலவு செய்துள்ளதாகக் கூறுகிறார் அகமது மீரான். பொதுவாக இது போன்ற விழாக்களுக்கு ஆகும் செலவுகளை வேறொரு செலவினங்களில் சுமத்தி பஞ்சாயத்துக் கணக்கில் ஏற்றி விடுவார்களாம். எந்தவொரு விஷயத்திலும் தாம் அது போன்றதொரு செயலில் ஈடுபட்டதே இல்லை எனக் கூறுகிறார் அவர்.



• குடும்பத்துடன்...

அகமது மீரான் நம்மிடம் பேசிக் கொண்டிருக்கும்போதே, சாத்தியிருந்த கதவை ஒருக்களித்துத் திறந்து எட்டிப் பார்க்கிறார் அவர் மனைவி.

"குடும்பப் பிணைப்புள்ள கதைகள் கல்கியில் நிறையவே வருகின்றன. சிறு கதைகளும், தொடர்கதைகளும் தரமாக உள்ளன!" எனக் கூறுகிறார் முகமத் பாத்திமா. அவரைத் தொடர்ந்து சர விளக்குகள் போல மூன்று இளம் பெண்களின் முகங்கள் கதவிடுக்கிலிருந்து வெளிப்பட்டன.

நௌமத் நிசா, பி.காம். படித்திருக்கிறார். ஷிபா, எட்டாம் வகுப்பு. இருவரும் அகமது மீரானின் மகள்கள். பிறை நட்சத்திரம் போல மூன்றாவதாக வெளிப்பட்டவர் சிரீன் சித்தாரா. முதல் மகள் வயிற்றுப் பேத்தி. பி.பி.ஏ. படித்து வருகிறார். 'வானவில் வயசு', 'சினிமாவுக்குப் போகலாம் வாங்க' இரண்டு தொடர்களும் ரொம்பவும் பிடித்திருக்கிறது நௌமத் நிசாவுக்கு.

ஆனால், சிரீனின் பார்வையோ மாறுபட்டு அமைந்திருக்கிறது.

"நான் சொன்னா உங்களுக்குன்னு இல்லே.. கேக்குற எல்லாருக்குமே ஆச்சர்யமா இருக்கும். என்ன... இந்த சின்னப் பொண்ணு ஒரு பத்திரிகையோட தலையங்கத்தைப் பத்தி எல்லாம் விமர்சனம் பண்ணுதே என்று. இருந்தாலும் என்னால.. சொல்லாம இருக்க முடியலை. 'கல்கி'ல எழுதி வர்ற தலையங்கம் எல்லாமே அத்தனை நடுநிலையோட இருக்குது. 'கல்கி'யில எனக்கு எல்லாமே ரொம்பப் பிடிக்கும். அதுல முதல் இடத்தைப் பிடிச்சது தலையங்கம்!" எனச் சொல்கிறார் சிரீன் சித்தாரா.

கடைசி மகன் (எஸ்.டி.டி. பூத் வைத்திருக்கிறார்) முகம்மத் ரில்வானின் மனத்தில் கருத்துப் படங்கள் இடம் பிடித்திருக்கின்றன.

"காஞ்சிப் பெரியவரின் அருள் வாக்கு... அதில் வெளிப்படும் விஷயங்கள் அனைத்துமே உலகில் உள்ள ஒவ்வொருவரும் (அவர் எந்த மதத்தவராக இருந்தாலும் சரி) பின்பற்றி அவரவர் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திக் கொள்ள வேண்டிய நல்முத்துகள் என்பது என் கருத்து. சுருங்கச் சொன்னால் அனைவருக்கும் வழிகாட்டும் அருள்வாக்கு அது!" என்று வெளிப்படையாகப் பேசுகிறார் ஆழ்வார் திருநகரி அகமது மீரான்.

கட்டுரை, படங்கள் :

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

கடவுள் திறந்த

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருக்கு ஜோதிடம் தெரியும். அவர் கணித்துச் சொன்னது நடந்திருக்கிறது என்பதற்கு கண்முன் உதாரணம், முதல்வர் ஜெயலலிதா.

'ராமன் தேடிய சீதை' படப்பிடிப்பின்போது விஜயா கார்டனில், இயக்குனர் ப.நீலகண்டன் முன்பாக ஜெயலலிதாவின் கையைப் பார்த்த எம்.ஜி.ஆர்.,

'இப்போது சொல்கிறேன் குறித்துக் கொள்ளுங்கள். அம்மு இன்று டாப் ஸ்டார்! வருங்காலத்தில் அரசியலில் ஈடுபட்டு அதிலும் டாப் ஆக வருவார்' என்று சொன்னதும், ஜெயலலிதா சிரிச்சுட்டாங்களாம்.

'சும்மா சொல்லாதீங்க சார். நான் சினிமாவை விட்டா நாட்டியப் பள்ளி தொடங்குவேன். நானாவது அரசியலுக்கு வருவதாவது'னு சொன்னாங்களாம்.


'எனக்குக் கொஞ்சம் ஜோதிடத்தில் நம்பிக்கை உண்டு. நீ கட்டாயம் அரசியலுக்கு வந்து ஒரு புரட்சி பண்ணப் போறே'னு அழுத்தமாய்ச் சொன்னாராம் எம்.ஜி.ஆர். அதுதான் நடந்தது.

இப்படித்தான் சினிமாவிலும், அரசியலிலும் பங்கேற்கும் வாய்ப்பு ஜெயலலிதாவைத் தானாகத் தேடி வந்தது. இதை ஏன் இங்கு சொல்றேன்னா... எனக்கும் அப்படித்தான் எல்லாம் தானாக வந்து அமைந்தது.

சிலர் எல்லாவற்றையும் திட்டமிட்டுச் செய்வார்கள். தமது வளர்ச்சிக்கான வழியை வகுத்துக் கொள்வார்கள். எனது வளர்ச்சி திட்டமிட்டு உருவாக்கப்பட்டது அல்ல. அப்படிச் செயல்பட்டிருந்தால், நான் எங்கோ இருந்திருப்பேன். எப்போதோ எம்.எல்.ஏ., எம்.பி., அமைச்சராக ஆகியிருப்பேன். ஆனாலும் மக்களைச் சந்திக்காமல் கொல்லைப் புறத்திலிருந்து பதவிக்கு வருவதில் எனக்கு உடன்பாடில்லை.

உண்மையைச் சொல்லணும்ன்னா எங்கக் குடும்பத்துல இருந்து சினிமாவுக்கு வர நெனைச்சது, சினிமா சம்பந்தமான புத்தகங்கள் படிச்சது, அன்னக்கிளி செல்வராஜ் போன்ற சினிமாக்காரர்களுடன் நட்பு கொண்டிருந்தது நாகராஜ் அண்ணன்தான். ஆனா நான் சினிமாவுக்கு வந்துட்டேன். என்னை வைத்து ஒரு படம் இயக்க ஆசைப்பட்டார். கடைசி வரைக்கும் சினிமாவுக்குள்ள வரமுடியாமலேயே அவர் இறந்து போனார்.

காங்கிரஸில் இருந்த எங்கப்பா அரசியலில் பெரிய ஆளாகணும்னு ஆசைப்பட்டார். கவுன்சில



விஜயகாந்த் பேசுகிறேன்!
18

கதவு!

ராக இருந்ததோடு அவரது காலம் முடிந்து போனது. தனிக் கட்சி துவக்க, மதுரையில் பிரமாண்டமான மாநாடு



நடத்தினேன். இதைப் பார்த்த அக்கா - டாக்டர் விஜயலட்சுமி, 'அப்பா ஆசைப்பட்டதை நீ செஞ்சு காட்டிட்டே'னு ஆனந்தக் கண்ணீர் விட்டார். அவர் விரும்பிய மகுடம், என் தலையைத் தேடி வருகிறது.

சராசரி ரசிகனாக இருந்த நான் சினிமாவுக்கு அழைத்து வரப்பட்டதும், நட்சத்திர நடிகரானதும், எந்த எதிர்ப்பும் இல்லாமல் நடிகர் சங்கத் தலைவரானதும், இப்போது தேசிய முற்போக்கு திராவிடக் கழக அரசியல் கட்சித் தலைவர் ஆனது வரை எல்லாமே தாமாக நடந்தவை. எனது வளர்ச்சிக்கான எல்லாக் கதவுகளையும் கடவுள் திறந்து வைத்தான்.

அரசியலில் நான் எனக்கு முன்னோடிகளாக எடுத்துக் கொண்ட காமராஜர், அண்ணா, பெரியார், எம்.ஜி.ஆர். போன்றவர்களின் வாழ்வில் இருந்து நிறைய விஷயங்களை எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

எம்.ஜி.ஆரின் எல்லாக் கொள்கைகளுமே எனக்குப் பிடிக்கும். குறிப்பாக சமுதாயத்தின் அடிமட்டத்திலுள்ளவர்

களை கருணையோடு அவர் பார்த்தது பிடிக்கும், கிராமங்களில் மாட்டு வண்டியில் அரிகேன் விளக்குடன் இரவில் போக வேண்டும் என்பதை அவர் ஆட்சிக்கு வந்ததும் மாற்றினார். சைக்கிளில் இரண்டு பேர் போகக் கூடாதுங்கற சட்டத்தை மாற்றினார். சைக்கிளில் டைனமோ விளக்கிருந்தால் டயர் தேய்ந்து விடும் என்ற நோக்கில் விளக்கில்லாமல் போகலாம் என்றார். ஜாதி-மத வேறுபாடே இருக்கக் கூடாதுன்னு ஜாதி மத ஊர்வலங்களுக்கு, கூட்டங்களுக்குத் தடை போட்டார், எல்லாவற்றுக்கும் மேலாக பல எதிர்ப்புக்கிடையே அவர் சத்துணவு திட்டத்தைக் கொண்டு வந்தார், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டார். இவையெல்லாம் எம்.ஜி. ஆரிடம் எனக்கு ரொம்பப் பிடிச்சவை.

ஜாதியின் பெயரால் சிலர் சொந்த சுயநலத்துக்காக ஆதாயம் தேடுகிறார்கள். இந்த ஜாதி - மத வியாபாரிகள் பின்னால் போய் இளைஞர்கள் தங்கள் எதிர்காலத்தைப் பாழாக்கிக் கொள்ளக் கூடாது என்பது தான் என் கவலை, அதனால்தான் ஜாதி அரசியலை எதிர்க்கிறேன்.

'உன் மனத்தில் எள் அளவும் மத வெறியோ இனவெறியோ ஏற்படுத்திக் கொள்ளாதே! நகமும் சதையுமாக இணைந்துவிட்ட என்னையும், எனது பிற மத நண்பர்களையும் பார்! மற்ற மதத்தினரோடு நீயும் என் போல் இனிமையாகப் பழகு எம்மதமும் சம்மதம் என்றிடு!' - இது தான் என் ரசிகர்களுக்கு, தொண்டர்களுக்கு சொல்லி வருகிறேன்.

ஜாதி அரசியல் பற்றி, ஜாதிக்

விஜயகாந்த் பற்றி வி.ஐ.பி!

அவர் எனக்கு ரொம்ப சீனியர் ஆர்டிஸ்ட். அவர் நூறு படம் நடிச்சு முடிச்சப்புறம்தான் நான் முதல் படமே இயக்கினேன்.

'இது எங்க பூமி'னு ஒரு படம் எனக்குத் தெரிந்தவர் தயாரித்தார். அந்தப் படத்தை ஒரு பார்வையாளனா தூரத்துல நின்னு பார்த்தேன். அப்புறம் விஜயகாந்த் நடிச்ச 'நூறாவது நாள்' படத்துல உதவி இயக்குனரா வேலை செஞ்சிருக்கேன். அதுக்குப் பிறகு அவரை வைச்சு நான்



''அவர் சரியான சோம்பேறி!''

''அப்படியா?''

''காலண்டரைக் கிழிக்க ரிமோட் கண்ட்ரோல் கிடைக்குமான்னு கேட்கறார்னா பாரேன்!''

- அம்பை தேவா

டைரக்ட் பண்ணினேன். இப்படி எல்லா கட்டத்திலேயும் எனக்குத் தெரிஞ்சு விஜயகாந்த் அப்படியேதான் இருக்கார். எந்த மாற்றமும் இல்லே.

அவரோட அனுபவத்துக்கு முன்னாடியோ, அவரோட வெற்றிக்கு முன்னாடியோ நானெல்லாம் ஒண்ணுமே கிடையாது. இருந்தாலும் என்னை ஒரு இயக்குனரா அவர் மதிச்சார். அவர் நினைச்சா 'இன்னைக்கு ஆறு மணிக்கு எனக்கு வேலை இருக்கு; போறேன். டைரக்டர்கிட்ட சொல்லிடுங்க'னு போயிடலாம். ஆனா அவர், 'சார், ஒரு சின்ன ரிக்வெஸ்ட். இன்னைக்கு ஆறு மணிக்கு நான் போக முடியுமா?'னு கேட்பார்.

இப்படி நிறைய விஷயங்கள், அவர்கிட்ட கத்துக்க வேண்டியது இருக்கு. அதுல முக்கியமானது பணிவு!

- டைரக்டர் விக்ரமன்



கொடுமைகள் பற்றி எனது 'ஏழை ஜாதி', 'வல்லரசு' படங்களில் சொல்லியிருக்கிறேன். அப்போது இந்தப் படங்களை ஜாதிக் கட்சிகள் எதிர்த்ததும், படத்தின் ஃபிலிமை எரித்துப் போராட்டம் நடத்தியதும் நீங்கள் அறிவீர்கள்.

ஜாதி என்பதே இருக்கக் கூடாது, எல்லாரும் மனிதர்களாக, ஒற்றுமையில் இந்தியனாக, உணர்வில் தமிழனாக இருக்க வேண்டும். இந்த எண்ணம் எல்லோருக்கும் வருகிற மாதிரி செய்ய வேண்டும். ஜாதிக் கலவரங்களை, மதக் கலவரங்களை ஏற்படுத்துகிறவர்களை மக்களே விரட்டி அடிக்கணும்.

அயோத்தி பிரச்னை பற்றி என்னிடம் கேட்டபோது, 'அங்கு கோயிலும் கட்ட வேண்டாம். மசூதியும் கட்ட வேண்டாம். அந்த இடத்தை அரசாங்கமே எடுத்துக்கொண்டு, அங்கே மருத்துவமனை கட்டட்டும், தொழிற்சாலை அமைக்கட்டும், கல்லூரி கட்டட்டும்'னு சொன்னேன். இதற்கு இல.கணேசன் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

நான் இன்றைக்கும் சரி அன்றைக்கும் சரி எந்த ஜாதி கட்சிகளுடனோ, மதவாதக் கட்சிகளுடனோ உடன்பாடு கொண்டதில்லை. இனி எதிர்காலத்திலும் இது போன்ற கட்சிகளுடன் கூட்டணி வைத்துக்கொள்ளும் எண்ணமும் இல்லை. இனத்தால் இந்தியனாகவும், மொழியால் தமிழனாகவும் என்னை அடையாளப்படுத்திக் கொள்ளவே ஆசைப்படுகிறேன்.

உங்கள் கட்சியின் கொள்கை என்ன? என்ன மாதிரி அரசியல் உங்களுடையது என்று சிலர் என்னிடம் கேட்கிறார்கள். என் அரசியல் எப்படிப்பட்டது. எந்த மாதிரி அரசியலை நான் விரும்புகிறேன்?

(சொல்றேன்)

நிலா

“**நா**னு நாண்டுக்கிட்டுச் செத்துப் போறம்ல. ஒங்க அய்யாவைக் கொன்ன பயலுக இன்னும் உசுரோட திரியறானு கன்னு நெனைச்சாலே ஈரக்கொல நடுங்குது. ஒன்னுக்கு நாலு ஆம்பளப் புள்ளைகளப் பெத்து என்ன பிரயோசனம்?” சீனியம்மா வாசல்ல உக்காந்து சத்தம் போட்டுக் கிட்டிருந்தா.

உள்ளார்ந்து மூத்த மவன் அழகர்சாமி எட்டிப்பாத்து, “எம்மா, அரவம் போடாம இரு. நாங்க என்ன செய்யுதோம்னு ஊருக் கெல்லாம் தண்டரா போட்டுக்கிட்டு இருக்க முடியாது. கமுக்கமா காரியத்தை முடிக்கிற ஆளுக நாங்க” அப்பிடின்னு அவள அடக் கப் பாத்தான்.

ஆனாலும் மனசு ஆறாம, “எவன் எவன் எப்பிடி எப்பிடி வெட்டுனாம்னு பக்கத்தில ருந்து பாத்தவல்ல நானு. வேண்டாம்யா வேண்டாம்யான்னு அந்தச் சின்னப் பயலுக காலைப் புடிச்சுக் கெஞ்சினம்ல. உங்க அய்யா தலைய சீவிப்புட்டு என்னயும் வெட்டிப்பிட்டு கொக்கரிச்சிட்டுப் போனானுகளே அந்த எடுபட்ட பயக. அன்னக்கிலருந்து இன்னமும் ஒறக்கம் வராம சங்கடப்பட்டுக் கெடக்கேன்”ன்னு சீனியம்மா பொலம்பிக்கிட்டுத்தானிருந்தா.

சீனியம்மாவின் புருசன் அய்யனாரு எவருக்கும் பயப்படாதவரு. ஊருக்குள்ள பங்காளிக பண்ண அக்குறும்ப தட்டிக் கேட்டாருன்னு அவரு அண்ணன் மவன் சிவராகம் பேரன் ராசகோவாலுந்தேன் கூட்டாளிக கூட வந்து அவர வெட்டிப் பிட்டாங்க. சீனியம்மா, ஆராரு கூட வந் ததுன்னு வெவரமா போலீசுகிட்ட சொல்லிப்பிட்டா. ஆனா வெட்டின பயக ஒரு மாசமா இன்னம் தலமறவாதேன் திரிய றானுக. அவங்கெ பொண்டு புள்ளைக எல்லாம் எங்கன போச்சுன்னெ தெரியல. அதுகளயும் காணல.

சீனியம்மா மகங்கெளும் அருவாளோட ஊருரா தேடிக்கிட்டுதேன் இருக்கானுக. அம்பிட்டானுகன்னா அத்தன பேரும் மொத்தமா கெழக்கால போகவேண்டியது தேன்.

திடுதிப்புன்னு ஒரு நாளு வெரசு வெரசா சீனியம்மா மகங்கெ நாலுபேரும் அருவாள சட்டையில் செருகிக்கிட்டு வண்டிய எடுத் துக்கிட்டுப் பறந்தானுக. என்ன ஏதுன்னு அம்மாட்ட மூச்சுவிடல. சீனியம்மா இலேசுப்பட்டவளா? அவளுக்குத் தெரிஞ்சு போச்சு. இன்னக்கி அவ சபதம் நெறவேறப் போவுதுன்னு. பழிக்குப்பழி வாங்கறவரை யும் கஞ்சித் தண்ணியத் தவுத்து வேறெதும் சாப்புட மாட்டம்னு ஒத்தக்கால்ல நின்னுப் பிட்டாள்ல!

'பயலுக போயி, அரநாளுக்கு மேல ஆயிப்போச்சி. சேதி ஒண்ணும் காணு மேன்னு உள்ளுக்கு ஒக்கார முடியாம திண் ணையிலயே ஒக்காந்து கெடக்கா சீனியம்மா.

ஒரு வழியா மகங்கெ திரும்பிவந்தானுக. ஆனா அவனுக மொகம் தொங்கிக் கெடக்கு.

‘‘என்னலே, வெட்னீகளா இல்லியா?”ன்னு சீனியம்மா ஆத்திரத்தோட கேக்கா.

“எப்பிடியோ துப்புக் கெடச்சி போலீசு வந்து அவனுகள புடிச்சிட்டுப் போயி ருச்சம்மா’’ன்னான் சின்னப்பய செல் லத்துரை.

சீனியம்மாளுக்கு வெனம் ஏறிப் போச்சு. பயகள நல்லா வஞ்சு போட்டா.

ரெண்டு நா கழிச்சி ரெண்டாவது பய சுந்தரம் ரொம்ப சந்தோசமா வீட்டுக்கு ஓடியாந்தான். ‘‘எம்மா, பேரங்காரன் செயிலுல செத்துப் போயிட்டானாம். நாயம்தேன் செயிக்கும்னு சாமி காட்டிருச்சு பாத்தியா?’’ன்னு சீனியம்மாட்ட நறுக்குன்னு நாலு வார்த்தைல



"எப்படிச்
செத்தா என்ன?
பாதிப்பழி
தீந்து
போச்சில்ல!"

"நடிகர் கட்சி ஆரம்பிச்சா இப்படித்தான்!"
"என்ன விஷயம்?"
"மாநாட்டுக்கான டிக்கெட்டை ப்ளாக்ல விக்கறாங்க!"

- அம்பை தேவா



சொன்னானே ஒழிச்க மேல வெவரமேதும் சொல்லல.

மகங்கெ நாலு பேரும் பெரிய வெளா எடுக்காததுதேன் கொறை. அம்புட்டு சந்தோசம் அவனுகளுக்கு. அண்ணன் தம்பிக எல்லாம் சேந்து வேட்டு வெடிக்கக் கௌம்பிட்டாங்க.

''எப்பிடிச் செத்தானாம்?''ன்னு மூத்த மருமவ முத்துமாரி கிட்ட கேட்டா சீனியம்மா.

"எனக்கென்னௌவு தெரியும்? எப்பிடிச் செத்தா என்ன? பாதிப்பழி தீந்து போச்சில்ல''ன்னு சொல்லிப்பிட்டு கடுசோத்துல கருவாட்டுக் கொழம்பூத்தி வட்டில்ல மாமியார்காரிகிட்ட குடுத்தா முத்துமாரி.

வாசனை நல்லாத்தேன் இருந்துச்சி. ஆனா சீனியம்மாளுக்கு என்னமோ சாப்புடப் புடிக்கல. தட்ட வாங்கினவாக்கில் ஒக்காந்துகிட்டே இருந்தா. வெளிய வேட்டுச் சத்தம் கேட்டுக்கிட்டே இருந்திச்சி.

சீனியம்மா சோத்துல கை வைக்காததப் பாத்துட்டு மருமவ, "ஒத்த ஆம்பளப்புள்ள செத்துப் போயிட்டான். பொண்டாட்டிக்காரி மூணு பொட்டைகளை வச்சுக்கிட்டு சீரழியப்போறா. நீங்க ஆசப்பட்டாப்ல கொலமே வெளங்காமப் போனாப்லதான். சந்தோசமா சாப்பிடவேண்டியதுதானே?''ன்னா.

மருமவ சொன்னதுந்தேன் சீனியம்மாளுக்கு சடக்குன்னு ஒறச்சது. 'ஆத்தீ.. ஒரு வம்சமில்ல போயிருச்சு!' சீனியம்மாளுக்கு நெஞ்சுக் குழிக்குள்ள என்னமோ அடச்சிக்கிட்டாப்ல இருந்திச்சு. கடுசோத்துக் கையில் அவ தொடவே இல்ல. மூலைல சுருட்ணாப்ல படுத்துக்கிட்டா. 'சிவராகும் செத்தாத்தேன் அம்மா வெரதத்த முடிப்பா போலுக்கு'ன்னு மகங்கெ நெனச்சிக்கிட்டானுக.

கேக கோர்ட்டுக்கு வர அந்தா இந்தான்னு ரெண்டு வருஷம் ஓடிப் போயிருச்சு. கேசுல சீனியம்மாதேன் மெயினான சாட்சி. அவ ஒருத்திதானே நடந்தத நேர்ல பாத்தவ. அவளுக்கு என்னமோ அப்பைக்கப்ப மேலுக்கு முடியாமப் போயிருது. அவ போயிச் சேந்துட்டா. கேசு நிக்காதுன்னு சிவராகு குடும் பமுச்சூடும் எதிர்பார்த்துக் காத்துக்கெடக்கு. ஆனா அவ எல்லாத் தரமும் எந்திச்சு வந்துக்கிட்டுதேன் இருக்கா.

ஒரு வழியா சீனியம்மாள கோர்ட்டுல வெசாரிக்கக் கூப்புட்டா களாம். அடுத்த வாரம் அவ போவணுமாம். மகங்கெ அவளுக்கு ஒடம்பு கிடம்பு சரியில்லாமல் போயிறக் கூடாதுன்னு பதற்றமாத்தேன் திரிஞ்சிக்கிட்டு இருக்கானுக.

அன்னக்கி வீட்டுல ஆம்பளை யாளுக ஒருத்தரும் இல்ல. சீனியம்மா திண்ணையில ஒக்காந்துக்கிட்டிருந்தா. அப்ப சிவராகு பொண்டாட்டி சந்திரா ஓடியாந்து சீனியம்மா கால்ல விழுந்தா. கூடவே மூணு பொட்டப்புள்ளைகளும் திருதிருன்னு விழிச்சிக்கிட்டு நிக்குதுக.

"அத்த, நீங்கதேன் எப்படியாவது மனசு வைக்கணும். அவுக பண்ணுனது தப்புதேன். பெரிய குத்தந்தேன். இந்த மூணு பொட்டப்புள்ளைக மொகத்துக்காவது நீங்கதேன் மன்னிக்கணும். உங்கள கொல

தெய்வமா நெனச்சுக் கும்புடறேன் அத்த. எங்க உசுரு ஒங்க கையிலதேன் இருக்கு''ன்னு காலப் புடிச்சிக்கிட்டு அழுவுதா.

அம்மா அழுவுதான்னு புள்ளைங்களும் அழுவுதுக. சீனியம்மா தெகச்சுப் போயி ஒக்காந்திருக்கா. என்னதோ ஏதோன்னுட்டு வெளிய வந்த முத்துமாரி சந்திராவப் பார்த்ததும் ஆங்காரமா வைய ஆரம்பிச்சிட்டா. சந்திரா அழுதுக் கிட்டே புள்ளைகள இழுத்துக் கிட்டுப் போயிட்டா.

சீனியம்மாவுக்கு நெஞ்சில பாறாங்கல்ல சொமக்கறாப்பிலதேன் இருக்கு. இது இன்னிக்கி நேத்தில்ல; ரெண்டு வருசமா இப்படித்தேன் கெடக்கு. பழிக்குப்பழி வாங்கிப் புட்டா, உசுருக்கு உசுரு போயிருச் சுன்னா பாரம் கொறையுமின்னு தான் நெனச்சா. ஆனா ராச கோவாலு செத்ததுலருந்து இன்னும் பாரம் சாஸ்தியானாப்லதேன் இருக்கு. இப்ப சந்திரா வந்துட்டுப் போனதுங்கூட சங்கடமாத்தேன் கெடக்கு. சீனியம்மாளுக்கு ஒண்ணுமே வெளங்கமாட்டங்குது. சீக்கிரம் செத்துட்டா நல்லதுன்னுதேன்னு அடிக்கடி நெனச்சிக்கிடுதா.

மூத்தவன் அழகரு வந்ததும் முத்துமாரி சொன்னதக் கேட்டு பேயாட ஆரம்பிச்சுட் டான். ''அவ வந்து அழுதான்னு நீ பாத்துக்கிட்டு இருந்தியாக்கும்ளா. எங்கம்ம உசிரு போவணும்னு தேங்கா ஓடச்சவ்ளா அவ. நாலு எத்து எத்தி வெளிய தள்ளி யிருக்கணும். இல்லன்னா அருவாமணைய எடுத்துச் செருகிருக்கணும்''னு முத்துமாரிக்கு வசவு கெடச்சது.

"எம்மா, நீ எதுக்கும் கவலப்படாத. நம்ம கேசு வலுவா இருக்கு. நீ மட்டும் கோர்ட் டுக்கு வந்து சாட்சி சொல்லிட்டுன்னா நம்மள ஒரு பய அசச்சுக்க முடி யாது''ன்னான் பெத்தவளப் பாத்து.

சீனியம்மா கூண்டில நின்னுக்கிட் டிருக்கா. ஓடம்பெல்லாம் வெடவெடன்னு நடுங்குது. வக்கீலய்யா சீனியம்மாட்ட, "ஒங்க புருசனை வெட்டிக் கொன்னது யாருன்னு ஜட்ஜ் ஐயாகிட்ட சொல்லுங்கம்மா''ங்கறாரு.

வெட்டுன காட்சி இப்பதேன் நடந் தாப்ல கண்ணு முன்ன ஓடுது. கண்ணீரு கரகரன்னு ஊத்துது.

"தைரியமா சொல்லுங்கம்மா''ங்கறாரு வக்கீலு.

சீனியம்மாவுக்கு ஒரே ரோசனையா கெடக்கு. அத்தனை சனமும் அவளத்தேன் பாக்குது.

அவ பேசாம நிக்கதப் பார்த் துட்டு, ''பயப்படாம பதிலச் சொல்லுங்கம்மா''ன்னு மறுபடியும் கேக்காரு வக்கீலு.



''நற்பெயர் பெற என்ன செய்ய வேண்டும் குருவே?''
''ஒரு நல்ல நேமாலஜிஸ்ட்டை அணுகவேண்டும் சிஷ்யா''
- வீ.விக்னேஷ்குமார்

சீனியம்மா கண்ண மூடி புருசன நெஞ்சில நெனச்சிக்கிட்டு, ''வெட்டுனது யாருன்னு சரியா தெரியலைய்யா''ன்னு திக்கித் திக்கிச் சொல்லுதா.

''எம்மா''ன்னு அலறுதானுக மகங் காரனுக.

சீனியம்மாவப் பாத்து தலமேல கை குமிச்சு கும்பிட்டுக் கிட்டே அழுவுதான் சிவராசு.

சீனியம்மாளுக்கும் கண்ணீரு அடங்க மாட்டாமத்தேன் கொட்டுது. ஆனா நெஞ்சு, பஞ்சு கணக்கா இலேசாயிருச்சு! ○

தமிழில் வெளிவந்த முதல் இரட்டை வேடப்படம் 'உத்தம புத்திரன்'. கதாநாயகன் பி.யூ. சின்னப்பா. தயாரிப்பு, தமிழகத்தின் புகழ்மிக்க ஸ்டுடியோவாக விளங்கிய மாடர்ன் தியேட்டர்ஸ். டைரக்டர் டி.ஆர்.சுந்தரம்.

– மதுரை ஆர்.எஸ்.என்.
ராஜா, முதுபெரும் சினிமா
விமர்சகர்.


பார்த்தால்தான் எனக்கு எப்போதும் மனநிம்மதி ஏற்படும். பிறகு தான் உண்மை தெரிந்தது. முதல் ஆட்டம் (முதல் ஷோ) இன்னும் முடியவே இல்லையாம். நாங்களும் சைக்கிள்களை நிறுத்திவிட்டு மணலில் உட்கார்ந்து, கடலையைத் தின்றுக் கொண்டே பேசிக் கொண்டி



இரவின் தனிமையும், நாய்களின் ஊளையும் எங்களது சைக்கிள் வேகத்தைக் கூட்டின. குலதெய்வம் முதற்கொண்டு இந்தியாவில், வடநாட்டில், மேல் உலகத்தில் இருக்கின்ற அத்தனை தெய்வங்களையும் விடாமல் வணங்கி, பல நேர்த்திக் கடன்களையும் மனசுக்குள் வேண்டிக்கொண்டு சைக்கிளை மிதித்தோம்.

ஐம்பது வீடுகளே இருந்த கிராமத்தைக் கடந்தபோது கடைசி சைக்கிள்காரன் ஒரு நாய் மீது வண்டியை விட, அதுபோட்ட சத்தத்தில் அந்த ஊரின் ஜனத் தொகையைக் காட்டிலும் அதிகம் இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட நாய்கள் நாலு கால் பாய்ச்சலில் எங்களை விரட்டிவர குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாகவே நாங்கள் அந்த ஊர்தியேட்டருக்குப் போய்ச் சேர்ந்தோம்.

அந்த தியேட்டர் வாசலில் பல்வேறு மனிதர்கள் மல்லாக்கப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். படம் ஓடிக் கொண்டிருந்த சத்தம் கேட்டது. எனக்கு உயிரே போன மாதிரி இருந்தது. படம் போட்டு விட்டார்களோ? முக்கியமான காட்சிகள் ஓடியிருக்குமோ? ஆயிரம் எண்ணங்கள் கேள்விகளாக எழுந்தன. காரணம், சோப்பு ரீல் தொடங்கி சுபம் வரையில் சினிமா



"என்ன அறிவு

ருந்தோம்...


சென்ற முறை நான் அமெரிக்கா சென்றபோது, 'நார்த் கரோலினா' என்ற

மாநிலத்தின் தமிழ்ச் சங்கத்தில் பேசுவதற்காகப் போயிருந்தேன். 'சௌத் கரோலினா' என்ற ஊரில் தான் ரைட் சகோதரர்கள் 1903ஆம் ஆண்டில் பறக்கும் முயற்சியில் ஈடுபட்டு ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்ததாக அமெரிக்க நண்பர் கார்த்திகேயன் எனக்குச்

7

ஐமேக்ஸ் தியேட்டர் வசதி வரவில்லை. டில்லி, பம்பாய், ஹைதராபாத் போன்ற நகரங்களில்தான் அத்தகைய தியேட்டர்கள் வந்துள்ளன'' என்று ஏக்கத்தோடு சொன்னேன்.

அன்று மாலையே கிளம்பிவிட்டோம். 'ஐமேக்ஸ்' தியேட்டர், ஒரு விஞ்ஞான விந்தை. நாங்கள் தியேட்டருக்குப் போனபோது சில ஜோடிகள் ஆணும் பெண்ணுமாக நின்றிருந்தார்கள். கூட்டம் அதிகம்



ன்ன ஞானம்!''

இல்லை. இரண்டு ஆண்களாகப் போனவர்கள் நானும் நண்பரும் தான். நான் பழைய ஞாபகத்தில் நண்பரிடம் கேட்டேன் -

சொன்னார்.

“நீங்கள் 'ஐமேக்ஸ்' தியேட்டரில் படம் பார்த்ததுண்டா?'' என்று என்னிடத்தில் கேட்டார்.

“இல்லை... இன்னும் தமிழ்நாட்டில்

“இன்னும் முதல் ஷோ விடவில்லையோ?'' என்று.

“இல்லை... இல்லை... இங்கெல்லாம் மாலையில் ஒரே ஒரு ஷோ மட்டும்தான். இரண்டாவது ஆட்டமெல்லாம் இடை


கு.ஞானசம்பந்தன்

"கலவரம் நடக்கிற இடத்துல எதுக்காக டி.வி. சீரியல் போட்டுக் காட்டறாங்க...?"
"கண்ணீர் புகைக்குண்டு ஸ்டாக் இல்லையாம்!"
- குட்டி பிரசன்னா

யாது" என்றார்.

'மேட்ரிக்ஸ் ரீலோடட்' என்ற படம் தான் அன்றைக்கு நாங்கள் பார்க்க வந்த படம். டிக்கெட் வாங்கிக்கொண்டு தியேட்டருக்குள் சென்றோம். தியேட்டரா அது? உருண்டை வடிவத்தில் ஒரு பாதி திரை. மறுபாதி உட்காரும் புஷ்பேக் நாற்காலிகள். படம் போடு முன் அந்தத் திரையைப் பற்றி மினி படம் போட்டார்கள்.

நான்கு பஸ்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கி வைத்துக் காட்டினார்கள். அது தான் திரையின் உயரம். காரைக்குடியில் நகரத்தார் வீடுகளின் நீளம்தான் திரையின் நீளம். (முதன் முதலில் காரைக்குடியில் ஒரு



மிகப்பெரிய வீட்டைப் பார்த்து நான் அசந்தே போனேன்... சமையல் கட்டுக்கு சைக்கிளில்தான் போவார்கள் போல என்று நினைத்தேன்). திரையின் உள்ளே, பின்பக்கத்தில் லைட் போட்டுக் காண்பித்தார்கள். இருநூறுக்கும் மேற்பட்ட ஸ்பீக்கர்கள்.

'த்ரீடி' முறையில் எடுக்கப்பட்ட படம். கதாநாயகனை, வில்லன் துப்பாக்கியால் சுடும்போதெல்லாம் நானோ அல்லது என் பக்கத்தில் இருக்கும் நண்பரோ கட்டாயம் செத்துத்தான் போவோம் என்று நினைக்கும்படி எங்களை நோக்கிக் குண்டுகள் பறந்து. பறந்து வந்தன.

கதாநாயகனும் நாயகியும் மோட்டார் பைக்கில், அநேகமாகப் படம் பார்க்கும் யாரையாவது ஏற்றிக் கொள்ளும் முயற்சியில் திரையில் இருந்து, தரைநோக்கிப் பாய்ந்து வந்த வண்ணம் இருந்தார்கள்.

காதல் காட்சியிலும், முத்தக் காட்சியிலும்... வேண்டாம் விடுங்கள்... படம் முடிந்து வெளியே வந்தபோது நண்பர் கேட்டார்... "படம் எப்படி?"

"நம்ம ஊர் தியேட்டரும் ராமராஜன் படமும் போதும்; தீர்க்காயுசா வாழலாம்!" என்றேன் சந்தோஷமாக.

திடீரென்று பாட்டுச் சத்தம் பெரிதாகக் கேட்க தியேட்டர் வாசலில், மணலில் படுத்திருந்த பலர் அலறி அடித்துக் கொண்டு எழுந்தார்கள். நாங்களும் சைக்கிளை நிறுத்திவிட்டு டிக்கெட் கொடுக்கும் முன்னரே உள்ளே சென்றோம்.

வெளியூர்க்காரர்களுக்குத் தனி மரியாதைதான். சினிமா மணி, ஆப்பரேட்டர் அறையிலிருந்து கைகாட்டி எங்களை அழைக்க நாங்கள் மாடி ஏறி சினிமா புரஜெக்டர் இருந்த அறைக்குள் மிகுந்த மரியாதையோடு, கர்ப்பக்கிரகத்துக்குள்ளே நுழையும் பாமர பக்தர்கள்போல பயபக்தியோடு நுழைந்தோம்.

"இதோ பாருங்கடா, இதுதான் ஃபிலிம்பெட்டி. வட்ட வட்டமா இருக்கே, இதுக்குள்ளதான் நாம பாக்கிற சினிமாபடம் இருக்கு. நாலு பெட்டிய ஒண்ணாச் சேர்த்து உள்ள இருக்கிற ஃபிலிம் ரோலை ஒண்ணா ஒட்டி, பெரியரவுண்டா இந்தா மிஷின்ல மேல மாட்டிடுவாங்க கீழே பாத்தியா? சார், அந்தக் கீழ் பாக்ஸை கொஞ்சம் ஓப்பன் பண்ணுங்க." - நம்ம மணிதான்... என்னமா இங்கிலீஷ் பேசுறான் பாருங்க. எத்தனை இங்கிலீஷ் படம் பார்த்திருப்பான்...? என்ன அறிவு... என்ன ஞானம்... நாங்கள் எங்களுக்குள் பேசிக் கொண்டோம்.

(ரீல் சுற்றும்)

படம் : புதூர் சரவணன்

அதுதான் மிஸ்டேக்!



டாக்டர் தவறு செய்தால்
ரிசர்ச்!

முடி திருத்துபவர் தவறு
செய்தால்
புது ஹேர்ஸ்டைல்!

சமையல்காரர் தவறு செய்தால்
நியூ ரெசிபி!

பொறியாளர் தவறு செய்தால்
புது டிசைன்!

டைரக்டர் தவறு செய்தால்
ஆர்ட் ஃபிலிம்!

அரசியல்வாதி தவறு செய்தால்
புதுச் சட்டம்!

விஞ்ஞானி தவறு செய்தால்
அரிய கண்டுபிடிப்பு!

டெய்லர் தவறு செய்தால்
நவீன ஃபாஷன்!

டீச்சர் தவறு செய்தால்
தியரி!

பாஸ் தவறு செய்தால்
அது ஊழியர்கள் தவறு!

ஊழியர்கள் தவறு செய்தால்
அதுதான் மிஸ்டேக்!

லதா சேகர்



சுண்டல் பரிசு!

மடிப்புக் கலையாத சட்டை, பேண்ட், ஒட்ட வெட்டிய தலைமுடி, பளிச் சிரிப்பு... டைடல் பார்க் செல்லும் சாஃப்ட்வேர் இன்ஜினியர் போலத்தான் இருக்கிறார் ரமணன். ஆனால் இவர் ஒரு கவிதை பேசும் ஆன்மிகவாதி.

விசாகப்பட்டணத்தைச் சேர்ந்தவர். கவிதையிலும், ஆன்மிகத்திலும் உள்ள பெரு நாட்டத்தின் காரணமாக, 'தி ஹிந்து' பத்திரிகையின் மேலாளர் வேலையை ராஜினாமா செய்துவிட்டு, முழு நேரப் பிரசங்கியாகிவிட்டார்.

"பாரதி, என்னுடைய ஆதர்ஸம். வள்ளுவன், என் வழிகாட்டி" என்று சொல்லும் ரமணன், ஆன்மிக சொற்பொழிவுகளுடன், பவர் பாயிண்ட் புரோகிராம்களையும் நடத்துகிறார்.

"பாரதியையும் வள்ளுவரையும் ஆழ்ந்து படிக்கப் படிக்க, எனக்குள் ஒரு தேடல் உண்டானது. குருவைத் தேடி அலைந்தேன். எனக்கு அதிருப்தியே மிஞ்சியது. இறுதியில் விசாகப்பட்டணத்தில் உள்ள பீமுனி பட்டணத்தில் என் குருவைக் கண்டேன். 'சத்குரு ஸ்ரீ சிவானந்த மூர்த்தி' என்று அறியப்படும் அவர், போலீஸ்காரராக இருந்து, ஆன்மிகவாதி ஆனவர்" என்கிறார் ரமணன்.

- குரு என்பவர் ஏதோ ஆலோசகர் அன்று; நம் ஆன்மாவுக்கே ஆசான்.
- உள்ளம் திருந்தினால் ஊர் திருந்தும். அல்லாமல் கள்ளரோ காவல் கடைக்கு?
- நாம் எதை நாடுகிறோமோ, அதை எப்படி அடையலாம்? அதைக் கொடுப்பதன் மூலமே. அன்பு காட்டாமல் அன்பு கிடைக்காது. மகிழ்ச்சி தராமல் மகிழ்ச்சி வராது.
- எதை நாம் இன்பம், துன்பம் என்கிறோமோ, அவை பிரகிருதியின் தொடர்பால் நேரும் அனுபவங்கள். எனவே, இன்பந்தான் வேண்டுமென்று கோருவானேன். துன்பம் விழையுங்கள் என்று சொல்லவில்லை. பல்லை உடைக்கப் பயன்படுவது நீலக் கல்லானாலென்ன, வெள்ளைக் கல்லானாலென்ன?

இதுபோன்ற கருத்துகளை, எளிமையான கவிதை மூலம் தானே மெட்டமைத்துப் பாடுகிறார்.

'ஓடம் கரையேறி ஓட
வழியுமில்லே...
ஒருத்தனும் காலாலே சாட
வகையுமில்லே...
ஓட நாயமில்லே... உண்மையும்
அம்புட்டுதான்
சாடத் தேவையில்லே... சத்தியம்
இம்புட்டுதான்
ஓடக்காரனுக்கு ஒறவு துடுப்புதான்
பாடம் மறந்துபுட்டா படகு
தவிப்புதான்.'

"இந்தப் பாட்டை நான் என் நண்பர்களுடன் பெசன்ட் நகர் பீச்சில் உட்கார்ந்த சமயம் பாடிக் காட்டினேன். அதைப் பக்கத்தில் நின்று கேட்டுக் கொண்டிருந்த சுண்டல்காரர், 'இந்த ஓடம் எப்போ கரையேறுமோ தெரியலை சாமி' என்று சொல்லிக்கொண்டே ஒரு பொட்டலம் சுண்டலை அன்புடன் தந்துவிட்டு நகர்ந்தார். படித்த பண்டிதர்களுக்கானது மட்டுமில்லை ஆன்மிகம். அதைத் தேடும் எல்லோருக்குமானது" என்கிறார் ரமணன்.

இவரது 'கோடுகள் இல்லா உலகம்' என்ற கவிதைத் தொகுப்பு, புத்தகமாகவும், ஆடியோ சி.டியாகவும் வெளிவரவிருக்கிறது.

- டாலி

"ஒண்டிக்கு ஒண்டி மோதட்டும்!"

-செந்தில் பேட்டி

"இவ்ளோ நாள் அடிவாங்கினேன்... இனிமே மாரண அடி தரப் போகிறேன்" என்று வீரவசனம் பேசியிருக்கிறார் சமீபத்தில் ரத்தத்தின் ரத்தமாக மாறிய நகைச்சுவை நடிகர் செந்தில்..



என்ன சார்... திடுதிப்புன்னு அரசியலுக்கு வந்துட்டீங்க?

நான் ஏற்கெனவே ஒரு தீவிர எம்.ஜி.ஆர். விசுவாசி. இவ்ளோ நாளா படத்துல நடிச்சுக்கிட்டு இருந்ததால அரசியலுக்குள்ள நேரடியா வர முடியல. அவ்ளோதான். உங்களுக்கு உண்மையான காரணத்தைச் சொல்லட்டுமா? இந்த ஏழு கட்சி ஆளுங்களும், கூட்டுச் சேர்ந்துக்கிட்டு அம்மாவைத் திட்டுறது எனக்குக் கொஞ்சங்கூட பிடிக்கல. எப்படியாவது இதுக்கு, பதில் கொடுக்கணும்னு தான் அம்மா கட்சியில சேர்ந்திருக்கேன். மத்தபடி நான் பதவியில இருக்கணும், எம்.எல்.ஏ. ஆகணும்ங்கற ஆசையில அரசியலுக்கு வரல.

பதவி ஆசை இல்லாமலா கடலாடி தொகுதியில் போட்டியிட சீட்டு கேட்டிருக்கீங்க?

ஏங்க... கடலாடி என்னோட சொந்த ஊரு. அந்த ஊர்ல இருக்குற ஒவ்வொருத்தரும் என்னோட சொந்தக்காரங்க. அப்படித்தான் நான் அவங்ககிட்ட பழகிட்டு இருக்கேன். அதனாலதான் அந்தத் தொகுதியில சீட்டு கேட்டிருக்கேன். அம்மா சொன்னா அந்தத் தொகுதியில நிப்பேன். இல்லன்னா வெறும் தொண்டனாவே கட்சிக்கு வேலை பார்ப்பேன்.

இப்ப அரசியலுக்கு வர்ற நீங்க உட்பட நடிகர்கள் பலரும் ஜாதியப் பின்னணியோட வர்றது சரியா?

நான் இந்த ஜாதின்னு யார்கிட்டயும் சொல்றது கிடையாது. நான் சினிமாவுல நடிச்சு, ஒரு நல்ல நகைச்சுவை நடிகர்னு ரசிகர்களால, பொது மக்களால பாராட்டப்பட்டு, அவங்ககிட்ட நெருக்கமானவன். அதனால ஜாதியை வைச்சு செந்திலைப் பார்க்கறது இல்ல. மத்தவங்களைப் பத்தி எனக்குத் தெரியாது. எனக்கு ஜாதிப் பின்னணி இருக்குன்னு சொல்லவே இல்ல.

அந்த எண்ணம் இல்லாமலா, தேவர் இனத்தைச் சேர்ந்த கார்த்திக், விவேக்கை உங்கள் குல தெய்வ வழிபாட்டு மேடையில் உட்கார வைச்சீங்க?

முருகன் கோயில் கும்பாபி

ஷேகத்துக்கு கார்த்திக்கையும், விவேக்கையும் கூட்டிக்கிட்டுப் போனது உண்மைதான். ஆனா அதுக்கும் ஜாதிக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. எங்க ஊர் கிராமத்து மக்களுக்கு இது மாதிரி சினிமா நடிகர்களைப் பார்த்தா ரொம்ப சந்தோஷமா இருக்கும். அதனால கூட்டிக்கிட்டுப் போனேன். அவ்வளோதான்.

கார்த்திக்கோடு நேதாஜி விழாவில்கூட கலந்துக்கிட்டீங்க. ஆனா அவரோட கட்சியில் சேராம அ.தி.மு.க.வில் சேர்ந்துட்டீங்களே?

நேதாஜி ஒரு பொதுவான தலைவர். அவர் நிகழ்ச்சியில கார்த்திக் என்ன... யார் வேணும்னாலும் கலந்துக்கலாம். ஆனா கார்த்திக் போயி கருணாநிதியைச் சந்திச்சது தப்பு. அது எனக்கு கொஞ்சங்கூட பிடிக்கல. அதனாலதான் உடனே நான் அம்மா கட்சியில சேர்ந்துட்டேன்.

கலைஞரை மேடையில் ரொம்பவே திட்டறீங்களே!

ஆமாமா! இவ்ளோ நாளு சினிமாவுல அடிவாங்கிக்கிட்டு இருந்தேன். இனிமே கருணாநிதிக்கு என்னோட பேச்சால மரண அடி தரப்போறேன்னு சொன்னேன். பின்ன என்னங்க? அம்மா எது செஞ்சாலும் பாயாசத்துல உப்பு இல்ல. சாம்பார்ல சர்க்கரை இல்லன்னு குறை சொல்லிக்கிட்டே இருக்காரு. கேபிள் டி.வி. விஷயத்துல மக்களுக்கு நல்லது பண்ணின அம்மாவுக்கு எதிரா பேசிக்கிட்டு இருக்காரு. மக்களுக்காக சுமங்கலி கேபிளை விட்டுத்தர மனசில்ல கருணாநிதிக்கு.. இவரு உண்மையிலேயே மாவீரன்னா ஒண்டிக்கு ஒண்டி தேர்தல்ல மோதணும். ஏழு பேரைக் கூட்டிகிட்டு வர்றாரு. அதான் எனக்குக் கோபம்.

இதையெல்லாம் ஒரு காமெடியனான நீங்க சொன்னா மக்களிடம் எடுபடுமா?

காமெடியன்தானே ஜனங்களை மனம்விட்டுச் சிரிக்க வைக்கறான். அம்மா நிறைய திட்டங்களை ஜனங்களுக்குத் தந்திருக்காங்க. இலவச மின்சாரம், இலவச சைக்கிள், இலவச புத்தகம், விவசாயிகள் கடன் தள்ளுபடின்னு ஏகப்பட்டது செஞ்சுருக்காங்க. இதையெல்லாம் ஒரு காமெடியனான என்னால மக்கள்கிட்ட சொல்ல முடியும். அது எடுபடும்!

- முராரி

லாலுவின் பிஸினஸ் டெக்னிக்!



லாலுபிரசாத், தம் மகனிடம் திருமண பேச்சு எடுக்கிறார்...

லாலு : பேட்டா, என் சாய்ஸ்படி திருமணம் செய்து கொள். உனக்கு ஒரு பெண் பார்த்திருக்கிறேன்.

மகன் : அதெல்லாம் முடியாது. நானேதான் செலக்ட் பண்ணிப்பேன்.

லாலு : பெண் யார் தெரியுமா? அம்பானி வீட்டுப் பெண்.

மகன் : .... அப்படியா? எனக்கு ஓ.கே.!

லாலு, முகேஷ் அம்பானியிடம் ...

லாலு : உங்கள் பெண்ணுக்கு ஒரு ஏ-கிளாஸ் வரன் வந்திருக்கு...

முகேஷ் : ஆனா... என் மகள் ரொம்பவும் சின்னவளாச்சே!

லாலு : நான் சொல்ற பையன் உலக வங்கியில் வைஸ்-பிரெஸிடெண்ட்...

முகேஷ் : அப்படின்னா சரி... முடிச்சுடலாம்...

கடைசியாக லாலு, உலக வங்கியின் தலைமை அதிகாரியிடம்...

லாலு : எனக்குத் தெரிந்த நல்ல பையன் இருக்கிறான். உங்க கம்பெனியில் வைஸ் பிரெஸிடெண்டாக வைச்சுக்குங்க.

அதிகாரி : எங்களிடம் ஏகப்பட்ட வி.பி.க்கள் இருக்காங்களே.


லாலு : இந்தப் பையன் யார் தெரியுமா? அம்பானி வீட்டு மருமகன்.

அதிகாரி : முன்னாலேயே சொல்லக் கூடாதா...? எனக்கு டபுள் ஓ.கே.!

கற்பனை - **எல்.எஸ்.**

இப்போ லேட்டஸ்ட்டா இந்தியாவுல இறக்கை கட்டிப் பறக்குற பஞ்ச் டயலாக் என்ன தெரியுமா!

யாரெல்லாம் ஐஸ்வர்யா ராயை லவ் பண்ணுறாங்கங்கறது முக்கியமில்ல! ஐஸ்வர்யா ராய் யாரை லவ் பண்ணுறாங்கங்கறதுதான் முக்கியம்! பருவநிலை அப்பப்போ மாறிக்கிட்டே இருக்குற மாதிரி ஐஸ்வர்யா ராயோட லவ்வரும் மாறிக்கிட்டே இருக்காங்க! சல்மான்கான் - அது ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி. விவேக் ஓபராய் - அது ரெண்டு மாசத்துக்கு முன்னாடி. அபிஷேக்





பச்சன் - அட இவர்தாம்பா லேட்டஸ்ட்! பிப்ரவரி 5, அபிஷேக் தன்னோட முப்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடினாரு. அங்க அபிஷேக், அமிதாப், ஐஸ் இவர்களை- சல்மான், வி.ஓபராய், நம்ம வடிவேலு, சிம்பு எல்லோரும் சந்திச்சாங்களாம்! என்ன நடந்திருக்கும்? ரொமாண்டிக் லுக்கோட வாசிங்க!

அமிதாப்: வெல்கம் டு மை பேட்டா'ஸ் பர்த்டே ஃபங்ஷன் சல்மான்! நல்லா இருக்கீங்களா?

சல்மான்: ஏதோ நம்பிக்கைக்கு மேல டபுள் இருக்கறதாலதான் தாக்குப் பிடிச்சுக்கிட்டிருக்கேன்.

(ஐஸ் காதல் பற்றி போதிய விவரங்கள் தெரியாத வடிவேலு அங்கே வருகிறார்)

வடிவேலு: அமிதாப் அண்ணே, வணக்கம்னே! இது யாரு பக்கத்துல? பெரிய பாடிகட்டோட இருக்காரு. ஆத்தாடி பழநி படிக்கட்டு மாதிரியில்ல இருக்கு உடம்பு!

சல்மான்: யார் மேன் நீ? இருட்டுக்கு மேக்-அப் போட்ட மாதிரி வந்திருக்க?

அமிதாப்: சல்மான், இந்த மேன் தான் தமிழ்நாட்டையே இளிக்க வைக்கிற வடிவேலு.

வடிவேலு : ஏ அப்பு, நீதான் சல்மானா! ஆமா ஐஸ்வர்யா ராய் எப்படி இருக்காக? எப்போ கலியாணம்? நமக்கு ஒரு

இன்விடேஷன் அனுப்பணும். (சல்மான் சுட்டெரிப்பது போல முறைக்க)

ஆமா, ஏதோ மானைச் சுட்டிகளாமே, நம்ம ஐஸ்தான் சீதா, நீங்க ராமருன்னு நினைச்சு மான் வேட்டைக்குப் போனீகளா... ஹைய்யோ ஹைய்யோ! எனக்கு சிப்பு சிப்பா வருது.

(சல்மான் முஷ்டியை ஓங்க, வடிவேலுவை பாதுகாப்பாக வேறு இடத்துக்கு அனுப்பி வைக்கிறார் அமிதாப்)

வடிவேலு : என்ன இது, பச்சப்புள்ளத்தனமா இல்ல இருக்கு. நம்மள பாத்த உடனே எல்லாருக்கும் அடிக்கணும்னு தோணிடும் போல. அம்மாடி, அந்த ஆள்கிட்ட அடிவாங்கினா ஆயுசுக்கும் மாவுக்கட்டோடதான் அலையணும். ஆமா, அது யாரு கையில ஐஸோட போட்டோவை வைச்சு ஃபீல் பண்ணிக்கிட்டிருக்கிறது?

(விவேக் ஓபராய் அருகில் சென்று, அவர் முகத்தைத் தூக்கிப் பார்த்து)

வடிவேலு: ஏங்கண்ணு ஒன்னை எங்கிட்டோ பாத்திருக்கேனே? ஆங்... ஞாபகம் வந்திடுச்சி. சுனாமி கூட தமிழ்நாட்டுக்கு வந்த குவேக் கோபராய்தான நீ!

ஓபராய்: (விசும்பிக் கொண்டே) நா... நா... விவேக் ஓபராய்.

வடிவேலு : ஏதோ ராயி. நீ ஏன் பொம்பள ராய் படத்தை வைச்சு மூக்கு சிந்திக்கிட்டிருக்க? லவ்ஸா?

ஓபராய் : அவ... அவ... என்னை...

வடிவேலு: ஏய்... ம்ஹூம்... அழப்படாது... அண்ணன் இருக்கேன்ல! ஏய்... மூச்... சிரி... நல்லா இன்னும் நல்லா... சிரி! (ஓபராய் குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பிக்க)

வடிவேலு : ஆங் புரிஞ்சு போச்சு. அந்த பாடி பில்டர் தடியன், உங் காதலுக்கு குறுக்க நிக்கிறானா? நீ 'உம்'முன்னு ஒரு வார்த்தை சொல்லு.



ஐ.ரா.ரு.ஏ. கட்சி!

–முகில்

அவனை உங்கால்ல வந்து விழ வைக்கிறேன். நாங்கள்லாம் அருவாவ எடுத்ததில்ல... எடுத்தா... (அப்போது அங்கே சல்மான், ஓபராயைத் தேடி வர)

ஓபராய்: மேரே தோஸ்த். நல்லா இருக்கிங்களா? உங்களை மாதிரி நாலு பேர் இருக்கறதை நினைச்சுத்தான் நான் என் மனசைத் தேத்திக்கிட்டு

இருக்கேன்.

சல்மான்: என்ன பண்ண? போன்ல கூட பேச முடியல. மிரட்டுறேன்னு சொல்லுறாங்க. எனக்குத் தொண்டை கட்டியிருந்துச்சுன்னு சொன்னாக் கூட நம்ப மாட்டேங்கிறாங்க.

ஓபராய்: *(வடிவேலுவைக் காட்டி)* இவன்... இந்த ஆளு... உங்களைப் பத்தி...

வடிவேலு: *(மனதுக்குள்)* ஆஹா... ஒன்னுகூடிட்டாங்கப்பா... இதுக்கு மேல இங்க நின்னா நிக்கறதுக்கு காலு இருக்காது. பேசுனா பேசறதுக்கு நாக்கு இருக்காது. *(அங்கிருந்து ஓடுகிறார். சிறிது தூரத்தில் ஐஸும், அபிஷேக்கும் ஜோடியாக டான்ஸ் ஆடியபடியே வருகிறார்கள்.)*

வடிவேலு: *(அதிர்ச்சியாகி, மனசுக்குள்)* ஆத்தாடி, இது என்ன கூத்து. 'குரோர்பதி - I', 'குரோர்பதி - II' முடிஞ்சு போச்சு. 'குரோர்பதி - III' ஆரம்பிக்கப் போகுதுன்னு சொன்னாய்ங்க. அதானா இது. *(அமிதாப்பிடம்)* ஆமா 'குரோர்பதி III'-ஐயும் நீங்கதான் நடத்துறீங்களா?

அமிதாப் : ஆமாம்.

வடிவேலு : கருமம் கருமம்.

அமிதாப் : என்னது?

வடிவேலு : இல்ல அதான் தர்மம்னு சொன்னேன்.

(ஐஸ் - அபிஷேக்கிடம் சென்று) ஏம்மா ஐஸு கடைசியா இந்த ஆன்ஸரை லாக் பண்ணிட்டியா?

ஐஸ்: தெரியல.

வடிவேலு: அப்ப ஃபிப்டி - ஃபிப்டியா?

ஐஸ்: புரியல.

வடிவேலு : அப்ப யார்கிட்டயாவது போன்ல உதவி கேக்கணுமா?

ஐஸ்: முடிவு பண்ணல.

(வேகமாக சிம்பு அங்கே வருகிறார்.)

சிம்பு: ஹே...ஹே... ஐஸ். நான் தான் மன்மதன் சிம்பு.

வடிவேலு: வந்து பண்ண வந்துட்டான்யா... வந்துட்டான்.

அபிஷேக் : ஹே... என்ன என்ன... என்ன வேணும்?

சிம்பு : ஐஸ்தான் வேணும்.

ஐஸ் : வாட்?

சிம்பு : ஹே ஐஸ்... லுக் ஹியர். தமிழ்நாட்டுல மணிரத்னம், ஷங்கருக்கு அப்புறம் நீங்க நினைக்கிற பெஸ்ட் டைரக்டர் லிஸ்ட்ல இருக்கிறது நான் மட்டும்தான். ஸோ, நீங்க மன்மதன், வல்லவனுக்கு அப்புறமா, நான் அடுத்து டைரக்ட் பண்ணப்போற 'ரோமியோ' படத்துல என் கூட ஜோதிகா மாதிரி குத்துப் பாட்டுக்கு டான்ஸ் ஆடணும்.

ஐஸ்: நோ சான்ஸ். இந்த வேலையை எல்லாம் சானியா மிர்ஸா கூட வைச்சுக்கோங்க.

சிம்பு : இப்ப நீங்க ஓ.கே. சொல்லாட்டி மொட்டை மாடியில இருந்து குதிச்சுருவேன். இது எங்க டாடி வளர்க்குற தாடி மேல சத்தியம்.

(சிம்பு மொட்டை மாடிக்கு ஓடுகிறார். அதற்குள் தூரத்தில் சல்மான், ஓபராய் தலைமையில் பெருங்கூட்டம் ஒன்று திரண்டு வருகிறது. உடன் ரஜினிகாந்தும் வருகிறார் அமிதாப், அபிஷேக், ஐஸ் எஸ்கேப் ஆகின்றனர்.)




வடிவேலு: என்னய்யா இது... ஊரே ஒன்னு கூடி வருதப்பா.. நம்மளைத்தான் அடிக்க வர்றாகளா! என்னான்னு தெரியலையே... கூட ரசினி வேற வர்றாரு. கையில ஏதோ போர்டு வேற வைச்சிருக்காரு. என்ன எழுதிருக்கு? 'ஐஸ்வர்யா ராயை நம்பி ஏமாந்தோர் கட்சி'. ஆத்தாடி எலெக்சன்ல நிப்பாக போல இருக்கே. வுட்டா நம்மையும் அவிங்க கட்சிக்குள்ள அடிச்சு சேத்துருவாங்க. ஓடுறா கைப்புள்ள. ஓடுறா! ஓடுறா!

தொம் தொம் விருப்பம்!

சிருங்காரம்' படத்தின் குறுந்தகடை மிகுந்த ஆவலுடன் கேட்டேன். காரணம் சாரதா ராமநாதன் இயக்கியுள்ள நடனத்தைப் பற்றிய இந்தப் படத்துக்கு இசை அமைத்திருப்பவர் வயலின் மேதை லால்குடி ஜெயராமன். இசைப் பிரபலங்கள் பாம்பே ஜெயஸ்ரீ, சௌம்யா, ஓ.எஸ். அருண், இஞ்சிக்குடி சோதரர்கள், ஜி.ஜே.ஆர். கிருஷ்ணன், நவீன், பாலசாய் என்று 'கவர்' கவனத்தை ஈர்க்கிறது. யாரேனும் இன்றைய திரைப்பட இசையை எதிர்பார்த்து இந்தத் தகடை வாங்கினால் நிச்சயம் ஏமாந்து போவார்கள்; லால்குடியின் இசை என்ற எதிர்பார்ப்புடன் வாங்குபவர்களும் ஏமாந்துதான் போவார்கள். பதினான்கு உருப்படிகள் என்றாலும் பல பாடல்கள் திரும்ப ஒலிக்கின்றன. சாரங்கா ராக 'ஏனிந்த மாயமோ?' ஜெயஸ்ரீயின் குரலில் பின்னணி இசையுடனும் சௌம்யா குரலில் பின்னணியில்லாமலும் வருகிறது. நாட்டுப்புறப் பாடலைப் பாடியுள்ளவர்கள் மகராஜன் - அருண். மூன்று பருவங்கள் என்ற இசைக் கோவைதான் அம்ருதவர்ஷிணி, வசந்தா ராகங்களில் துள்ளி வருகிறது.

லால்குடியின் பதவர்ணங்களும், தில்லானாக்களுமே நடனத்திற்காக எடுத்த பிரத்யேகப் படப் பாடல்களை விடத் துடிப்புடன் இருக்குமே?

தெளிவான, அழகான பாடல் வரிகள் மிகப் பெரிய ஆறுதல். சிருங்காரத்தின் இசையில் மெலிதான சிருங்காரம்தான் இருக்கிறது.


• லால்குடி ஜெயராமன்


• ஓ.எஸ். அருண்

சாலைகளில் செல்லும்போது உங்கள் அருகில் நிற்கும் சில கார்களிலிருந்து (ஓட்டுபவர்கள் 'இன்றைய இளைய தலைமுறையாக இருந்தால்) 'தொம் - தொம்' என்ற ஒரேவிதமான ட்ரம் ஓசைகள் வருவதைக் கவனித்ததுண்டா? அவை யாவும் இன்றைய 'இந்தி பாப்' ராப்களாகத்தானிருக்கும். திரைப்படப் பாடல்களுக்கும் மேலாகவே இத்தகைய 'பாப் ஆல்பங்கள்' இந்தியில் வெளியாகின்றன.

ஷான் என்ற இளைஞரின் வித்தியாசமான, சற்று மிருதுவான குரலில் சில முந்தைய ஆல்பங்கள் கேட்ட (ரசித்த) பிசகில் சமீபத்தில் வந்துள்ள 'திஷ்நாகி' என்ற அவர் ஆல்பத்தை வாங்கியது பிசகு. இந்த ஆல்பத்தின் சிறப்பம்சம் என்னவெனில் 'ஷானின் குரலை'யும் இந்திப் பாடல் வரிகளையும் கிதார், டராம்போன், ட்ரம்பெட், ஸாக்ஸ், வயலின், வியோலா, ஸெல்லோ, டபிள்பாஸ், உபரி குரல்கள் இந்தக் கலரவங்கள் மத்தியில் காதைத் தீட்டிக்கொண்டு தேடி எடுக்க வேண்டியிருக்கிறது. 'கோயிதோ ஹோகா தேராதில்' மட்டும் விதிவிலக்கு. இந்த 'அழகான இசையை' அமைத்திருப்பவர் ரஞ்சித் பரோட் என்பவராம். நீங்கள் இன்றைய இளைஞரா? இந்திப் பாடல்களை இங்கிலீஷ் பாடல்களாகக் கேட்க விருப்பமா. அப்படியானால் 'திஷ்நாகி'யை பத்தோடு பதினொன்றாக வாங்கி ரசியுங்கள்! இல்லையா எடுங்கள் ஓட்டம்.

- ஜோதிஸ்வரூபிணி


• 'சிருங்காரம்' படத்திலிருந்து

ஜிகினா! அப்படின்னா?

காம்பியரர் + சீரியல் நடிகை என இரட்டை அவதாரம் எடுத்திருக்கிறார் சன் மியூஸிக் மகேஸ்வரி. ரவிவர்மா ஓவியம் போன்ற முகம், சுத்தமான தமிழ் உச்சரிப்பு, பண்பான காம்பியரிங் போன்றவை இவரது இன்னபிற சிறப்புகள்...

சன் மியூசிக்கில் தேர்வானது...

நான் சரியான வாயாடி. இந்தத் தகுதி போதாதா?

சீரியல்?

தானா வந்த வாய்ப்பு. நம்புங்க. 'தீர்க்க சுமங்கலி' சீரியல்ல இதுவரைக்கும் ஒரு ஸீன்கூட நான் அழுதது கிடையாது. (அப்போ எப்படி சீரியல் நடிகை?)

ராசி

அம்மா பியூட்டி பார்லர் நடத்துறாங்க. அக்கா சரும ஸ்பெஷலிஸ்ட். என்னோட நடமாடும் பியூட்டி பார்லர் இவங்கதான்!

பொழுதுபோக்கு

ஒரு சீரியல் விடாம பார்க்கறதுதான். ஒருநாள் பார்க்காட்டியும் தலை அரிச்சுக்கிட்டே இருக்கும்.

பிடித்த படம்

'அலைபாயுதே'. மொத்த படத்திலயும் பிடிச்சது கடைசி ஸீன்தான். (எது, டைட்டில் கார்டு வரிசையா வருமே அதுவா?)

பலவீனம்

கோபம் வந்தால் கையில கிடைச்சதைத் தூக்கி வீசுவேன். குறிப்பா செல்ஃபோனை ஈஸியா வீச வரும்.

ஹோம்வொர்க்

நேயர்கள்கிட்ட கேள்வி கேக்கறதுக்காகவே வண்டி வண்டியா ஜி.கே, விடுகதைப் புத்தகங்கள் வாங்கி மனப்பாடம் பண்ணிட்டிருக்கேன்.

கனவு நடிகர்

நம்ம சஞ்சய் ராமசாமிதான். ஆமா, சாருக்கு 'ஜில்லுன்னு ஒரு காதல்' படத்துல இரண்டு ஜோடியாமே. பார்றா, அதுல ஒரு வாய்ப்பு எனக்குக் கொடுத்திருக்கலாம்ல. ('ஜோ'வை வெளியேற்றலாமா?)

அடுத்தது..

எம்.பி.ஏ. படிக்கணும். நிறைய சீரியல்கள் (அழாம) நடிக்கணும்.

- ச.நா.கண்ணன்

அட்டை, படம் : **அஜித்**



• மகேஸ்வரி



மெல்லிழைகளால்
பின்னிய ஆடைகள்.!
கல்யாண் சாரீஸின்
உள்ளம் மயங்கும்
புத்தாடைகள்..!
கல்யாண்
சாரீஸ்
100 அடி ரோடு, கோவை. போன் : 2529993
— பட்டின் தலைநகரம் —

யோகாவுடன் ஒ



'கலைஞருக்கு ஒரு தேசிகாச்சார்... திருமாவளவனுக்கு ஒரு ஜக்கி வாசுதேவுன்னா எனக்கு ஓர் ஆச்சார்ய கரம்வீர்'னு சொல்லி அவர்கிட்ட யோகா கத்துக்க ஆரம்பிச்சிருக்காருப்பு நம்ம விஜயகாந்து... ஆச்சார்ய கரம்வீர் யோகா படிப்புல டிரிபிள் எம்.ஏ. வாங்கினவராம். இவரு கேப்டனுக்கு மட்டுமில்லாம, மத்த பொதுமக்களுக்கும் யோகாவைக் கத்துக் கொடுக்கணும்னு ஆசைப்பட்டிருக்காரு. 'அப்படியா... அதுக்கு நாங்க ஏற்பாடு பண்றோம்'னு டால்மியா க்ரூப் கம்பெனி யோகா கேம்ப்-க்கு ஏற்பாடு பண்ணியிருக்காங்க.

சென்னை, பச்சையப்பாஸ் கிர
வுண்ட்ல இந்த கேம்ப் நடக்குதுன்னு
எனக்கு நியூஸ் வந்துச்சு. சரி... நம்ம
கேப்டனோட, யோகா கேப்டன் என்ன
தான் சொல்லித் தர்றார்னு தெரிஞ்சுக்க
கலாம்னு ஒரெட்டு போயிட்டு வந்தேன்
ஓப்பன் ஏ.சி. போட்ட மாதிரி சும்மா ஜிலு
ஜிலுன்னு இருந்துச்சுப்பு கிரவுண்டு..
பின்ன காலங்காத்தால அஞ்சு மணிக்கு
கத்திரி வெயிலா அடிக்கும்னு கேட்கறீங்
களா? அதுசரி. ஜனங்கல்லாம் சரியா
அஞ்சு மணிக்கு மிலிட்ரி கணக்கா
அசெம்பிளாயிட்டாங்க. குருஜியும்
கரெக்ட் டைமுக்கு வந்திட்டாரு
பார்க்கிறதுக்கு மனுஷர் ரொம்ப
அமைதியா இருந்தாரு. இங்கிலீஷ்லதான்
பேசினாரு. புரிஞ்சவங்க அவர் சொல்ற
மாதிரி யோகா செய்ய ஆரம்பிச்சாங்க
''ஏன்... ஒரு மொழிபெயர்ப்பாளரை

ஏற்பாடு பண்ணியிருக்கலாமே''ன்னு அங்
நின்னுட்டிருந்த ஒருத்தருகிட்ட கேட்டேன்
அவரு பேரு வினோத் கோபால்
டால்மியா க்ரூப்
வேலை செய்
றாராம். ''குரு
பேசி, அதை
பிறகு மொழி



• கேப்டனின் யோகா குரு



பெயர்ப்பாளர் பேசினா குழப்பமாவும் இருக்கு. நேரமும் வீணாகுது. அதனால யோகா செய்து காட்டறதுக்காகவே இரண்டு பேரை மேடையில ஏற்



ஜில் மார்னிங்!

பாடு பண்ணியிருக்கோம். மொழி புரியாதவங்க அவங்கள பார்த்து செய்துடலாம்"னு விளக்கம் கொடுத்துட்டு ஜூட்.

விடியற்காலைல குட்டீஸ்கள்லயிருந்து ரிடையர்ட்ஸ் வரைக்கும் ரொம்ப ஆர்வமா, பயபக்தியோடு யோகா செய்யறாங்க. அதுக்காக எதுவும் ஸ்பெஷல் காஸ்ட்யூம் போடாம ரொம்ப கேஷுவலா வந்தாங்க. அங்கங்க சின்னச் சின்ன சுவாரஸ்ய சம்பவங்களும் கண்ணுல பட்டுச்சுப்பு.

தொந்தியும் தொப்பையுமா ஒருத்தரு மண்டிபோட ரொம்ப சிரமப்பட்டு திடீர்னு கீழே வழுக்கி விழ, பக்கத்திலிருந்த குட்டீஸ் ஒண்ணு, 'கெக்கே... பிக்கே...'னு சிரிச்சு அவர் மானத்தை வாங்கிடுச்சு. இதனால கொஞ்ச நேரம் ஏரியாவே கலகலப்பாயிடுச்சு. ஆனா அதையும் கண்டுக்காம சில பேர் கர்மசிரத்தையா 'நரசிம்மராவ் ரேஞ்சுக்கு' முகத்தை வைச்சுட்டு யோகா செஞ்சாங்க.

தன் முன்னால யோகா பண்ணின ஒரு குட்டிப் பையனை திடீர்னு மேடைக்குக் கூப்பிட்ட குருஜி, அவனுக்கு ஒரு டெஸ்ட் வைச்சாரு. பையன் நல்ல குண்டு. கொழுகொழு முகத்தோட இரைக்க இரைக்க மேடைக்கு வந்து அவர் சொன்ன ஆசனத்தையெல்லாம் செய்து காட்டி கைத்தட்டலை ஒட்டுமொத்தமா அள்ளிட்டான். இன்னொரு பொண்ணு ரொம்ப உற்சாகமா பிஸியா இருந்துச்சு. அவங்ககிட்ட போயி, "எப்படி இருந்துச்சு யோகா அனுபவம், என்னென்ன கத்துக்கிட்டீங்க?"ன்னு கேட்டேன்.

"யோகா செய்றது மட்டுமில்ல காலைல சீக்கிரமா எழுந்திருக்கிறதுகூட ஒரு வித்தியாசமான அனுபவமாதான் இருந்துச்சு. இங்க ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான டெக்னிக்குகளைச் சொல்லித் தர்றார். இதையெல்லாம் தொடர்ந்து செய்யணும். அதுதான் ரொம்ப முக்கியம்"னு சொல்லிட்டு பேரைச் சொல்லாம கிளம்பிடுச்சுப்பு.

அவங்க செய்றதைப் பாக்கறப்போ எனக்கே யோகா கத்துக்கணும்னு ஆசை வந்துச்சு... என்ன கேப்டன் என்னையும் கூட்டிட்டுப் போறீங்களா?

படங்கள் : ராஜன்



ஒற்றன்

ஒரு ரூபாய் தொலைத்தொடர்பைப் பாராட்டலாமா?



• பி.ஆர்.ஓ பேச்சு!

● **ஏ.எஸ்.யோகானந்தம், கலிங்கியம்**

? தி.மு.க. தலைவர் கருணாநிதியின் ஆலோசனைகளும் வைகோ-ராமதாஸ் போன்றோரின் உதவியும் தான் தாம் திறமையாக நாட்டை முன்னேற்றப் பாதையில் நடத்த உதவுவதாக பிரதமர் சொல்கிறாரே?

! கூட்டணி நிர்ப்பந்த வசனம். தாம் பிரதமர் மட்டுமல்ல; கூட்டணியின் பி.ஆர்.ஓவும் கூட என்று நிருபித்துள்ளார்.

● **ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்**

? அரசியலில் எனது போட்டியைச் சமாளிக்கவே ஜெயலலிதா பல்வேறு திட்டங்களை அறிவித்து வருகிறார் என்று விஜயகாந்த் கூறியுள்ளாரே?

! தேர்தல் ஃபுட்பால் விளையாட்டுப் போட்டியில் குறி பிசகாமல் கேப்டன் அடித்த கோல்!

● **வி.எம். ஸ்ரீனிவாஸன், வந்தவாசி**

? சாராயம் குடித்தால் குடல் வெந்துபோகிறது; புகையினால் கான்சர், மாரடைப்பு; தகாத உடலுறவினால் எய்ட்ஸ் என்று தண்டனை கொடுக்கும் நீதிபதியான இறைவன், சிந்தனையில் தவறு செய்வோருக்குத் தண்டனை கொடுக்காமல் விட்டு விட்டாரே!

! தவறான சிந்தனையின் விளைவாகத்தானே தகாத செயல்களே தோன்றுகின்றன! எனவே சிந்தனை - செயல் இரண்டுக்கும் சேர்த்துத்தான் தண்டனை.

● **கே.எஸ்.வெங்கடேஷ், மதுரை-12**

? நடிகர்கள் கிரிக்கெட்



• ஒற்றை பிரச்னை!

ஆட ஆரம்பித்து விட்டார்கள். விளையாட்டு வீரர்கள் நடிக்க வந்தால்?

! விளம்பர உலகில் அவர்களுடைய ரேட் ஏறிக் கொண்டே போகும் வேகத்தைப் பார்த்தால், அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க படத் தயாரிப்பாளர்களுக்குக் கட்டுப்படியாகாது.

● **எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்**

? 'முதல்வர் யார்?' என்ற கல்கி

தலையங்கம் தொடர்பான முரசொலியின் கேள்விக்கு என்ன பதில் கூறுகிறீர்கள்?

! முரசொலி தனக்கு வாடிக்கையான விதத்தில் எழுதியிருக்கிறது. ஆனால்...

1. வரலாற்றின் ஒரு காலகட்டத்தில் நிலவிய சூழலுக்கு ஏற்ப கையாளப்பட்ட வழி முறைகள் இன்னொரு காலகட்டத்தின் மாறுபட்ட சூழலுக்குப் பொருந்தாது. இன்றைய பிரத்யட்ச - யதார்த்த நோக்கு தேவை.

2. கலக புத்தி கல்கிக்கு இல்லை. கலகம் ஏற்கெனவே ஆரம்பமாகி விட்டது; நடந்து கொண்டிருக்கிறது. அதை முறியடிக்க வழி கூறியது கல்கி. ஏற்பதும் ஏற்காததும் தி.மு.க. தலைவரின் உரிமை. அதற்காக கல்கிக்கு உள்நோக்கம் கற்பிப்பது தவறு.

● **அ.பேச்சியப்பன், ராஜபாளையம்.**

? சாலைப் பணியாளர்கள் தி.மு.க.வுக்கு வோட்டுப் போடுவார்களா? அ.தி.மு.கவுக்கு வோட்டுப் போடுவார்களா?

! முன்பு பட்டினி கிடந்ததை நினைத்தால் தி.மு.கவுக்கு.

இன்று இலை போடப்பட்டிருப்பதைப் பார்த்து, சாப்பாடு வரும் என்று நம்பினால் அ.தி.மு.கவுக்கு.

● **ஆர். ராஜதுரை, சீர்காழி**

? ஐதராபாத் காங்கிரஸ் கூட்டத்து விருந்தினர்களுக்கு 350 ஆடுகள், 2500 கோழிகள் கொல்லப்பட்டு பிரியாணி தயாரிக்கப்பட்டதாமே! இதுதான் காந்திக்கு காங்கிரஸ் தரும் பரிசா?

! அந்த ஒரு கொள்கையை மட்டுமா காங்கிரஸ் புறக்கணிக்கிறது...? இது காந்திஜியின் காங்கிரஸ் அல்ல. காந்தியுடன் சேர்ந்து காந்தியத்துக்கும் சமாதி கட்டிய காங்கிரஸ்.

● **ஆர். பிரகாஷ், பொன்மலை**

? ஆணின் குறைந்தபட்ச திருமண வயதை 21லிருந்து 18ஆகக் குறைக்க மத்திய அரசு உத்தேசித்து வருகிறதாமே?

! தேவையற்ற வேலை. 21 வயதே போதிய பக்குவத்தைத் தரவில்லை என்பது சமூகத்தில் நாம் அன்றாடம் காணும் காட்சி. நல்ல வேலையில் அமர்ந்து, குடும்ப பாரத்தைத் தாங்க உறுதி பூண்டு, ஓரளவு சேமித்து வைத்துக் கொள்ள குறைந்தபட்சம் 21 வயது வரை ஆகும்.

● **வி.எம்.செய்யது புகாரி, அதிராம்பட்டினம்**

? காங்கிரஸின் வளர்ச்சிக்குத் தகுந்த தொகுதிகளைக் கேட்போம் என்கிறாரே ஜி.கே.வாசன்?

! கலைஞரிடம் அறுபது கேட்பதாகத் தகவல். கட்சி வளர்ச்சிக்கு இது அதிகம். 'கோஷ்டி வளர்ச்சிக்கு' இது குறைவு!

● **டி.ஜெய்சிங், கோவை - 1** ●

? நிறைய சீட் கொடுக்கும் கூட்டணியில் இருப்போம் என்று நினைக்கும் கட்சிகளை, மக்கள் முழுமையாக

• ரேட்டோ ரேட்!





நீங்கள் கேட்டவை -தராசு

ஏற்றுக் கொள்வார்களா?

! இந்த பேரங்களையும் அதன்பின் உள்ள அரசியல் அவலங்கள், இழுபறிகளையும் மக்கள் கவனிக்காமல் இருக்க மாட்டார்கள்; ஆனால், வோட்டு அணி அடிப்படையில்தான் அமையுமே யொழிய அதனுள் அடங்கியிருக்கும் கட்சிகளின் அடிப்படையில் அல்ல.

● **டி.கே.சுப்பிரமணியன், திருப்பரங்குன்றம்**

? மக்கள் ஓரளவுக்குத் தெளிவான நிலையிலிருந்தாலும் யாருக்கு வோட்டளித்தால் நன்மை பயக்கும் என்பதைக் கோடிட்டுக் காண்பிக்க வேண்டியது நடுநிலை பத்திரிகைகளின் கடமையல்லவா?

! இன்று அவ்வாறு வழி காட்டுவதை நடு நிலை என்று ஏற்கும் பக்குவம் அரசியல்வாதிகளுக்கும் இல்லை; வாக்காளர்களுக்கும் இல்லை. ஒரு பயனும் தராத விளக்கெண்ணெய் விமர்சனங்களே நடுநிலை என்று தவறாகக் கருதப்படுகின்றன. எனினும், கல்கி தனது உறுதியில் தொடரும்.

● **பா.ஜெகன், சென்னை-93**

? பாலாற்றில் அணை கட்டியே தீருவோம் என்று ஆந்திர விவசாய அமைச்சர் ரகுவீரா ரெட்டி கூறியது குறித்து?

! "அணை கட்டும் ஐடியாவே இல்லை" என்று சமீபத்தில் ஆந்திர முதல்வர் பேசியதற்கு மாறாக இப்போது அம்மாநிலத்தில் பல குரல்கள் எழுந்து வருகின்றன.



• கோப முரசு!



• தொகுதிக்குத் தகுதி!



• கேப்டனின் கோல்!

சரியான நேரத்தில் தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளது.

● **வீர.செல்வம், பூம்புகார்** ❑

? தொலைத் தொடர்பில் இந்தியா முழுமைக்கும் ஒரே ஒரு ரூபாய். பாராட்டலாமா?

! பயனீட்டாளரில் நீங்கள் எப்படிப்பட்டவர் என்பதைப் பொறுத்தே பாராட்டு அமையும்; அல்லது முணுமுணுப்பு பெருகும். டெலிஃபோன் வாடகை கட்டணம் உயர்ந்துவிட்டது. இலவச ஃபோன் கால்கள் ரத்தாகிவிட்டன. எனவே, சிக்கனமாக ஃபோனைப் பயன்படுத்துவோருக்கு நஷ்டம். அடிக்கடி, நிறைய பேசுவோருக்கு ஆதாயம்.

● **ஆர். ரங்கநாதன், சென்னை-17**

? இந்தியாவிலேயே சிறந்த முதியோர் இல்லத்துக்கான பரிசு பெற்ற இல்லம் சென்னையில் உள்ளது என்பது நமக்குப் பெருமை தானே?

! விருதினைப் பெற்ற அளவில், இன்றைய யதார்த்த நோக்கில் பெருமை.

பாரம்பரியம், பண்பாடு என்ற நோக்கில் சிறுமை.

ஒவ்வொரு இல்லமுமே சிறந்த முதியோர் இல்லமாகவும் திகழ வேண்டும் என்பது இலட்சிய நோக்கு.

○

❑ ரூ. 100/- பரிசு பெறுபவர் :

வீர. செல்வம்,
பல்லவனம், பூம்புகார் (அஞ்)
சீர்காழி - 609 105

*** ரூ. 50/- பரிசு பெறுபவர் :**

டி.ஜெய்சிங்,
'அருண் டிரேடர்ஸ்'
855, ரங்கேகவுடர் வீதி,
கோவை - 641 001

சின்னான் (அறிக்கைச்) செய்திகள்

நிரந்தர கிரிக்கெட்டர்!

"நீங்க ஏன் சார் கல்யாணமே பண்ணிக்கல?" - இப்படி ஒரு கேள்வியை என்னை மாதிரி லொள்ளு புடிச்ச ஒருத்தன், நம்ம அப்துல் கலாம்கிட்ட கேட்க என்ன பதில் சொல்றதுன்னே தெரியாம திகைச்சு நின்னாராம் அவர். சிங்கப்பூர்ல ஒரு மாணவன் கேட்டானாம் இந்தக் கேள்வியை. சில நிமிஷங்கள் கழித்து, "உங்கள் அனைவருக்கும் நல்ல வாழ்க்கைத் துணை அமைய வாழ்த்துகள்"னு சமாளிச்சாராம் கலாம்.

"தற்போதைக்கு ஒரு டிராமா பார்ப்பது போல தமிழகத்தில் சட்டசபைத் தேர்தலுக்குத் தயாராகும் பிற கட்சிகளின் நடவடிக்கைகளையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறோம்"னு பா.ஜ. கட்சியோட மேலிட உறுப்பினர் ஒருத்தர் குரல் விட்டிருக்காரு. ஹைய்யோ ஹைய்யோ... பொதுமக்களான நாம தினமும் எல்லா நேரமும் இந்தியாவுல எல்லாக் கட்சிகளும் நடத்துற மெகா சீரியல்களையே பார்க்குறோம். தங்களைத் தாங்களே கிண்டல் பண்ணி காமெடி பண்ணுறாங்கப்பா!

விதி ஒருத்தனை எப்படி வேணும்னாலும் துரத்தித் துரத்தி துவம்சம் பண்ணும்னு கண்கூடா நாம பார்த்துத் தெரிஞ்சுக்கறதுக்காகவே வாழுறாரு கங்'புலி'. 'அடுத்த மேட்சல கண்டிப்பா நான் டீம்ல இருப்பேன்'னாரு. அப்புறமா, 'அடுத்த சீரீஸ்ல நான் டீம்ல இருப்பேன்'னாரு. 'எப்படியாவது உலகக் கோப்பை [illegible] உள்ளே நுழைஞ்சிருவேன்'னு லேட்டஸ்ட்டா டில்லியில சொல்லியிருக்காரு கங்'புலி'. அவரோட அடுத்த அறிக்கை என்னவா இருக்கும்னு தெரியுமா, 'இந்தியாவின் நிரந்தர கிரிக்கெட்டர் நான் மட்டும்தான்!"

"நானும் எங்கப்பா மாதிரி டாக்டராகணும்னு ஆசைப்பட்டேன்"

"அப்படியா, உங்கப்பா டாக்டரா?"

"இல்ல அவரும் ஆசைப்பட்டாரு"ன்னு ஒரு பழைய ஜோக் உண்டு. "என் தந்தையின் கனவை நிறைவேற்றுவதே என் லட்சியம்!"னு தேவேகவுடாவின் மகனாகிய கர்நாடக முதல்வர் குமாரசாமி சொல்லியிருக்காரு. பரம்பரை பரம்பரையா லட்சிய புருஷர்களா வாழுறாங்க போல!





அமரர் கல்கி

அவலட்சணப் போட்டி!

'அழகுப் போட்டி' என்ற பெயரால் ஓர் அவலட்சணப் போட்டி சமீபத்தில் சென்னை மாநகரில் நடந்தது. பாரத நாட்டின் பழைமையான பண்பாட்டுக்கும், தர்மத்துக்கும் நம் மக்களின் இரத்தத்தில் ஊறிப் போயிருக்கும் நல்ல உணர்ச்சிகளுக்கும் விரோதமான இந்த அழகுப் போட்டியில் சில முக்கியமான பிரமுகர்களும் 'ரஸிகர்'கள் என்று பாராட்டப்பட்டவர்களும் கலந்து கொண்டிருப்பதைக் குறித்து மிகவும் வருந்துகிறோம்.

பெண்கள் எல்லாரையும் தாய்மார்களாகவும் சகோதரிகளாகவும், பராசக்தியின் வடிவங்களாகவும் கருதிப் போற்றும் பண்பாடு பாரத நாட்டின் பண்பாடு. தாய்மார்களையும் சகோதரிகளையும் கொண்டு வந்து பலர் பார்க்க, நிறுத்தி, முன்னழகும் பின்னழகும் பார்த்து, அலங்காரங்களை எடை போட்டு அளவிட்டு, அழகுப் போட்டி நடத்துவது எவ்வளவு அருவருக்கத்தக்க விஷயம்?

தமிழ்நாட்டின் மரபுக்கு முற்றும் விரோதமான இந்த அழகுப் போட்டியை நினைத்துத் தமிழ் மக்கள் எப்படி ஆத்திரப்படாமல் இருக்க முடியும்?

கல்விப் பயிற்சி, கைத்தொழில் திறமை, தன்முயற்சி முதலிய துறைகளில் போட்டி நடத்தினால், அப் போட்டியில் ஈடுபடுகிறவர்களின் வளர்ச்சிக்கு உதவியாயிருக்கலாம். போட்டியிட்டுக் கொண்டு அவர்கள் முன்னேற முயற்சிக்கலாம்.

ஆனால் அப்படிப்பட்ட அறிவியல் கல்வித் துறைகளிலே கூடப் போட்டிகளும் பரிசுகளும் வைக்கக் கூடாது என்று சில அறிஞர்கள் கூறுகிறார்கள். சிலருக்குப் பரிசு கிடைப்பதால் மற்றவர்களுக்கு அசூயையும் மனச் சோர்வும் ஏற்படுமே தவிர, அதனால் ஊக்கமும் வளர்ச்சியும் ஏற்படாது என்று அவ்வறிஞர்கள் கூறுகிறார்கள்.

அழகு என்பது கடவுள் அளிக்கும் வரப்பிரசாதம்; மனிதர்களால் வளர்த்துக் கொள்ளக் கூடியது அல்ல. பின், அழகுப் போட்டி வைப்பதின் பொருள் என்ன? அழகுப் போட்டி பரிசைக் கடவுளுக்கு அல்லவா கொடுக்க வேண்டும்? அல்லது அந்த அழகிகளின் பெற்றோர்களுக்கு அல்லவா அளிக்க வேண்டும்?

பெண்களிலே அழகுப் போட்டி வைப்பது என்றால் அதற்குத் தராதரம் எப்படிக் கண்டுபிடித்து முடிவு செய்வது? பட்டணங்களிலே சிவப்பு நிறத்துடன் மேனி மினுக்குகிற பெண்கள்தான் அழகிகளா?

"திருநெல்வேலிச் சீமையில் மறக்குலத்து ஏழைச் சகோதரிகள், மலைக்காடுகளில் விறகு பொறுக்கிக் கட்டிக் கொண்டு நடந்து வருவார்கள். அவர்களுடைய அழகிற்குக் கால் தூசி பெற மாட்டார்கள் பட்டணத்தில் பவுடர் பூசி வளரும் நாகரிக மங்கையர்கள்" என்கிறார் ஒரு நிருபர். இதிலிருந்து அழகை எடை போட்டுப் பார்ப்பது எவ்வளவு கடினமான வேலை என்று புரிகிறது.

ஏற்கெனவே நம் நாட்டில் உள்ள கோளாறுகள் போதாவென்று, இந்த அநாகரிக, அநாசார, அவலட்சண - அழகுப் போட்டியை யாரோ சில புண்ணியவான்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு நாட்டு மக்கள் சிறிதும் ஆதரவு காட்ட மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

- கல்கி, 16.3.1952

மங்கையர் மலர்

திருமண மலர்

பயனடைந்தவர்கள் பாராட்டு!





லாவண்யா - மகாதேவன்



டி.வி.ராஜாமணி,
வடசேரி,
நாகர்கோயில்

எனது மூத்த மகளின் திருமணம், மங்கையர் மலரின் திருமண விளம்பரம் மூலமாகத்தான் நடைபெற்றது. நான் கொடுத்திருந்த விளம்பரத்திற்கு, நிறையவே வரன்கள் வந்தன. அவற்றுள் எங்களுக்கு ஏற்ற வரனை தேர்ந்தெடுத்து, திருமணத்தையும் விமரிசையாக நடத்தினோம். இல்லங்களில் 'திருமணம்' என்ற 'ஒளிவிளக்கை' ஏற்ற, ஒரு தூண்டுகோலாக '**மங்கையர் மலர்**' அமைவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். தங்களின் நற்பணி தொடர்ந்து நடைபெற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம். **திருமணங்கள் மங்கையர் மலரால் நிச்சயிக்கப்படுகின்றன** என்பது எங்கள் நேரடியான அனுபவம்.

இப்படிக்கு,
டி.வி. ராஜாமணி,
வடசேரி, நாகர்கோயில்

மங்கையர் மலரின்
திருமண மலர்
இணைப்பிதழ்

வரும் மார்ச் 2006 இதழிலிருந்து திருமண மலர்ப் பகுதி, மங்கையர் மலரின் தனி இணைப்பிதழாக வெளிவருகிறது.

திருமண மலர் புதிய விளம்பரக் கட்டண விவரங்கள்

(ஏப்ரல் மாத இதழிலிருந்து)

முதல் முப்பது வார்த்தைகளுக்கு	ரூ. 500/-
30க்கு மேற்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும் தலா	ரூ. 15/-
வண்ணத்தில் 'ஹைலைட்' செய்ய கூடுதல் கட்டணம்	ரூ. 100/-

1"X1" அளவில் வண்ணப் புகைப்படத்துடன் 30 வார்த்தைகள் அடங்கிய விளம்பரத்துக்கு ரூ. 800/-

(அதிகப்படியான வார்த்தை ஒவ்வொன்றுக்கும் ரூ. 15/-)

வண்ணப் புகைப்படத்துடன் விவரங்கள் அடங்கிய அரை பக்க Profile விளம்பரம் ரூ. 2500/-

வாசகர்களும், விளம்பரதாரர்களும், இந்தப் புதிய மாற்றங்களைப் பயன்படுத்திக் கொண்டு, பலனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம். - *பதிப்பாசிரியர், மங்கையர் மலர்.*

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.

